கார்த்திக் ஆல்டோ தொடர் - 3

மலையமருநிலம்

Sen Balan

மாயப் பெருநிலம்

சென் பாலன்

அட்டைப்பட வடிவமைப்பு : ராஜா ராமன்
எடிட்டிங் : இரவிசங்கர் அய்யாக்கண்ணு
புகைப்படம் : அ. கலைச்செல்வன்

COPYRIGHTS

Copyright © 2019 by Sen Balan

All rights reserved. No part of this publication may be reproduced, distributed, or transmitted in any form or by any means, including photocopying, recording, or other electronic or mechanical methods, without the prior written permission of the author, except in the case of brief quotations embodied in critical reviews and certain other noncommercial uses permitted by copyright law.

Author's Home Page : www.senbalan.com
Like & follow https://www.facebook.com/writersenbalan/
Email: senbalan@gmail.com

DEDICATION

IN MEMORY OF WAR VICTIMS

பொறுப்புத் துறப்பு:

இக்கதையில் வரும் நிகழ்வுகளும், பெயர்களும் கற்பனையே. கடந்தகால / நிகழ்கால நிகழ் வுகளையோ, மனிதர்களையோ நினைவுபடுத்தும் படி இருந்தால் அது முற்றிலும் தற்செயலானதே. மேலும் உங்களுக்கு நினைவாற்றல் அதிகம் என வும் கொள்ளலாம்.

நன்றி

சீத்தலைச் சாத்தனார் (மணிமேகலை)
குடபுலவியனார் (புறநானூறு)
ஷோபா சக்தி (கப்டன், விலங்குப் பண்ணை, பாக்ஸ்)
கதிர் ஆர்.எஸ் (நாகப்பட்டினம்)
ராஜு. செல்வமணி (புகைப்பட உதவி)
பரங்கிமலை வாசகர் வட்டம்
ஆதிரா பாலன் (தனது iPad'ஐ கொடுத்து உதவியவர்)

முன்கதை

12/02/2018 - திங்கள்கிழமை, காலை 7.00 மணி.

இரண்டாவது குறுக்குத் தெரு, மறைமலை நகர், நாகப்பட்டினம்.

காலை வேளையிலேயே அழைப்பு மணி அல றியது. பால் பாக்கெட்டின் நுனியை நறுக்கிப் பாத்திரத்தில் ஊற்றிக் கொண்டிருந்த பேராசிரியர் ஜெயச்சந்திரன் யாராக இருக்கும் என யோசித்த வாறே தனது வேலையைத் தொடர்ந்தார். யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும், அதற்காகப் பால் பாக்கெட்டை நறுக்கிப் பாதி ஊற்றிக் கொண்டு இருக்கும் போது எப்படி நடுவில் வைத்து விட்டுச் செல்ல முடியும்? அதற்குள் பொறுமை இல்லாமல் அழைப்பு மணி மீண்டும் அலறியது. முதலில் இதன் இணைப்பைத் துண்டித்து வைக்க வேண்டும்.

57 வயதைத் தாண்டிவிட்ட பேராசிரி யர் ஜெயச்சந்திரன் தலையில் நரைத்த முடிகள் அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத் திருந்தன. உயரம் ஆறு அடிக்கு இரண்டு அங்கு லம் குறைவு. அதற்கேற்ற எடையுடன் ஆரோக்கி யமாக இருந்தார். உடல்நலம் சீராகப் பேணப்படு வதற்கு உடற்பயிற்சிதான் காரணம் என நம்பினார்.

ஆனால் மற்றவர்களோ இவருக்குத் திருமணம் ஆகாததுதான் காரணம் என நம்பினர்.

கதவைத் திறந்து பார்த்தார். இரு இளைஞர்கள் நின்று கொண்டிருந்தனர். ஒருவன் சவரம் செய்யப் படாத தாடி மீசையுடனும், மற்றொருவன் அதற்கு நேர்மாறாக மழுங்கச் சிரைத்த முகத்துடனும் இருந்தனர். தாடி வைத்தவன் பேச ஆரம்பித்தான். மீசை இல்லாதவன் புன்முறுவல் பூத்த முகத்துடன் பேராசிரியரைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அய்யா வணக்கம். நாங்க மதுரை அமெரிக்கன் கல்லூரி தமிழ் முதுகலை மாணவர்கள். லெமூரியா கண்டம் பற்றி ஒரு கருத்தரங்கம் ஏற்பாடு செய்தி ருக்கோம். அது பற்றி உங்களிடம் பேசனும்"

"உள்ள வாங்க."

இருவரும் உள்ளே வந்தனர். அவர்களுக்கு நாற் காலியைக் காட்டிவிட்டு சிங்கிள் சீட்டர் சோஃபா வில் அமர்ந்தார் ஜெயச்சந்திரன்.

"யாரு அமெரிக்கன் காலேஜ் அலெக்ஸ் அனுப்பு னாரா?"

"ஆமா அய்யா. அவர் தான் அனுப்புனார். எங்க துறைத் தலைவர்தான். நீங்க லெமூரியா பற்றி ஆராய்ச்சி பண்றதா சொன்னார்."

மீசை இல்லாதவன் இன்னும் ஒரு வார்த்தை கூட பேசவேயில்லை. தாடி வைத்தவன்தான் பேசிக் கொண்டே இருந்தான். ஆனால் இருவருக்குமே முப்பது வயது இருக்கும் போல. இந்த வயதிலுமா படிக்கின்றனர்?

"எப்பவும் அலெக்ஸ் எனக்கு இன்ஃபார்ம் பண்ணு வார். இந்த தடவை கால் கூட பண்ணல."

"அலெக்ஸ் அய்யா கொஞ்சம் பிஸி. தமிழ்ச்சங்க கருத்தரங்க தயாரிப்பில் இருக்கார்"

"ஓ!! என்னைக்கு கருத்தரங்கம்? நான் தேதி இருக்கான்னு பார்க்கனும். என்னோட ஆராய்ச்சியும் கடைசி கட்டத்தில் இருக்கு."

"இன்னைக்குத்தான்"

இதுவரை பேசாமல் சிரித்த முகத்துடன் அமர்ந்திருந்த மீசை இல்லாதவன், முகத்தில் எந்த வேறுபாடும் காட்டாமல் அதே கனிவுடன் கூறினான்.

"என்ன தம்பி விளையாடுறீங்களா? இன்னைக்கா?"

“ஆமா. இன்னைக்குத்தான்.”

“ரெண்டு பேரும் ஆளே சரியில்லையே. முதல்ல கிளம்புங்க.” ஜெயச்சந்திரன் எரிச்சலானார்.

"கிளம்புறோம் அய்யா. ஆனால் நீங்களும் எங்க கூட வந்துதான் ஆகனும்." மீசை இல்லாதவன் கூறிக்கொண்டே எழுந்து, பேராசிரியர் ஜெயச்சந்திரனின் வலது முழங்கையைப் பற்றினான்.

இதை எதிர்பாராத பேராசிரியர், அவன் கைக்குள் சிக்காத வண்ணம் முழங்கையை மடக்கிச் சுண்டினார். எதிர்பாராமல் “ணங்” என்று மீசை இல்லாதவனின் நடு மூக்கில் ஜெயச்சந்திரனின் முழங்கை இடித்தது. இரண்டே வினாடிகளில் மூக்கில் இருந்து இரத்தம் வடிந்தது.

இரத்தத்தைப் பார்த்தவுடன் ஆத்திரமடைந்த அவன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து ஜெயச்சந்திரன் தலையில் வைத்தான்.

ஆனால் மற்றவர்களோ இவருக்குத் திருமணம் ஆகாததுதான் காரணம் என நம்பினர்.

கதவைத் திறந்து பார்த்தார். இரு இளைஞர்கள் நின்று கொண்டிருந்தனர். ஒருவன் சவரம் செய்யப் படாத தாடி மீசையுடனும், மற்றொருவன் அதற்கு நேர்மாறாக மழுங்கச் சிரைத்த முகத்துடனும் இருந்தனர். தாடி வைத்தவன் பேச ஆரம்பித்தான். மீசை இல்லாதவன் புன்முறுவல் பூத்த முகத்துடன் பேராசிரியரைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அய்யா வணக்கம். நாங்க மதுரை அமெரிக்கன் கல்லூரி தமிழ் முதுகலை மாணவர்கள். லெமூரியா கண்டம் பற்றி ஒரு கருத்தரங்கம் ஏற்பாடு செய்தி ருக்கோம். அது பற்றி உங்களிடம் பேசனும்"

"உள்ள வாங்க."

இருவரும் உள்ளே வந்தனர். அவர்களுக்கு நாற் காலியைக் காட்டிவிட்டு சிங்கிள் சீட்டர் சோஃபா வில் அமர்ந்தார் ஜெயச்சந்திரன்.

"யாரு அமெரிக்கன் காலேஜ் அலெக்ஸ் அனுப்பு னாரா?"

"ஆமா அய்யா. அவர் தான் அனுப்புனார். எங்க துறைத் தலைவர்தான். நீங்க லெமூரியா பற்றி ஆராய்ச்சி பண்றதா சொன்னார்."

மீசை இல்லாதவன் இன்னும் ஒரு வார்த்தை கூட பேசவேயில்லை. தாடி வைத்தவன்தான் பேசிக் கொண்டே இருந்தான். ஆனால் இருவருக்குமே முப்பது வயது இருக்கும் போல. இந்த வயதிலுமா படிக்கின்றனர்?

"எப்பவும் அலெக்ஸ் எனக்கு இன்ஃபார்ம் பண்ணு வார். இந்த தடவை கால் கூட பண்ணல."

"அலெக்ஸ் அய்யா கொஞ்சம் பிஸி. தமிழ்ச்சங்க கருத்தரங்க தயாரிப்பில் இருக்கார்"

"ஓ!! என்னைக்கு கருத்தரங்கம்? நான் தேதி இருக்கான்னு பார்க்கனும். என்னோட ஆராய்ச்சியும் கடைசி கட்டத்தில் இருக்கு."

"இன்னைக்குத்தான்"

இதுவரை பேசாமல் சிரித்த முகத்துடன் அமர்ந்திருந்த மீசை இல்லாதவன், முகத்தில் எந்த வேறுபாடும் காட்டாமல் அதே கனிவுடன் கூறினான்.

"என்ன தம்பி விளையாடுறீங்களா? இன்னைக்கா?"

“ஆமா. இன்னைக்குத்தான்.”

“ரெண்டு பேரும் ஆளே சரியில்லையே. முதல்ல கிளம்புங்க.” ஜெயச்சந்திரன் எரிச்சலானார்.

"கிளம்புறோம் அய்யா. ஆனால் நீங்களும் எங்க கூட வந்துதான் ஆகனும்." மீசை இல்லாதவன் கூறிக்கொண்டே எழுந்து, பேராசிரியர் ஜெயச்சந்திரனின் வலது முழங்கையைப் பற்றினான்.

இதை எதிர்பாராத பேராசிரியர், அவன் கைக்குள் சிக்காத வண்ணம் முழங்கையை மடக்கிச் சுண்டினார். எதிர்பாராமல் “ணங்” என்று மீசை இல்லாதவனின் நடு மூக்கில் ஜெயச்சந்திரனின் முழங்கை இடித்தது. இரண்டே வினாடிகளில் மூக்கில் இருந்து இரத்தம் வடிந்தது.

இரத்தத்தைப் பார்த்தவுடன் ஆத்திரமடைந்த அவன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியை எடுத்து ஜெயச்சந்திரன் தலையில் வைத்தான்.

அப்போது தான் ஜெயச்சந்திரனுக்கு நிலைமை யின் விபரீதம் புரிந்தது. ஐந்து வருடங்களாக அவர் ஒவ்வொரு நொடியும் எதிர்பார்த்துக் காத்திருந்த ஆபத்து இப்போது வந்து விட்டது. துப்பாக்கியைப் பார்த்த அந்த நொடியில் உணர்ந்து கொண்டார், இரகசியம் கசிந்துவிட்டது, இனி தப்பிப்பது கடினம் என்று.

அது புரிந்த அடுத்த நொடி அவரது உடல் இல குவானது. எதிர்ப்பைக் கைவிட்டார். பேராசிரியர் ஒத்துழைப்பைக் கண்டவுடன் இருவரும் துரித மாகச் செயல்பட்டனர். பேராசிரியரின் காரிலேயே அவரை ஏற்றினர்.

"முருகா சீக்கிரம் கிளம்பு" என்றான் மீசை இல்லா தவன்.

அத்தியாயம் -1

12/02/2018 - திங்கள்கிழமை, காலை 8.00 மணி

கடந்த ஒரு வாரமாகப் பணிச்சுமை குறை வாக இருப்பதைப் போல உணர்ந்தான் கார்த்திக் ஆல்டோ. வழக்கமான திங்

கள்கிழமைக்கான பரபரப்பு இல்லை. அவனது அலுவலகமே "அம்மா" இல்லாத ஆளுங்கட்சி போல ரிலாக்ஸ் மோடில் இருந்தது.

"என்ன சார், ஆச்சரியமா இருக்கு. பத்து நாளா கேஸ் எதுவும் வரல. பழைய கேஸ் டாக் குமெண்ட்ஸ் தான் தயார் பண்றோம். ரொம்ப நாளைக்கு பிறகு ரிலாக்ஸா இருக்கு. ஏதாவது பெட்டி கேஸ் வந்தால் கூட பரவாயில்லை போல" பேசிக்கொண்டே உதவி ஆய்வாளர் திரு என் கிற திருநாவுக்கரசு, ஆல்டோவின் அறைக்குள் நுழைந்தார்.

திரு, இருக்கையில் அமர்வதற்கு முன் கார்த்திக் ஆல்டோ பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகத்தைப் பார்த்துவிடுவோம்.
இந்திய ஒன்றியத்தின் குடிமைப் பணித் தேர்வுக ளில் தவறியபின், தமிழ்நாட்டின் க்ரூப் ஒன் தேர் வின் மூலம் டிஎஸ்பியாக தேர்ச்சி பெற்றான். ஐக்கிய முடியரசின் (United Kingdom) எடின்பரோ பல்க

லைக்கழகத்தில் கிரிமினாலஜி ஹானர்ஸ் முடித்து தற்போது மாநில குற்றத் துப்பறிவு மற்றும் தடுப் புப் பிரிவு ஒருங்கிணைப்பாளராக உள்ளான். மாநி லம் முழுவதும் இருந்து சிக்கலான, தீர்க்கப்படாத வழக்குகள் இவர்களது பிரிவிற்கு மாற்றப்படும். கார்த்திக் ஆல்டோவின் உயரதிகாரி மாநில குற்றத் தடுப்பு இயக்குநர் அருள்மொழி. உதவி ஆய்வாளர் கள் திருநாவுக்கரசு, கோபிநாத் ஆகியோர் கார்த் திக் ஆல்டோவின் நம்பிக்கைக்குரிய அதிகாரிகள், அவனது குழுவில் தற்போது பணியாற்றுகிறார்கள். (கார்த்திக் ஆல்டோ, அருள்மொழி, திருநாவுக்க ரசு, கோபிநாத் ஆகியோர் பற்றிய மேலும் சில விவ ரங்கள் Detective Karthick Aldo Series புத்தகங் களான சிரம் தர விரும்பு, பரங்கிமலை இரயில் நிலையம் ஆகியவற்றில் உள்ளன. விரும்புவோர் படிக்கலாம்.)

திருநாவுக்கரசு இருக்கையில் அமர்ந்தார்.

"சும்மா இருங்க திரு. நமக்கு கேஸ் இல்லைனு தெரிஞ்ச உடனே கேஸை கொடுப்பார் அருள் மொழி சார். கேஸ் இல்லாம இருப்பதை விட பெட்டி கேஸை விசாரிப்பது இன்னும் கொடுமை" ஆல்டோ பேசி முடிக்கும் போது அவனது அலைப் பேசி ஒலித்தது.

"அருள்மொழி சார் தான். மூக்கு வேர்த்துருச்சு போல"

அலைபேசியின் தொடுதிரையில் பச்சை நிற வட் டத்தை வலப் பக்கம் இழுத்துவிட்டு அழைப்பை ஏற்றான்.

"வணக்கம் சார்" உடல்மொழி தன்னால் அட்டேன் சனுக்கு சென்றது.

"வணக்கம் கார்த்திக். இப்ப ஏதாவது முக்கிய வழக் கில் விசாரணை போகுதா?"

"இல்லை சார். எல்லா வழக்கும் முடிச்சாச்சு. இப்ப பரங்கிமலை இரயில் நிலைய கேஸில் டாக்கு மெண்ட் ஒர்க் தான் போகுது"

"நைஸ். நல்லதாப் போச்சு. ஒரு விஜபி கேஸ். சின்ன கேஸ் தான். கவர்னர் கார் மேல எதிரே வந்த கார் உரசிட்டு நிற்காம போய்டுச்சாம். கவர்னர் கார் ஸைடு மிரர் உடைஞ்சிருச்சாம். அது யார் கார்னு கவர்னருக்கு தெரிஞ்சாகனுமாம். நீங்க தான் இன் வெஸ்டிகேட் பண்ணனும். மேலிட பிரசர்."

"ஷ்யூர் சார். சென்னையிலா?"

"இல்ல கார்த்திக். நாகப்பட்டினம். உங்களுக்கு டிடெயில் மெயில்ல அனுப்பியிருக்கேன்."

"ஓகே சார். இப்ப பார்க்கிறேன்."

"ஓகே கார்த்திக். முடிந்தால் நேரில் கூட போய் விசாரிங்க. கவர்னர் மேட்டர். சென்ட்ரல் கவர் மெண்ட் இன்ட்டரஸ்டட்."

"ஐ வில் டேக் கேர் சார்."

அலைபேசி இணைப்பைத் துண்டித்துவிட்டுத் திருவை மேலும் கீழும் பார்த்தான் ஆல்டோ.

"திருநாவுக்கரசு, உங்க பேரைக் கருநாவுக்கரசு என மாத்துங்க. நீங்க எதிர்பார்த்த பெட்டி கேஸ் வந்திருச்சு."

"சார், டைரக்டர் ஆபிஸில் இருந்து மெயில் வந்திருக்கு" என கத்தையாக சில காகிதங்களைக் கொண்டுவந்தார் உதவி ஆய்வாளர் கோபிநாத்.

அத்தியாயம் -2

2007 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் ஒரு நாள். அடுத்து வரப்போகும் மழைக் காலத்தை எதிர்பார்த்து இலங்கைத் தீவின் வடபகுதியில் இருந்த மரங்கள் தங்கள் உயிரைத் தக்க வைத் துக் காத்திருந்தன. ஆள்நடமாட்டமே இல்லாமல் அமைதியாக இருந்த ஏ9 நெடுஞ்சாலையில் டப் டப் எனச் சத்தத்தைக் கிளப்பிய படி மண்ணெண் ணெய்யில் இயங்கும் இரண்டு ஹோண்டா எம் 90 ரக இரு சக்கர வாகனங்கள் நான்கு பெண்களைச் சுமந்து கொண்டு விரைந்து சென்று கொண்டிருந் தன. கிளி நொச்சியில் இருந்து பரந்தன் செல்லும் சாலை அது.

பொதுவாக, பகல் நேரங்களில் பிரதான சாலைக ளைப் பாவிப்பது ஆபத்தானது. கிளைமோர் கண் ணிவெடித் தாக்குதலை எதிர்கொள்ள நேரலாம். எந்நேரமும் கண்காணித்தபடி பறக்கும் சிங்கள விமானப்படை விமானங்கள் குண்டு வீசுவதற் கும் அதிக வாய்ப்பு இருக்கும். அதனால் பிரதான சாலையைத் தவிர்த்து அதற்கு இணையாக அடுத் துள்ள காட்டுப்பகுதிகளில் நுழைந்து செல்வது தான் போராளிகளுக்கு வழக்கம். ஆனால் இன்று அப்படிச் செல்வது ஆபத்தாகவே முடியும். அடர்ந்த காட்டுப்பகுதி வெயில் காலத்தின் விளைவால் காய்ந்த சருகுகளாலும் இலைகளாலும் நிரம்பி உள்ளது. அடிக்கின்ற வெயிலுக்கு ஒரு சிறு தீப் பொறி போதும் நான்கு பேரையும் உயிருடன் எரித்

துவிடும். சிந்திக்கக் கூட அவகாசம் கிடைக்காது. இந்தச் சூழ்நிலையில் பிரதான சாலைகளைப் பாவிப்பது தான் ஆபத்து குறைவானது.

இந்த நான்கு பேர் குழுவை வழிநடத்தி அழைத்துச் செல்பவள் தாரணி.

அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செந்தி 40 கிலோ தங் கத்தைப் பத்திரமாகத் தமிழ்நாட்டில் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கூறிய போது, இயக்கத் தில் இருந்த அனைவரும் கடல் மார்க்கமாகப் பல இடங்களையும் யோசித்தனர்.

போர்நிறுத்தம் அதிகாரப் பூர்வமாக முறித்துக் கொள்ளப்பட்ட பின் ஏற்பட்ட தொடர் தோல்வி களால் இயக்கத்தின் கடல் ஆதிக்கம் முடிவுக்கு வந்துவிட்டது. இலங்கையின் நாலாபுறமும் அசுர பலத்துடன் சிங்கள கடற்படை சுற்றிச் சுற்றி வந்தது. அவர்களை மீறி ஒரு துரும்பைக் கடத்துவது கூட நிகழாத காரியம்.

தாரணிதான் நயினாத் தீவு திட்டத்தைக் கூறினாள். அவள் கூறியது இயக்கத்தில் அனைவருக்குமே அதிர்ச்சி அளித்தது. ஏனென்றால் நயினாத் தீவு இலங்கைக் கடற்படையின் வலிமை மிக்கதும் முக் கியமானதுமான ஒரு தளம். அங்கு இந்தச் செயலை செய்வது சிங்கத்தின் வாய்க்குள் தலையை விட்டு அதன் பல்லைப் பிடுங்குவது போன்ற ஒரு செயல்.

அத்தியாயம் -3

பேராசிரியர் ஜெயச்சந்திரனின் வெள்ளை நிற ஸ்விஃப்ட் கார் சென்னை நாகப்பட்டினம் சாலை யில் விரைந்தது. முருகன் பல வருடமாக கார் ஓட் டியிருந்தாலும் இது பழகாத கார் என்பதால் சிறிது தடுமாற்றம் ஏற்பட்டது. இருந்தாலும் தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு முடிந்த அளவு வேகமாக ஓட்டினான். வேகத்தடைகளில் கூட வேகத்தைக் குறைக்கவே இல்லை.

பேராசிரியருக்குத்தான் கஷ்டமாக இருந்தது. கார் வாங்கியதில் இருந்து சிறு கீறல் கூட விழாமல் பூவைப் போலப் பத்திரமாக வைத்திருந்தார். ஓர் இடத்தில் இரு சக்கர வாகனத்தை முந்தும் போது எதிர்புறம் வந்த காரில் உரசியது. அப்போதும் முரு கன் கண்டுகொள்ளாமல் ஓட்டினான், படுபாவி!!

“உயிரே போகப் போகுது இந்நிலையில் காரைப் பற்றிக் கவலைப்படுகிறோமே” என்ற நினைப்பு வந் தவுடன் மனதிற்குள் சிரித்தார். இருந்தும், காரைப் பற்றிய கவலை அவருக்குத் தீரவில்லை. அவரை எங்கே அழைத்துச் செல்கிறார்கள், என்பதை யூகிக்க முடியவில்லை.

இப்போதும் மீசை இல்லாதவன் புன்முறுவ லோடு அமர்ந்திருந்தான். இன்னும் லேசாக மூக் கில் இரத்தம் கசிந்தபடி இருந்தது. அவ்வப்போது துடைத்துக் கொண்டான். இவனை எங்கேயோ

பார்த்திருக்கிறோமே! இயக்கத்தின் உளவுப்படை யில் இருந்தவனா, இல்லை ஆர்மியா, பேராசிரி யர் யோசித்துக் கொண்டே வந்தார். பேராசிரியர் தன்னை உற்றுப் பார்ப்பதைக் கண்டதும் அவன் அதே சிரிப்புடன் தனது கால்சட்டை பாக்கெட் டில் கைவிட்டு ஒரு ஜிப்-லாக் கவரை எடுத்தான். வெகு ஜாக்கிரதையாக அதைப்பிரித்து உள்ளி ருந்த துணியை எடுத்தான். எதிர்பார்க்காத நொடி யில் அதைப் பேராசிரியரின் மூக்கில் வைத்து அழுத்தினான். பேராசிரியரின் உலகம் இருண்டது.

அருமையான உறக்கம்.

ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் தன்னை யாரோ எழுப்புவது போல உணர்ந்தார் பேராசிரியர். யார் தனது வீட்டினுள் நுழைந்து எழுப்புவது? கதவைத் திறந்து வைத்துவிட்டா உறங்கினோம்? ஒரு நொடி யில் படபடப்பானார். வாரிச் சுருட்டி எழுந்து சுற் றும் முற்றும் பார்த்தார். அது வீட்டின் படுக்கையறை இல்லை. அவரது கார். சுற்றிலும் காரிருள். அதே மீசை இல்லாத சிரித்த முகத்தைக் கண்டவுடன் தான் காலையின் நிகழ்வுகள் அவருக்கு நினை வுக்கு வந்தன. இது எந்த இடம், எத்தனை மணி எதுவும் அவருக்குப் புரியவில்லை. இறங்கும் படி கைகாட்டினான் மீசை இல்லாதவன். இருட்டுக் குள் மற்றொரு இன்னோவா கார் நின்றது. மீண்டும் அதனுள் திணிக்கப்பட்டார். மீண்டும் உறக்கம்.

அத்தியாயம் -4

"ஹலோ, நாகப்பட்டினம் வெளிப்பாளையம் போலீஸ் ஸ்டேஷன்?"

"ஆமா சார். நீங்க யார் பேசுறது?"

"சென்னையில் இருந்து கிரைம் டிடெக்சன் & ப்ரி வென்சன் கோஆர்டினேட்டர், டிஎஸ்பி கார்த்திக் ஆல்டோ பேசுறேன்."

"குட் மார்னிங் சார். வெளிப்பாளையம் இன்ஸ்பெக் டர் சிவப்பிரகாசம் பேசுறேன்."

"குட்மார்னிங் சார். டைரக்டர் ஆபிஸ்ல இருந்து கால் வந்தது. கவர்னர் கேஸ் விசயமா. என்ன பிரச் சனை சார்?"

"இன்னைக்கு காலையில், காரைக்கால் கவர்னர் தருண் லோதி மேடம் கார்ல போயிட்டு இருக்கும் போது எதிர வந்த ஒரு ஸ்விஃப்ட் கார் உரசிடுச்சு சார்."

"என்ன சார் சொல்றீங்க? காரைக்காலுக்கு எல் லாம் தனி கவர்னரா?""

"வேற கவர்னர்கள் பற்றி கதை எழுதுனா பிரச் சனை வரும்னு காரைக்கால் கவர்னர்னு எழுதிட் டார், ரைட்டர்"

"ஸ்டேஷன் ரைட்டரா?"

"இல்ல சார். இந்த கதையோட ரைட்டர். கொஞ்சம் பயந்த சுபாவம், பாவம்.”

"ஓ!! பரவாயில்லை சார். நீங்க கேஸ் பத்தி சொல் லுங்க."

"காரைக்கால் கவர்னர் தருண் லோதி மேடம், ஒரு விழாவிற்காக கோயம்புத்தூர் போய்கிட்டு இருந்தி ருக்காங்க. அப்ப எதிரே வேகமா வந்த ஸ்விஃப்ட் கார் உரசிடுச்சு சார். மேடம் கார்ல டிரைவர் சைட் ORVM உடைஞ்சிருச்சு. இடிச்ச கார் நிற்காம போயிடுச்சு. மேடம் டென்சன் ஆயிட்டாங்க."

"யாருக்கும் அடிபட்டதா சார்? பெருசா காயம்? மோட்டிவ் எதாவது இருக்கா சார்? கவர்னரை அட் டாக் பண்ற மாதிரி?"

"இல்ல சார். மோட்டிவ் இருக்க மாதிரி தெரியல. அந்த ரோடு பிஸி ரோடு சார். சி.எம் காரைக் கூட இடிப்பானுங்க. அடிக்கடி நடக்கும் சார். இப்பவும் காருக்கு சின்ன ஸ்கிராட்ச் கூட ஏற்படல. ரியர்வ்யூ மிரர் உடைஞ்சது மட்டும் தான்."

"இதுக்கு ஸ்ட்டேட் கிரைம் பிராஞ்ச் விசாரணையா சார்?"

"நான் கூட சொன்னேன் சார். மிரர் இரண்டாயி ரம் ரூபாய் ஆகுமா? மாத்தி தர்றோம் மேடம்னு. அதெல்லாம் முடியாது. இடிச்சவங்க பின்புலம் தெரியனும். எல்லாமே சட்டப்படி நேர்மையா நடக் கனும், தமிழ்நாட்ல சட்டம் ஒழுங்கு சரியில்லை னு தமிழ்நாடு கவர்னருக்கு போன் பண்ணிட்டாங்க."

"இப்ப புரியுது. கேஸ் எப்படி இங்க வந்ததுன்னு"

"எப்ப சார் என்கொயரிக்கு வர்றீங்க? தங்குறதுக்கு எதுவும் அரேஞ்மெண்ட்ஸ் பண்ணனுமா?"

"ஆமா சார் கொஞ்சம் உதவி வேணும்."

"ஸ்பெஷல் எஸ்.ஐ ஞானசேகரன் நம்பர் அனுப்பு றேன் சார். அவர் கோ ஆர்டினேட் செய்வார்."

"நன்றி சார்."

அத்தியாயம் -5

தாரணியின் இயற்பெயர் மரியம் தேவநாதன். இயக் கத்தில் சேர்ந்த பிறகு வைக்கப்பட்ட பெயர்தான் தாரணி.

போரினால் நிகழ்ந்த இடப்பெயர்வின் காரணமாக அவளது குடும்பம் பல பக்கங்களிலும் அலைக் கழிக்கப்பட்டது. மீன்களை நிலத்தில் விடுவதும், மீனவர்களைச் சமவெளிக்கு விரட்டுவதும் ஒன்று தான். மீன்பிடித் தொழிலை மட்டுமே அறிந்திருந்த தாரணியின் குடும்பம் இடப்பெயர்வினால் பெரிதும் பாதிக்கப்பட்டது.

தாரணி குடும்பத்திற்கு ஒருவேளை கஞ்சி கிடைக்கும் தினம் திருவிழா போல இருந்தது. ஐந் தாம் வகுப்பு வரை ஆரம்ப பாடசாலையில் படிக்கும் குழந்தைகளுக்கு பிஸ்கட் கொடுப்பார்கள். ஆறாம் வகுப்பிற்கு மேல் அது கிடையாது. அதனால் அவளது அம்மா, ஆசிரியரிடம் பேசியதன் காரண மாக ஒரு முறை பெயில் ஆக்கப்பட்டு மீண்டும் ஐந்தாம் வகுப்பிலேயே தாரணி படிக்கவைக்கப்பட் டாள்.

அடுத்தமுறை வேறு வழியில்லாமல் பெரிய பாட சாலைக்கு அனுப்பப்பட்டாள். அங்கு மதிய உணவு இடைவேளையில் அனைவரும் தங்கள் வீட்டில் இருந்து எடுத்து வந்த உணவை உண்ணும் போது இவளுக்கு என்ன செய்வது என்றே தெரியாது. ஷோபா சக்தியின் “விலங்குப் பண்ணை” சிறுக

தையில் வரும் ஆண்பிள்ளைகள் போல இருந் திருந்தால் வெளியிலாவது சுற்றலாம். அதற்கும் வாய்ப்பில்லை. வெறும் தண்ணீரைக் குடித்துவிட்டு கடைசிப் பெஞ்சில் யார் கண்ணிலும் படாமல் படுத்துக் கொள்வாள்.

ஆரம்பப் பாடசாலையில் இல்லாத மற்றொரு பிரச் சனையும் இந்த பெரிய பாடசாலையில் இருந்தது; சாதி! அனைத்துப் பிள்ளைகளின் சாதியும் ஆசி ரியர்களுக்கு மனப்பாடமாகத் தெரிந்தது. அதுவும் கடற்கரை மீனவ குழந்தை என்றால் கரையான் என்று இளப்பம்தான். அருகில் வந்தால் வேண்டு மென்றே மூக்கை மூடி முகத்தைச் சுழிப்பர்.

தமிழ் ஆசிரியர் தெய்வநாயகம் பிள்ளை மட்டும் தான் விதிவிலக்கு. மரியத்திடம் பாரபட்சம் காட் டாமல் பழகுவார். அவர் கூறிய கதைகளின் மூலம் தான் நயினாத் தீவு மரியம் மனதில் ஆழமா கப் பதிந்து போயிருந்தது. நயினாத்தீவின் அழகிய கடற்கரையையும் அதன் அருகில் அமைந்த நாக பூசணி அம்மன் கோவிலையும், மீன் விற்கும் சந்தையையும் அவளே கற்பனையில் உருவாக்கி மகிழ்ந்தாள். வாழ்வில் ஒருமுறையாவது நயினாத் தீவை பார்க்க வேண்டும் என நினைத்திருந்தாள். அந்த ஆசை பதிமூன்று வருடங்கள் கழித்து இப் போது தான் நிறைவேறப்போகிறது.

அத்தியாயம் -6

பேராசிரியர் ஜெயச்சந்திரன் கண்விழித்துப் பார்த் தார். எவ்வளவு நேரம் ஆனது என்றே தெரிய வில்லை. அவர் இருந்த அறை மிகவும் சுத்த மாகவும், புதிதாகவும் இருந்தது. தரையிலும், சுவ ரின் பாதி உயரம் வரையிலும் விலை உயர்ந்த டைல்ஸ் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. தான் படுத் திருந்த மரக்கட்டில் கூட விலை உயர்ந்ததாகத் தான் இருக்க வேண்டும் எனத் தோன்றியது. கட்டி லில் இருந்து சிறிது தூரம் தள்ளி ஒரு சோபாவில் அவன் அமர்ந்திருந்தான்.

"வணக்கம் புரொபசர்" மீசை இல்லாதவன் முகத் தில் மகிழ்ச்சியுடன் பேசினான். உடனே எழுந்து விறைப்பாக நின்று இயக்கத்தின் சல்யூட் ஒன்றை யும் வைத்தான்.

பேராசிரியருக்குக் குழப்பத்தில் நெற்றி சுருங்கியது.

"உங்க பேரென்ன?"

"விபுலேந்திரன்"

"விபுலேந்திரன், இயக்கத்தில் என்ன பொறுப்பில் இருந்தீங்க?"

"பிரித்தானியப் பொறுப்பாளர்"

"இப்ப எதுக்கு என்னை இங்க கடத்திட்டு வந் தீங்க?"

"'ரெண்டு' உங்க கிட்ட கதைக்கனுமாம்."

ரெண்டு.....

இந்த வார்த்தையைக் கேட்டதும் பேராசிரியரின் உடல் முழுவதும் புல்லரித்தது. களைப்பெல்லாம் எங்குச் சென்றதென்றே தெரியவில்லை. சடாரென எழுந்து அமர்ந்தார்.

"என்ன சொன்ன?"

"தயா அண்ணை உங்க கிட்ட கதைக்க வேணு மாம்"

இயக்கத்தில் ஒன்று என்பது எப்படி மந்திரச் சொல்லோ அதைப் போல ரெண்டு என்பது மாயச் சொல். அவர் செய்யாத மாயங்களே இல்லை.

ஒரு சேட்டிலைட் போனை எடுத்து பேராசிரியரிடம் கொடுத்தான் விபுலேந்திரன். "கடினமாக நடந்து கொண்டதற்கு மன்னிக்கவும். எப்படியாவது இங்கு அழைத்து வரும்படி தலைமையின் உத்தரவு."

அந்த சேட்டிலைட் போனை வாங்கிப் பார்த்தார் பேராசிரியர். மிகவும் பரிச்சயமான போன். சந் தேகமே இல்லாமல் இயக்கத்தின் போன் தான். அந்த சீரியல் நம்பர் உடைய செயற்கைக் கோள் தொலைப்பேசிகளை பதினைந்து ஆண்டு களுக்கு முன் பேராசிரியர் தான் முன்னின்று வாங் கிக் கொடுத்தார். (துரையா கம்பெனி - வாழ்நாள் சந்தா)

கையில் அதை எடுத்த உடன் பேராசிரியருக்கு பழைய நினைவுகள் தலை தூக்கின. கண்ணீர் சுரந்தது.
கையில் இருந்த போன் திடீரென அதிர்ந்தது. அதி லிருந்து "ட்டிங் ட்டிங்" என அழைப்புச் சத்தம் வந்

தது. தொலைப்பேசியின் டிஸ்பிளேயில் 002 என்ற எண் மிளிர்ந்தது. சந்தேகமே இல்லை. ஆன் செய் தார்.

"ப்ரொஃபசர் ஜே.சி ஸ்பீக்கிங்." நடுக்கத்துடன் பேசினார்.

"நம்பர் 2 ஹியர்"

பல்லாண்டுகளாகக் கேட்க நினைத்த அதே குரல்.

"புரொபசர், நலமா? எப்படி இருக்கீங்க?"

"தயா மாஸ்டர்...." புரொபசருக்கு பேச்சு தழுதழுத்து தடைப்பட்டது.

"புரொபசர் இப்போது உணர்ச்சிப்பூர்வமாகப் பேச நேரம் இல்லை. இளந்திரையன் உங்க கிட்ட ஒப் படைச்ச பணியை நீங்க நிறைவேற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது. உங்கட கையில் தான் இயக் கத்தின் எதிர்காலம்."

"ரோஜர் மாஸ்டர்."

"விபுலேந்திரன், நந்தா கூட சேர்ந்து ஓபரேசன் மாயப் பெருநிலம் ஆரம்பிங்க. இன்னும் இரண்டு நாளுக்குள் மாயப் பெருநிலத்தை அடைந்துவிட வேண்டும். சீக்கிரமே நாம் சந்திப்போம்.
தமிழரின் சுவாசம்; தனித் தமிழ்த் தேசம்."

பேராசிரியரும் உணர்ச்சி பொங்கக் கூறினார்.
"தமிழரின் சுவாசம்; தனித் தமிழ்த் தேசம்."

தொலைப்பேசி இணைப்பு துண்டிக்கப்பட்டது.

பேராசிரியர் ஓடி வந்து விபுலேந்திரனைக் கட்டிக் கொண்டார். "இப்படி ஒரு அதிசயம் நடக்கும் என நான் எதிர்பார்க்கவே இல்லை."

"ரெண்டின் உடல் கிடைக்கவில்லை எனும் போதே நீங்க புரிஞ்சிருக்கனும். அவர் தப்பிச்சிட் டார் என்டு"

"தயா மாஸ்டர் இப்ப எங்க இருக்கார்?"

"அதைச் சொல்ல எமக்கு அனுமதி இல்லை. ஆனால் அவர் இயக்கத்தை மீண்டும் உயிர்ப்பிக் கும் வேலையில் இருக்கிறார். அதற்கு உங்களோட உதவி தேவை."

"அதுக்காகத் தானே நான் இவ்வளவு நாள் உயி ரைக் காப்பாற்றி வச்சிருக்கேன். நான் கூட உங் களை முதலில் தவறாக நினைத்து விட்டேன். விட யம் வெளியில் கசிந்து பாஸ்வேர்டை திருட வந்து விட்டீர்கள் என"

"இயக்கத்தில் ஒரு விடயம் வெளியில் கசியுமா??"

"அதெல்லாம் அப்போது. இறுதிப்போருக்கு பின் அனைத்தும் தலைகீழாக மாறிவிட்டது. யாரையும் நம்ப முடியவில்லை."

"இனி தயா அண்ணை வந்துவிட்டார். துரோகிகள் பாடு திண்டாட்டம் தான்”

அத்தியாயம் -7

நாகப்பட்டினம் காவலர் குடியிருப்பில் இருந்த விருந்தினர் மாளிகை ஆல்டோ எதிர்பார்த்ததை விட வசதியாகத்தான் இருந்தது. பயணத்தின் களைப்புத் தீர நெடுநேரம் வெந்நீரில் குளித்தான். பிப்ரவரி மாத மாலை வேளை, வானம் மூடாக்கு போட்ட மாதிரி இருந்தது. குளித்த பிறகும் சோம்பல் இன்னும் தொடர்ந்தது. விருந்தினர் மாளிகைக்கு வெளியே கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

ஆல்டோ எட்டிப் பார்த்தான். காவல்துறை வாகனம் வந்து நின்றது. வெளிப்பாளையம் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் ஞானசேகரன், ஒயிட் & ஒயிட் ஆடையணிந்த நபருடன் இறங்கினார். ஒ.&.ஒ நெற்றியில், ஆர்ட் பிரஷை வைத்து வரைந்தது போல மூன்று தெளிவான வரிகளில் திருநீற்றுப் பட்டைகளும், கொடிக்கு நடுவில் இருக்கும் அசோகச் சக்கரம் போலப் பட்டைகளுக்கு நடுவில் ஒரு சந்தன வட்டமும், அதற்குள் குங்கும வட்டமும் இருந்தன. இதை வரைவதற்கே அரைமணி நேரம் ஆகியிருக்கும் என ஆல்டோ நினைத்துக் கொண்டான். ஒ.&.ஒ தேவைக்கு அதிகமாகவே வளைந்து ஒரு கும்பிடு போட்டார். ஆல்டோ ஞானசேகரனை ஒரு கேள்விக்குறியுடன் பார்த்தான்.

"கவர்னரம்மா கார் டிரைவர், குமார்" ஆல்டோ கேட்காமலேயே கேள்வியைப் புரிந்து, ஞானசேகரன் கூறினார்.

“என்னாச்சு குமார் காலையில்?”

“இன்னைக்கு காலையில் ஒரு... ஏழரை மணி இருக்கும் சார். காரைக்கால்ல இருந்து கோயம்புத்தூர் போறதுக்காக நாங்க நாகூர் - நாகப்பட்டினம் வழியா வந்திட்டு இருந்தோம். அப்ப தேசிகர் பாலி டெக்னிக் கிட்ட ஒரு ஸ்விஃப்ட்காரன் காரை இடிச்சுட்டான்.”

“இந்த ட்ரிப் ஏற்கனவே பிளான் பண்ணுனதா? யார் யாருக்கு நீங்க வந்த ரூட் தெரியும்?”

“அந்த விவரம் எல்லாம் கவர்னரம்மா பி.எஸ்.ஓ.க்கு தான் தெரியும் சார். முந்தாநாள் நைட் தான் என் கிட்டயே சொன்னாங்க.”

“பி.எஸ்.ஓ. கிட்ட பேசிட்டோம் சார். திடீர் பிளான் தானாம். யாருக்கும் தெரியாதாம்” ஞானப்பிரகாசம் கூறினார்.

“எதுக்காக கவர்னர் கோயம்பத்தூர் போறாங்க?”

“அங்க ஒரு ஆசிரமத்தில் சிவராத்திரி விழாவில் கலந்துக்கிறதுக்கு சார்.”

“நைட் பூரா டான்ஸ் ஆடுவாங்களே, அங்கயா?”

திரும்பி குமாரைப் பார்த்து ஆல்டோ கேட்டான் “என்னய்யா, உங்க கவர்னரம்மா ரொம்ப எளிமை, பெர்சனல் வேலை பார்த்தா அரசாங்க லைட்டை ஆஃப் பண்ணிட்டு சொந்த லைட் போட்டுக்கு வாங்க, ரெண்டே ரெண்டு செட் உடை தான் வச்சுருக்காங்க, அப்படின்னு வாட்ஸாப்பில் மெசேஜ்

வருது. இங்க என்னனா ஆசிரமம் போறதுக்கு அர சாங்கக் காரை எடுத்துட்டு போறாங்க?”

“இப்படி எல்லாம் கேட்பீங்கன்னு தான், காலையில் “சுத்தக் கோவை” விழா ஏற்பாடு பண்ணிட்டோம்.”

“எது? நல்லா இருக்க ரோட்ல குப்பையைப் போட்டு பெருக்குவீங்களே?”

“ஆமா. அதே தான். இப்ப அரசாங்கப் பயணம் ஆயிடுச்சுல?”

“யப்பா!!! உங்க நேர்மை புல்லரிக்க வைக்குது. சரி விடுங்க, நம்ம கதையைப் பார்ப்போம். உங்களுக்கு எப்படி தோணுது குமார், அந்த கார் டிரைவர் வேணும்னே இடிச்சானா?”

“இல்ல சார். அவனுக்கு லெஃப்ட் சைடில் ஒரு டூவீ லர் வந்துச்சு. அதுக்காக ரைட் ஏறி வந்தான், உரசி டுச்சு. ஆனா ரொம்ப வேகமா வந்தான்.”

“எவ்வளவு வேகம் இருக்கும்?”

“ஐம்பது, அறுபது இருக்கும் சார். அந்த டிராஃ பிக்கில் முப்பதில் போறதே பெரிய விசயம். எங்க இருந்து டூவீலர் உள்ள நுழைவான்னே தெரியாது.”

“என்ன கார்? நம்பர் எதுவும் பார்த்தீங்களா?”

“வெள்ளைக் கலர் ஸ்விஃப்ட். அவன் போன வேகத்துக்குக் காரைப் பார்த்ததே பெரிய விசயம். நம்பரை எங்க பார்க்க?”

அத்தியாயம் -8

தமிழாசிரியர் தெய்வநாயகம் பிள்ளைக்கு, பாடம் நடத்துவதை விடக் கதை சொல்வதில் தான் ஆர்வம் அதிகம். அவர் நயினாத் தீவு கதையைச் சொல்ல ஆரம்பித்தால் பிள்ளைகள் அனைவரும் மூச்சுவிடாமல் ஆர்வமாகக் கேட்பர். புறநானூறுப் பாடலையும், புணர்ச்சி விதிகளையும் சொல்லத் தெரியாமல் பின்புறத்தில் அடிவாங்குவதை விடக் கதை கேட்பது சுகமான விடயம் தான்.

சிலப்பதிகார கண்ணகியின் தந்தை மாநாய்கன், மரக்கலங்களில் நெடுந்தூரம் சென்று வணிகம் செய்யும் வணிகர் குழுவின் தலைவன். ஒருமுறை, ஒரு மரக்கலத்தில் வியாபாரத்திற்காக விலையு யர்ந்த பொருட்களை எடுத்துக் கொண்டு பூம்பு கார் துறைமுகத்தில் இருந்து கீழை நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டான்.

அவனது மரக்கலம் ஓர் இரவு முழுவதும் பயணம் செய்து மறுநாள் காலை ஒரு தீவை நெருங்கி யது. சிறிது நேரம் இளைப்பாறிச் செல்லலாம் எனக் கரை ஒதுங்கினர். கரைக்கு அருகே கடலுக்குள் இரு பாறைகள் இருந்தன. ஒரு பாறையில் நாகம் ஒன்று சீறிக் கொண்டு இருந்தது. மற்றொரு பாறை யில் இருந்த கருடன் அதைக் கொத்தித் தின்ன சமயம் பார்த்து இருந்தது.

அந்தப் பாம்பு தினமும் புளியந்தீவுப் பகுதியில் இருந்து நீந்தி வந்து இந்தத் தீவில் உள்ள நாகர் குல பெண்தெய்வத்தை வழிபடும். இன்று அப்படி வரும் போது கருடனிடம் மாட்டிக் கொண்டது.

இதைக்கண்ட மாநாய்கன், “நாகதேவியை வழிப டச் செல்லும் இந்தப் பாம்பைக் கொல்ல வேண் டாம்” எனக் கருடனிடம் வேண்டுகோள் விடுக்கி றான். உடனே கருடன், "உனக்கு இந்த நாகதேவி மேல் அவ்வளவு பற்று இருந்தால் இந்த மரக்க லத்தில் கொண்டு வந்த பொருட்கள் அனைத்தை யும் இக்கோவிலுக்கே கொடுத்துவிடு. நான் இந்த நாகத்தை விட்டு விடுகிறேன்" என்று கூறியது. மாநாய்கனும் ஒப்புக் கொண்டு அவ்வாறே செய்கி றான். அப்படி மாநாய்கன் கொடுத்த செல்வத்தால் கட்டப்பட்ட கோவில் தான் நயினாத் தீவு நாகபூ சணி கோவில்.

மாநாய்கனால் கோவில் கட்டப்பட்டதாலும், அக் கோவிலில் நயினார் பட்டர் எனும் பூசாரி பூசை செய்ததாலும், இத்தீவுக்கே நயினாத் தீவு என்று பெயர் வந்தது.

ஆனால் தமிழாசிரியர் கூறிய கதைக்கும் பிற்பாடு இயக்க அண்ணன் ஒருவர் கூறிய விளக்கத்திற்கும் பெரும் வேறுபாடு இருந்தது.

நாகர்கள் என்பவர்கள் பூர்வ குடி மக்கள். இயற்கை வழிபாடு, நாக வழிபாடு கொண்டவர்கள், பழங்குடி யினர்.

கருடர்கள் என்பவர்கள் காஷ்யப முனிவரின் வாரி சுகள் எனக் கூறிக் கொள்பவர்கள். ஆரிய வேதங் களைப் பின்பற்றுபவர்கள். வேள்விகள், யாகங்கள் நடத்துபவர்கள்.

இயற்கை வழிபாட்டு பூர்வகுடி மக்களான நாகர் களுக்கும், வேத மத கருடர்களுக்கும் இடையே நடந்த சண்டையின் குறியீடு தான் நயினாத் தீவு. ஆரிய மத கருடர்களால் ஆபத்தில் இருந்த பழங் குடி நாகர்கள் மாநாய்கன் என்ற வணிகரால் காப் பாற்றப் பட்ட கதை தான் நயினாத் தீவு கதை என் பது அவர் கருத்து.

அத்தியாயம்- 9

பேராசிரியரின் படபடப்பு இன்னும் அடங்க வில்லை. உண்மையில் இப்படி ஒரு நாள் வரும் என்று அவர் நினைத்ததே இல்லை.

அறையின் அழைப்பு மணி ஒலித்தது. விபுலேந்தி ரன் கதவில் இருந்த குழியாடித் துளை வழியாக நோக்கினான். ஆடிட்டர் நந்தா வெளியில் நின் றான். கதவைத் திறந்தான் விபுலேந்திரன்.

"பேராசிரியருக்கு வணக்கம். சிரமத்திற்கு மன்னிக் கவும். திடீரெனத் தலைமை என்னைத் தொடர்பு கொண்டு கட்டளை இட்டதால் உங்களை அழைத்துவர அதிரடி நடவடிக்கை எடுக்க வேண் டியதாயிற்று." பேராசிரியரை நோக்கிக் கூறியபடி உள்ளே நுழைந்தான் ஆடிட்டர் நந்தா.

தமிழர் சுதந்திர நலவாழ்வுக் கட்சியின் (த.சு. ந.க) தலைவர்தான் ஆடிட்டர் நந்தா. கிறிஸ்துமஸ் நாளில் கேக் விற்பான். பொங்கல் வந்தால் கரும்பு விற்பான். ஆயுத பூசைக்கு அரிசிப் பொரி விற் பான். சந்தர்ப்பவாத அரசியல் வியாபாரத்தில் கில் லாடி. மெலிந்த தேகத்துடன், கிளாசிக் பம்பெட்யூ (classic pompadour) ஹேர் ஸ்டைலில் தனது 50 வயதை, சற்றுக் குறைத்துக் காட்ட முயற்சி செய்து அதில் வெற்றியும் பெற்றிருந்தான்.

பேராசிரியர் ஜெயச்சந்திரனுக்கு நந்தா பற்றி எப் போதுமே நல்ல எண்ணம் இருந்ததில்லை. அவன் கடந்த காலத்தில் மிகைப்படுத்திப் பேசிய பொய் களும், சாதி அரசியலும் பேராசிரியருக்கு எரிச் சலை வரவழைத்திருந்தன. ஒருபுறம் இயக்கத்தின் தோல்வி, மறுபுறம் இயக்கத்தின் பெயரை வைத்து இவர்கள் செய்யும் கீழ்த்தரமான அரசியல் என எல் லாப் பக்கங்களிலும் சூழ்ந்த விரக்தியால் சம கால அரசியலில் இருந்து விலகியே இருந்தார். ஆனால் இன்று தலைமையே நந்தாவை நம்புகிறது. வேறு வழியில்லை. தலைமையின் உத்தரவிற்கு அடிப ணிந்து தான் ஆக வேண்டும். அதுவும் இயக்கம் மீண்டும் உயிர்ப்பிக்கப்படப் போகின்ற மிக முக்கிய மான இத்தருணத்தில் அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம்.

"அதைப் பற்றி எனக்குத் துளி கூட கவலை இல்லை. இனி நாம் செய்ய வேண்டியது நிறைய உள்ளது. நாம் அவற்றைப் பேசுவோம்." நந்தாவிடம் கூறினார் ஜெயச்சந்திரன்.

"உண்மை தான் பேராசிரியரே. தலைமை நம்மை நம்பி பெரிய பொறுப்பைக் கொடுத்துள்ளது. அதை நிறைவேற்ற வேண்டும். இந்த மூன்று நாட்கள் என் வாழ்க்கையையே மாற்றி விட்டது. எவை யெல்லாம் நடக்க வேண்டும் என ஏங்கினோமோ அவையெல்லாம் நடக்கத் தொடங்கிவிட்டன. இவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது நம் பொறுப்பு."

"உங்களிடம் "ரெண்டு" என்ன கூறினார்?"

"ஆப்ரேசன் "மாயப்பெருநிலம்" என்பதை உடனே தொடங்கச் சொன்னார். அதைப்பற்றி உங்களுக் குத் தெரியும் என்றார்."

பேராசிரியர் விபுலேந்திரனிடம் திரும்பினார். "எனக்கு இணைய இணைப்புடன் ஒரு லேப்டாப் வேண்டும்."

அவன் தன் பையில் இருந்த மடிக்கணினியை எடுத்துக் கொடுத்தான். அதில் TOR மென் பொருளை நிறுவினார். இயக்கத்தின் dark web இணையத்திற்குச் சென்றார். தனது பயனர் பெயர், கடவுச் சொல்லைக் கொடுத்து உள்நுழைந்தார். கிட்டத்தட்ட ஏழு ஆண்டுகளாக இணையதளம் அப்டேட் எதுவும் இன்றி இருந்தது. ஏழு ஆண்டுக ளுக்குப் பிறகு அவரும் இன்று தான் உள்நுழைகி றார். கடைசியாக 2011 ஆம் ஆண்டு இளந்திரை யன் செய்த அப்டேட் தான் இருந்தது. இயக்கத் திற்கு இப்படி ஒரு இணைய தளம் இருப்பது இரண் டாம் கட்டத் தலைவர்கள் பலருக்கே தெரியாது.

"உன் இயக்க எண் என்ன?"

"110231" விபுலேந்திரன் கூறினான்.

அதை உள்ளிட்டார். விபுலேந்திரனின் புகைப்ப டங்களுடன் அவன் இயக்கத்தில் சேர்ந்த நாள் முதல் 2009 வரையிலான முக்கியத் தகவல்கள் அனைத்தும் திரையில் தெரிந்தன. நம்பிக்கைத் தரவரிசையில் மூன்று நட்சத்திரக் குறியீடு வாங்கி யிருந்தான். இயக்கத்தின் உளவுப்படை யாருக்கும் அவ்வளவு எளிதில் மூன்று நட்சத்திரக் குறியீடு தந் துவிடாது.

மடிக்கணிணியை மூடி வைத்துவிட்டு பேராசிரியர் கூறினார்,
"நந்தா நீங்க தப்பா நினைக்கலனா நான் கொஞ்ச நேரம் விபுலேந்திரன் கிட்ட தனியா பேசலாமா?"

நந்தா விபுலேந்திரனைப் பார்த்தார். விபுலேந்திரன் கண்களாலேயே சைகை காட்ட நந்தா வெளியேறினார்.

"விபுலேந்திரன்! இயக்கத்தின் இரகசியங்களை இயக்கத்தில் இல்லாதவர்களோடு இப்ப தான் முதல் தடவை பகிர்ந்து கொள்ள போறேன். அதற்கு முன்னர் உறுதியாகச் சொல். நந்தாவை நம்பலாமா?"

"புரொபசர், இப்பவும் இயங்கக்கூடிய நிலையில் இருக்கிற இயக்கத்து உறுப்பினர்களை விரல் விட்டு எண்ணிடலாம். அவர்களை மட்டும் வைத்துக் கொண்டு இயக்கத்தை மீட்டெடுத்துவிடலாம் என நினைப்பது முட்டாள்தனம். ஏற்கனவே சகோதர யுத்தத்தால் நாம் அழிந்தது போதும் எனத் தலைமை நினைக்கிறது. இந்த நந்தாவின் உதவி இல்லை என்றால் நான் உங்களை நெருங்கி இருக்கவே முடியாது. சேட்டிலைட் போனில் நீங்களும் பேசியிருக்கவே முடியாது. இந்தச் சூழ்நிலையில் வேறு வழியில்லை. நந்தாவின் துணை நமக்கு வேண்டும்."

பேராசிரியர் அறையில் நடந்தபடி யோசித்தார். விபுலேந்திரன் அவரைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

சிறிதுநேர யோசனைக்குப் பிறகு விபுலேந்திரனின் முன்னால் வந்து நின்றார். வலது கையை அவன் முன்னால் நீட்டி, "தலைவரின் பெயரால் உறுதி கொடு. எப்போதும் இயக்கத்திற்குத் துரோகம் செய்ய மாட்டேன் என்று" எனக் கூறினார். விபுலேந்திரன் முகத்தில் பழைய புன்னகை வந்து அமர்ந்தது. பேராசிரியரின் கையை உறுதியாகப் பற்றினான்.

அத்தியாயம் -10

"இந்த இடம் தான் விபத்து நடந்த இடம் சார்." ஞானசேகரன் கூறினார்.

அந்த இடம் நாகூர்-நாகை சாலையில் வலிவ லம் தேசிகர் பல்தொழில்நுட்பக் கல்லூரியின் வாச லில் இருந்து சுமார் நூறு மீட்டர் தூரத்தில் சாலை லேசாக இடப்புறம் திரும்பும் வளைவில் இருந்தது. ஆல்டோ காரில் இருந்து இறங்கிச் சுற்றிப் பார்த் தான். வடக்குத் தெற்கான சாலையின் கிழக்கே காலி இடம், மேற்கே நான்கு கடைகள் வரிசை யாய் அமைந்த ஒரு வணிக வளாகம். முதலில் ஒரு தேநீர்க் கடை இருந்தது. சாலையைக் கடந்து வணிக வளாகத்தின் தேநீர்க்கடையை நோக்கிச் சென்றான். மற்றவர்கள் பின் தொடர்ந்தனர்.

தேநீர்க் கடைக்காரர், பெரிதாக அலட்டிக் கொள் ளவில்லை.

"டீ சாப்டுறீங்களா சார்?" செயற்கை பவ்யத்தோடு கேட்டார்.

"இல்ல வேண்டாம். நன்றி. காலையில் அங்க ஒரு ஆக்ஸிடென்ட் நடந்துச்சே பார்த்தீங்களா?"

"பார்த்தேன் சார். இந்தா.... அவரும் தான் இருந் தார்." கவர்னர் ஓட்டுநரின் பக்கம் திரும்பினார். வித்தியாசமான பட்டை குங்குமமும், வெள்ளைச் சீருடையும் மனதில் பதிந்திருக்கும் போல.

"அப்ப எத்தனை மணி இருக்கும்?"

"ஏழு இருபத்தஞ்சு, ஏழு முப்பது இருக்கும் சார்."

"எப்படி அவ்வளவு கரெக்ட்டா சொல்றீங்க?" பேச் சுவாக்கில் கேட்ட கேள்விக்கு உருப்படியான பதில் வந்த திருப்தி ஆல்டோவிற்கு.

"ரேடியோல இராசிபலன் கேட்டுக்கிட்டு இருந் தேன் சார். அப்ப தான் கரெக்ட்டா ஆக்ஸிடெண்ட் ஆச்சு. இராசிபலன் தினமும் ஏழு இருபத்தஞ்சுல இருந்து ஏழு முப்பது வரை சொல்வான் சார்."

"ஓ..."

"ஏழரை மணி டி.டி.கே வள்ளி கந்தன் பஸ், ஆக் சிடெண்ட் ஆன உடனே கிராஸ் பண்ணுச்சு. வேணும்னா அவர்கிட்ட கேளுங்க." குமாரைக் கைகாட்டினார்.

"ஆமா சார். பிரைவேட் பஸ் ஒன்னு கிராஸ் ஆச்சு" ஓட்டுநரும் ஆமோதித்தார்.

"இந்த ஷாப்பிங் காம்ப்ளெக்சில் கேமரா இருக்கா?" ஆல்டோ கேட்டான்.

“இங்க இல்ல சார். வேணும்னா பாலிடெக்னிக் கேட்ல இருக்கும் பாருங்க." வலிவலம் தேசி கர் பாலிடெக்னிக் கல்லூரியை கை காட்டினார் தேநீர்க்கடைக்காரர்.

பாலிடெக்னிக் கல்லூரி வாசலில் இருந்த சிசி டிவி காட்சிப்பதிவை கல்லூரி முதல்வரிடம் அனு மதி வாங்கிப் பார்த்தனர். காலை ஏழு மணி இரு பத்தேழு நிமிடத்தில் பதிவான காட்சியில் ஒரு வெள்ளை நிற ஸ்விஃப்ட் கார், கல்லூரி வாசலில் இருந்த வேகத்தடையை மதிக்காமல் வந்த வேகத்

திலேயே அதன் மீது ஏறிக் குதித்துச் சென்றது தெரிந்தது.

"இந்தக் கார் தான் சார்." குமார் கத்தினார்.

சாலையின் குறுக்காக கல்லூரியின் எதிர்ப்புறத் தைப் பார்க்கும்படி கேமரா இருந்ததால் வண்டி யின் பக்கவாட்டுத் தோற்றம் மட்டுமே பதிவாகியி ருந்தது. காரின் முன்பக்கம் தெரிந்து இருந்தாலும் இந்த கேமராவின் காணொளித் தரத்தில் காரின் எண்ணைக் கண்டுபிடிப்பது சிரமம் தான் என ஆல்டோ நினைத்தான். அடுத்து என்ன செய்ய லாம் என யோசித்தான்.

"நம்ம கார்ல சைரன் இருக்கா?" ஞானசேகரனைப் பார்த்துக் கேட்டான்.

"இருக்கு சார்"

"சைரனை ஆன் பண்ணி, நாகப்பட்டினம் போற வழியில் 60 km/h ஸ்பீடில் போங்க."

போலீஸ் கார் சைரனை அலறவிட்டபடி மணிக்கு 60 கிலோமீட்டர் வேகத்தில் நாகப்பட்டினம் சாலை யில் பறந்தது. சாலையில் சென்ற மற்ற வாகனங்கள் மரியாதையாக ஒதுங்கி வழிவிட்டன. முன் சீட்டில் அமர்ந்திருந்த ஆல்டோ சாலையைக் கூர்ந்து கவ னித்துக் கொண்டே வந்தான். நாகப்பட்டினம் நகர் நெருங்கி விட்டதன் அறிகுறியாகக் கட்டிடங்கள் அடர்த்தியாகிக் கொண்டே வந்தன. ஒரு தனியார் வங்கிக் கிளையைச் சாலையில் கண்டதும் அங்குக் காரை நிறுத்தச் சொன்னான். பாலிடெக்னிக் கல் லூரியில் இருந்து கிளம்பி சரியாக நான்கு நிமிடம் ஆகியிருந்தது.

அந்த வங்கிக் கிளையின் சிசிடிவி கேமரா காட் சிகள் சரிபார்க்கப்பட்டன. ஆல்டோ எதிர்பார்த்த

தைப் போலவே ஏழு மணி இருபத்தி மூன்று நிமி டத்தில் வெள்ளை நிற ஸ்விஃப்ட் கார் வங்கியைக் கடந்து சென்றது. ஆனால் இங்கும் பக்கவாட்டுத் தோற்றம் மட்டுமே கிடைத்தது.

"இங்க இருந்து கொஞ்ச தூரம்தான் சி.ஆர்.சி டெப்போ. அங்க இருக்க கேமரால சாலையின் முழு வியூ இருக்கும். அதுல பார்க்கலாம். காரோட முன்பக்கம் தெரியும்." ஞானப்பிரகாசம் தான் கூறி னார். மீண்டும் சைரனுடன் கார் வங்கியில் இருந்து விரைந்தது. மூன்று நிமிடப் பயணம்.

அரசுப் பேருந்துப் போக்குவரத்துக் கழகப் பணி மனை எனப் பெயர் மாற்றம் செய்து பல ஆண்டு கள் ஆனாலும் நாகை மக்களுக்கு அது சி.ஆர்.சி (சோழன் ரோட்வெய்ஸ் கார்ப்பொரேஷன்) டிப்போ தான்.

அங்கு அவர்கள் எதிர்பார்த்தபடி கேமராவின் கோணம் சாலைக்கு இணையாக அமைந்திருந் தது. அனைத்து வாகனங்களின் முகப்பும் தெளிவா கத் தெரிந்தது. ஆல்டோவின் கணக்குப்படி இங்கு, ஏழு மணி இருபது நிமிடத்தில் அந்தக் கார் தெரிய வேண்டும். வீடியோவை ஆவலுடன் பார்த் தனர். ஆனால் அந்த வெள்ளை நிறக் கார் வரவே இல்லை. காலை ஆறு மணியில் இருந்து பதிவான வீடியோ அனைத்தையும் பார்த்துவிட்டனர். வெள் ளைநிற ஸ்விஃப்ட் மட்டும் வரவே இல்லை.

அத்தியாயம் -11

பொதுமக்களோடு கலந்திருந்த தாரணி குழுவினர், யாழ்ப்பாணத்தில் இருந்து புங்குடுதீவு செல்லும் பேருந்தில் ஏறுவதற்காக வரிசையில் நின்றனர். அனைவருமே நாகபூசணி அம்மன் கோவில் திருவிழாவிற்காகச் செல்பவர்கள். போர் சமயத்தில் யாரையும் நயினாத்தீவிற்குள் அனுமதிப்பது இல்லை. திருவிழாவிற்காக இரண்டு தினங்கள் மட்டும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

பேருந்தின் முன்னும் பின்னும் இராணுவ வாகனங்கள் தொடர, பேருந்து ஒன்றரை மணிநேரம் பயணித்து குறிகாட்டுவான் படகுத்துறையை அடைந்தது. அங்கிருந்த ஃபெர்ரி படகு மிகப் பழையதாக இருந்தது. இருபது, முப்பது பேர் மட்டுமே பயணம் செய்யக் கூடிய ஃபெர்ரியில் அறுபது பேரை அடைத்தனர். கடலலையில் மேலும் கீழும் குதித்தபடி வேகமாகச் சென்றது ஃபெர்ரி. ஏற்கனவே பிரட்டிக் கொண்டிருந்த வயிறு, தற்போது அதிகமாகக் குமட்டியது. "உவ்வ்வேக்" எனச் சத்தத்துடன் வாந்தி எடுத்தாள் தாரணி. அவள் வாந்தி எடுப்பதைப் பார்த்ததும் அருகில் இருந்த பெண்ணுக்கும் குமட்டியது. சிறிது நேரத்தில் ஃபெர்ரியில் இருந்த பாதி நபர்கள் வாந்தி எடுத்துவிட்டனர். தாரணிக்கு நீண்ட நேரம் ஆகியும் வாந்தி நிற்கவில்லை. வயிற்றில் எதுவும் இல்லாமல் வெறும் சத்தம் மட்டும் வந்தது. ஃபெர்ரியில் நாற்றம் தாங்க முடியாமல் சிங்கள வீரர்கள் மேல் தளத்திற்குச் சென்று விட்டனர்.

நயினாத் தீவில் இறங்கிய பின்னரும் சோதனை செய்ய நின்ற வீரர்கள் கூட, இரண்டடி தள்ளி நின்று கொண்டனர்.

கடல் நீரில் ஆடைகளைக் கழுவிய பின் தாரணி மற்றவர்களுடன் கோவிலுக்குள் நுழைந்தாள். கூட்டத்திற்குள் அனைவரது முகத்தையும் உற்றுப் பார்த்தபடி நடந்தாள். அதோ அவர் தான். இரண்டு ஆண்டுகளுக்கு முன் வன்னிக் காட்டிற்குள் கண்ட அதேமுகம். வைத்தி என்கிற வைத்தியநாதன். இவளைப் பார்த்தவுடன் பரபரப்பைக் காட்டாமல் அவரும் இயல்பாக அருகில் வந்தார். கண்ணிமைக்கும் நேரத்தில் கோவிலின் ஒளி குறைந்த பகுதியில் வைத்து, தங்கக் கட்டிகள் இருந்த பெல்ட்கள் இடம் மாறின. அவரும், அவருடன் வந்த மற்ற மூவரும் பெல்ட்டை அணிந்து கொண்டு எந்த சலசலப்புமின்றி கோவிலின் நாக தெய்வத்தை வழிபடுவதில் மும்மரமாகினர்.

பூசை, வழிபாடு முடிந்த பின் வேதாரண்ய மீன் பிடி துறைமுகத்தை நோக்கி அவர்களை ஏற்றிக் கொண்டு அவர்களின் விசைப்படகு சீறிப் பாய்ந்தது. அப்படகின் ஐஸ் பாக்சில் இருந்த பெரிய சூறை மீன்களின் வயிற்றுக்குள் தங்கக் கட்டிகள் பத்திரமாக இருந்தன. "ஒரிஜினல் தங்கமீன்கள்" வைத்தி அவற்றைப் பார்த்து நினைத்துக் கொண்டார்.

அவர்கள் படகு பாதுகாப்பாகக் கிளம்பிச் சென்றதை தூரத்தில் நின்று உறுதிப்படுத்தியபின், தாரணி குழுவினர் படகுத்துறைக்கு வந்து ஃபெர்ரியில் ஏறினர். புங்குடு தீவு குறிகாட்டுவான் படகுத் துறையில் இறங்கிய போது, அங்குப் பரபரப்பு நிலவியது. சிங்கள உளவுப்படையினர் வந்து சேர்ந்திருந்தனர். நால்வரையும் சிங்கள ஆர்மி சுற்றி

வளைத்தது. நால்வர் கண்களிலும் கருப்புத் துணி கட்டப்பட்டது.

மறுநாள் இயக்கத்தின் சார்பில் தாரணி உள்ளிட்ட நான்கு பெண்களுக்கும் மாவீரர் வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இறுதிவரை உடல்கள் கிடைக் கவில்லை.

அத்தியாயம் - 12

நந்தாவும் விபுலேந்திரனும் ஆளுக்கு ஒரு பக்கம் உட்கார, பேராசிரியர் ஜெயச்சந்திரன் மடிக்கணி ணியில் நிறுவப்பட்ட TOR மென்பொருளை இயக் கினார்.

"உங்களுக்கெல்லாம் TOR தெரியும். ஆனால் உங் களுக்குத் தெரியாத விடயம், டார்க்நெட்டில் நமது இணையதளமும் உள்ளது. TOR மூலம் மட்டும் தான் நம்ம இயக்கத்தோட இணையதளத்தைப் பார்வையிட முடியும். இவை அனைத்தையும் வடி வமைத்தது இயக்கத்தின் நிதித்துறைப் பொறுப்பா ளர் இளந்திரையன். இது இறுதிப் போருக்குப் பல வருடங்கள் முன்னரே உருவாக்கிய விடயம்.

இறுதிப் போருக்குப் பின் இளந்திரையன் இரண்டு வருடங்கள் தலைமறைவாக இருந்தான். அப்போது இயக்கத்தின் மொத்தப் பணத்தையும் மறை நாணயமாக (Crypto currency) மாற்றி எதிர் காலத்திற்காகச் சேர்த்து வைத்துவிட்டான். அந் தக் கணக்கை இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் பார்க்கும் படி அதை இணையதளத்தோடு சேர்த் தும் வைத்து விட்டான். ஆனால் அதைப் பார்வை யிடலாமே தவிர அதில் இருந்து பணப்பரிமாற்றம் செய்ய முடியாது. அதற்கு எட்டு இலக்க இரகசிய எண் வேண்டும். அந்த எண் இருக்குமிடம் தான் மாயப் பெருநிலம்."

நந்தா முகத்தில் குழப்பம் ஏற்பட்டது "பேராசிரியரே நம்ம அந்த இடத்திற்குப் போக வேண்டுமா?"

“இல்லை. இது ஒரு வகையான குறியீடு. இனி நான் சொல்லப் போற தொழில்நுட்ப விடயங்கள் புரிந் தால் தான் நம்ம அடுத்த நிலைக்கே போக முடி யும். அதனால கவனமாகக் கேளுங்க." பேராசிரியர் தொடர்ந்தார்.

"பணப்பரிமாற்றம் செய்யும் இரகசிய எண்ணை உருவாக்க Random fund transfer pin generator எனும் செயலியை இளந்திரையன் உருவாக்கியுள் ளான். அச்செயலியை கணினியில் நிறுவி இயக் கினால் சில குறியீட்டு வார்த்தைகள் வரும். அக் குறியீட்டு வார்த்தைகளில் இருந்து பணப்பரிமாற்ற எண்ணைக் கண்டறிய வேண்டும். அதற்கு 48 மணி நேரம் தான் காலக்கெடு. அதற்குள் எட்டு இலக்க எண்ணைக் கண்டறிந்து பணப் பரிமாற்றத்தை முடிக்க வேண்டும். 48 மணி நேரத்தைக் கடந்து விட்டாலோ, மூன்று முறை தவறான எண்களை இட்டாலோ அந்தச் செயலி 'லாக்' ஆகி விடும். பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்துத் தான் மறு முறை இயக்கி புதிய குறியீட்டு வார்த்தைகளைப் பெற முடியும். இத்தனைப் பாதுகாப்பு முறைகளும் இயக்கத்தின் சொத்து தவறான கைகளில் சென்று விடக் கூடாது என இளந்திரையன் பார்த்துப் பார்த் துச் செதுக்கியது."

"இளந்திரையன் மகா கில்லாடி தான்" விபுலேந்தி ரன் மனதிற்குள் நினைத்துக் கொண்டான். "அந்த குறியீட்டு வாக்கியத்தில் இருந்து எப்படி PIN நம்ப ரைக் கண்டுபிடிப்பது?"

"இங்கு தான் இளந்திரையன் ஒரு செக் பாயிண்ட் வைத்துள்ளான். இயக்கத்தின் மேல்மட்டத் தலை

வர்கள் மட்டுமே அறிந்த சில வார்த்தைகளை வைத்து குறியீட்டுச் சொற்றொடர்களை உருவாக் கியுள்ளான். இயக்கத்துடன் நீண்ட காலத் தொடர் பில் இருப்பவர்கள் மட்டுமே அந்த வார்த்தைகளில் இருந்து எண்ணைக் கண்டுபிடிக்க முடியும். இயக் கத்திற்குத் தொடர்பில்லாத ஹேக்கர்களோ, உள வுப்படையினரோ, வேறு யாருமோ ஹேக் செய்து இணையதளத்தின் உள் நுழைந்தாலும் பார்க்க மட்டும் செய்யலாம், எண்ணைக் கண்டுபிடிக்க இயலாது. பணத்தை மாற்ற இயலாது. வேறு யாரி டமும், இந்தக் கணக்கின் பயனர் பெயர், கட வுச்சொல் கிடைத்தாலும் அதனால் பயனில்லை.” சிறிது இடைவெளி விட்ட பின் நந்தாவைப் பார்த்து மீண்டும் தொடந்தார்.

"நந்தா, இந்தச் செயலில் இறங்கினால் 48 மணி நேரத்திற்குள் கடவு எண்ணைக் கண்டுபிடித்து பணத்தை மாற்றிவிட வேண்டும். அதற்கு மேல் நேரமானால் நாம் செய்த அனைத்தும் வீணாகிவி டும். அதனால் ஒரு முறைக்கு இருமுறை அனைத் தையும் சரி பார்ப்பது நல்லது. மறை நாணயத் தைப் பணமாக்க, வங்கிக் கணக்கில் தான் மாற்ற வேண்டும். எந்த வங்கிக் கணக்கில் டெப்பாசிட் செய்ய வேண்டும்? அது எப்படி 'ரெண்டு' கைக்குப் போகும்?" பேராசிரியர் வினவினார்.

"என் கட்சிக்குப் புலம்பெயர் தமிழர்களிடம் நிதி வசூலிக்க பிரிட்டிஷ் விர்ஜின் தீவுகளில் ஒரு வங்கிக் கணக்கு இருக்கு. அந்தக் கணக்கிற்கு மாற்றினால் அங்கிருந்து தலைமை எப்படிக் கேட்கிறதோ அப் படி அவர்களிடம் சேர்க்கலாம்." நந்தா கூறினான்.

"இப்ப நம்ம இருக்கிற இடம் எந்த ஊரில் உள்ளது? இது பாதுகாப்பான இடமா? காவல்துறையோ, வேறு யாரோ தொல்லை செய்வார்களா?"

"மதுரை திருச்சி சாலையில் மேலூர் கிட்ட இருக்க கிரானைட் தொழிற்சாலையின் கெஸ்ட் ஹவுஸ் இது. பேக்டரிக்குப் பின்னாடி இப்படி ஒரு வீடு இருக்கதே யாருக்கும் தெரியாது. அதுவுமில்லாம இப்ப தொழிற்சாலையை மூடியாச்சு. யாரும் வர மாட்டாங்க."

ஜெயச்சந்திரன் சிலவற்றைத் தட்டச்சு செய்து தேடினார். பிறகு மடிக்கணினி முன் அமைதி யாக அமர்ந்திருந்தார். பல சிந்தனைகள் மனதை நிறைத்தன. மூச்சை முழுவதுமாக இழுத்து உள் விட்டார். மூளையைத் தவிர மற்ற உறுப்புகள் அனைத்தும் தத்தம் வேலையை நிறுத்திவிட்டன என்பது போல் இருந்தது. அவர் மடிக்கணினி முன் அசையாமல் சிலை போல் இருந்ததைக் கண்டு நந்தாவுக்கு எரிச்சல் வந்தது. விபுலேந்திரனிடம் ஏதாவது செய் எனப் பொருள்படும் படி சைகையில் கூறினான்.

"புரொபசர் நமக்கு நேரம் ரொம்பக் குறைவா இருக்கு. சீக்கிரம் ஆரம்பிக்கனும்."

ஜெயச்சந்திரன் நீண்ட தயக்கத்திற்குப் பின் மடிக் கணினியில் இளந்திரையனின் fund transfer pin generator மென்பொருளை நிறுவினார். அதை இயக்கி அவரது இயக்க எண்ணையும் கடவுச் சொல்லையும் உள்ளிட்டார்.

பணப்பரிமாற்ற எண்ணை உருவாக்கும் அந்தச் செயலி இயங்கத் தொடங்கியது. இயக்கத்தைப் பற் றியும் தனி நாட்டின் தேவை பற்றியும் இரு நிமிட குறும்படம் ஒன்றைக் காட்டியது. இது இளந்திரை யனின் வழக்கம். அவன் உருவாக்கிய படம். அவன் செய்யும் அனைத்து விடயங்களிலும் இந்தக் குறும் படம் இடம் பெறும்.

நந்தாவுக்குப் பொறுமை குறைந்து கொண்டே வந்தது. இப்ப இந்த வீடியோ எல்லாம் முக்கியமா? மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

காணொளி முடிந்தவுடன் அந்த மென்பொருளை இயக்குவதற்கான விளக்கக் கையேடு, விதிமுறைகள் திரையில் தெரிந்தன. அதில் இருந்த குறிப்புகளை ஏற்கனவே ஜெயச்சந்திரன் அறிந்திருந்தார். 48 மணி நேரத்திற்குள் சங்கேத எண்ணைக் கண்டறிந்து உள்ளிடா விட்டால் செயலி இரண்டு வருடம் தடை செய்யப்படும் என்பது தடிமனான எழுத்துக்களில் கொடுக்கப்பட்டிருந்தது. அவற்றை எல்லாம் உளமார ஒப்புக் கொள்கிறேன் என்று Accept பட்டனை அழுத்தினார்.

திரை முழுவதும் கறுப்பு நிறம் பூசியது. சில நொடிகளில் வெள்ளை நிறத்தில் எழுத்துகள் ஒளிர்ந்தன. ஒரு சொற்றொடர் மின்னியது.

“Food givers life givers, in outer cd 19, wiseman’s conch”

அதற்குக் கீழ் இருந்த கடிகாரத்தில் இரண்டு நிமிடத்தில் இருந்து ஒவ்வொரு நொடியாகக் குறைந்து கொண்டே வந்தது. விபுலேந்திரன் ஒரு காகிதத்தில் அதை எழுத்து மாறாமல் அப்படியே குறித்துக் கொண்டான்.

120 நொடிகள் முழுவதும் ஆறு கண்களும் மடிக் கணினித் திரையை விட்டு அகலவே இல்லை. இரண்டு நிமிடம் முடிந்த உடன் மென்பொருள் தன்னாலேயே செயலிழந்து போனது.

“Food givers life givers, in outer cd 19, wiseman’s conch”

ஜெயச்சந்திரனுக்குக் கொஞ்சம் மகிழ்ச்சி எட்டிப் பார்த்தது. உண்மையிலேயே இளந்திரையன் அறிவாளி தான். நம்பிக்கை பிறந்தது.

அத்தியாயம் -13

ஆல்டோ மனதிற்குள்ளாகவே ஒருமுறை அனைத்தையும் ஓட்டிப் பார்த்தான்.

வலிவலம் தேசிகர் கல்லூரிக்குப் பக்கத்தில் விபத்து நடந்திருக்கிறது. காடம்பாடி தனியார் வங்கியின் கண்காணிப்புக் கேமராவிலும் அந்தக் கார் பதிவாகியிருக்கிறது. ஆனால், அதே சாலையில் இன்னும் சற்றுத் தள்ளி இருக்கும் போக்குவரத்துக் கழகப் பணிமனை கேமராவில் பதிவாகவில்லை. வேறு பாதையில் வந்திருப்பார்களோ? மற்ற ஃபீடர் சாலைகளில் உள்ள கேமராக்களைப் பார்க்கச் சொல்ல வேண்டும். காடம்பாடிக்கும் பணிமனைக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்து கிளம்பியிருந்தால்?????

ஆல்டோ ஞானப்பிரகாசத்தையும், திருவையும் அழைத்துக் கொண்டு மீண்டும் வந்த வழியே கிளம்பினான். பேருந்துப் பணிமனைக்கும் தனியார் வங்கிக்கும் இடையேயான சாலையில் இருபுறத்தையும் பார்த்துக் கொண்டே சென்றான். காடம்பாடி தர்ஹாவிற்கு முன் ஆயுதப்படை வளாகத்திற்கு எதிரே வலப்புறம் ஒரு சாலை பிரிந்தது. பிரிவுக்கு அருகே இரு சக்கர வாகனம் பழுது நீக்கும் மெக்கானிக் கடை ஒன்று இருந்தது. அதனருகில் காரை நிறுத்தினான். வேலை செய்து கொண்டிருந்த மெக்கானிக் கைகளைத் துணியில் துடைத்தபடி வந்து "வணக்கம் சார்" என்றார்.

"இந்த ஏரியாவில் எதாவது ஒயிட் கலர் ஸ்விஃப்ட் கார் பார்த்திருக்கீங்களா?"

"வெள்ளை ஸ்விஃப்ட்டா சார்?"

"ஆமா. வெள்ளை தான்." மெக்கானிக்குகளுக்கு எப்போதுமே தாம் காணும் கார்களை நினைவில் குறித்து வைப்பதில் அலாதிப் பிரியம் உண்டு.

"மறைமலை நகர் செகண்ட் கிராஸ் தெருவில் ஒருத்தர் வச்சிருக்கார் சார். தினமும் இந்தப் பக்கம் தான் போவார்." அருகில் இருந்த சாலையைக் கைகாட்டியபடி கூறினார்.

மறைமலை நகர் இரண்டாவது குறுக்குத் தெருவின் நுழைவில் ஒரு பெட்டிக்கடை இருந்தது.

"ரெண்டு மாஸா. ஒரு செவன் அப்" ஆல்டோ கடைக்காரரிடம் கூறினான்.

"இங்க வெள்ளைக் கலர் கார் வச்சிருப்பாரே. அவர் வீடு எது?"

"புரொபசர் வீடா? அந்த மூணாவது வீடு சார்." தெற்கு நோக்கி இருந்த பெரிய தனி வீட்டைக் காட்டினார் கடைக்காரர்.

"ஆள் இருக்காரா?"

"இன்னைக்கு காலையில் பால் வாங்க வந்தார் சார். கொஞ்ச நேரம் கழிச்சு ரெண்டு பேர் அவர் வீட்டுப் பக்கம் வந்தாங்க. பிறகு கார்ல எல்லாரும் வேகமா போனாங்க. அதுக்குப் பிறகு இன்னும் திரும்பல."

"அவங்க போகும் போது எத்தனை மணி இருக்கும்?"

"ஏழு, ஏழரை மணி இருக்கும் சார்."

மூவரும் தெற்கு நோக்கிய மூன்றாவது வீட்டைக் கவனமாக அணுகினர். ஞானப்பிரகாசம் காம் பௌண்ட் கதவைத்திறந்து அழைப்பு மணியை அழுத்தினார். ஐந்து நிமிடங்கள் காத்திருந்த பின் னரும் வீட்டிற்குள் எந்தச் சலனமும் இல்லை. ஆல்டோ வீட்டின் தலைவாசல் கதவை லேசாகத் தள்ளிப்பார்த்தான். எதிர்ப்பின்றி திறந்துகொண் டது. உள்ளிருந்து கெட்டுப்போன உணவுகளின் துர்நாற்றம் வீசியது. வீட்டிற்குள் ஆள் இருப்ப தற்கான அறிகுறி எதுவுமில்லை. தொலைக்காட் சிப் பெட்டி சத்தமில்லாமல் ஓடிக்கொண்டிருந் தது. மின்விசிறிகளும் அணைக்கப்படாமல் ஓடிக் கொண்டிருந்தன. அதைவிட முக்கியமான ஒன்று, ஆல்டோ உள்ளே நுழைந்த இரண்டாவது நிமி டத்தில் கண்டு கொண்டான். வெள்ளை டைல்ஸ் தரையில் கருஞ்சிவப்பு நிற பொட்டுக்களாகக் காய்ந்த இரத்தம் சீரான இடைவெளியில் வாசல் வரை இருந்தது. உடனடியாக ஆல்டோ மற்ற இருவரையும் உள்ளே வர வேண்டாம் எனச் சைகை செய்தான். முழுவீட்டையும் தடய அறிவி யல் சோதனை செய்ய வேண்டும்.

அத்தியாயம் -14

கி.பி 2011 ஆம் ஆண்டு, கம்போடியா தேசம்.

இளந்திரையன் தனது அந்திமக் காலம் நெருங்குவதை உணர்ந்தே இருந்தான். இயக்கத்தில் இருந்து தப்பிப் பிழைத்த ஒரே இரண்டாம் கட்டத் தலைவன் அவன் மட்டும் தான். எப்படியும் பிடித்துவிட வேண்டுமென்று உளவுத்துறையும் இராணுவமும் கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறது. ஏனென்றால் இயக்கத்தின் நிதித் துறை பொறுப்பாளர் இளந்திரையன் தான்.

இளந்திரையனிடம் 13 போலி பாஸ்போர்ட்கள் இருந்தன. இரண்டு நாடுகளில் வேறு பெயர்களில் குடியுரிமை பெற்றிருந்தான். கேமன் தீவுகள், ஹாங் காங், பிரிட்டிஷ் விர்ஜின் தீவுகள், மொரீஷியஸ் உள்ளிட்ட பல நாடுகளிலும் 50க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகள் அவனது கட்டுப்பாட்டில் இருந்தன. நிழல் உலக TOR வகை டார்க்நெட் இணையப் பயன்பாட்டில் அவனை அடித்துக் கொள்ள ஆசியாவிலேயே யாரும் இல்லை. ஒரே ஒரு மடிக் கணினி மற்றும் இணைய இணைப்பை வைத்து இயக்கத்தின் மொத்த நிதியையும் சுண்டுவிரல் அசைவில் வைத்திருந்தான்.

இயக்கத்தில் இளம் வயதிலேயே இத்தனை அதிகாரமிக்க பதவிக்கு வந்தது தலைவருக்கு அடுத்து இவன்தான். அதற்கு இளந்திரையனின் கனிவான பேச்சும், வைரத்தை அறுக்கும் இரம்பத்தை ஒத்த

கூர்மையான அறிவுமே காரணம் என இயக்கத்த வர்கள் பேசிக்கொண்டனர்.

இறுதிக்கட்ட போர் நிறைவடைந்து ஆயுதங் கள் மௌனிக்கப்பட்ட பின் உண்மையில் நிதி நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. இறுதிக் கட்ட போரின் போது மூழ்கடிக்கப்பட்ட ஒவ்வொரு கப்பலிலும் பல மில்லியன் டாலர்கள் மதிப்புள்ள ஆயுதங்கள் நட்டமாயின. உலக அளவில் தீவிர வாத இயக்கங்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நட வடிக்கைகளால் பல்வேறு வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்டன.

தேவையை உணர்ந்து கொண்ட கள்ளச்சந்தை ஆயுத வியாபாரிகள் பத்து மடங்கு விலை ஏற்றி விற்றனர். இயக்கத்தின் முப்பது வருட சேமிப்பும் இரண்டே வருடங்களில் கரைந்தது. பல இடங்க ளில் இருந்து வர வேண்டிய தொகை அப்படியே மறக்கப்பட்டது அல்லது மறைக்கப்பட்டது. முடக் கப்படாத வங்கிக்கணக்குகளில் இருந்த சிறு சிறு தொகைகளையும் வழித்தெடுத்து தான் போரின் இறுதிக் காலங்களில் இளந்திரையன் செலவழித் தான். ஒரு கட்டத்தில் அனைத்து நிதி ஆதாரங்க ளும் வறண்டு போயின. ஆனால் அதற்குள், நிதியே இருந்தாலும் இயக்கத்திடம் கொண்டு சேர்க்க முடி யாத அளவு இயக்கம் சுற்றி வளைக்கப்பட்டிருந்தது. சிறிது நாட்களில் அனைத்தும் முடிந்துவிட்டது. எந்த இயக்கத்திற்காக தனது வாழ்வின் 12 வருடங் களைத் தலைமறைவு வாழ்க்கையில் தொலைத் தானோ அந்த இயக்கம் எரிந்து முடித்த கொசு வர்த்திச் சுருள் போல சாம்பலாகிக் காற்றோடு கரைந்திருந்தது.

போருக்குப் பின்னான இரு வருடங்களாக எதற்கு வாழ்கிறோம் என்று தெரியாமலேயே வாழ்ந்து வரு

கிறான் இளந்திரையன். இயக்கமே இயக்கத்தில் இல்லை. நிதிச் செயலாளரிடம் நிதியும் இல்லை.

அத்தியாயம் - 15

Food givers life givers - உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே. இந்த வரியைப் பார்த்தவு டன் பேராசிரியருக்கு பழைய நினைவுகள் தோன் றின.

ஒரு மாலை நேரம், நாகப்பட்டினம் கடற்கரையில் ஜெயச்சந்திரனும் இளந்திரைய னும் அமர்ந்திருந்தனர். அப்போது இளந்திரையன் பொறியியல் படிப்பை முடித்து, அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் நல்ல பணியில் இருந் தான்.

தனது கால்சட்டைப் பையில் இருந்து ஒரு பரிசுப் பெட்டியை எடுத்து பேராசிரியரிடம் தந்தான். பேரா சிரியர் பிரித்துப் பார்த்தார். விலையுயர்ந்த ஒமேகா ஸ்பீட் மாஸ்டர் கைக்கடிகாரம் உள்ளே இருந்தது.

"இந்த வாட்ச் தான் நிலவில் மனுசங்க கட்டின முதல் வாட்ச் புரொபசர். நீல் ஆம்ஸ்ட்ராங் கூடப் போன ஆல்ட்ரின் பஸ் இதே மாதிரி ஒரு வாட்ச் சைக் கட்டிட்டு தான் நிலவில் நடந்தார். மூன் வாக்." எழுந்து மைக்கேல் ஜாக்சன் போல நடந்து காட்டி னான்.

பேராசிரியருக்கு கண்ணீர் திரையிட்டது. கைக் கடிகாரத்தின் விலையை விட இளந்திரையனின் அன்பு அவரைத் திகைக்க வைத்து. அப்படி என்ன

செய்து விட்டோம் இந்தப் பையனுக்கு, ஏன் இவ்வளவு பாசம் காட்டுகிறான்?

"தம்பி, இப்போது தான் நீ படிச்சு முடிச்சு வேலைக்கு போக ஆரம்பிச்சிருக்க. பணத்தை இப்படி வீணாக்காதே. எனக்கு இந்த பரிசெல்லாம் எதுக்கு?"

"புரொபசர், உங்களுக்கு வேணும்னா எல்லாம் மறக்கும். எனக்கு எதுவுமே மறக்காது. நம்ம ரெண்டு பேரும் எப்ப முதல்ல சந்திச்சோம்னு நினைவு இருக்கா?"

அப்போது பேராசிரியர் விரிவுரையாளராக தற்காலிகப் பணியில் ஒரு கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தார். செப்டம்பர் 17, பெரியார் பிறந்த நாள் விழாவிற்காக இலங்கை அகதிகள் முகாமில் உதவி வழங்கும் விழா ஒன்றை அவரது கல்லூரி ஏற்பாடு செய்திருந்தது. அங்கு தான் இளந்திரையனைக் கண்டார். நாகப்பட்டினத்தில் இலங்கை அகதிகள் முகாம் அப்போது புயல் பாதுகாப்பு கட்டிடத்தில் தற்காலிகமாகச் செயல்பட்டு வந்தது.

1983ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தில் ஓர் இரவு நேரத்தில் இளந்திரையனின் குடிசையை டிராக்டர் வைத்து இடித்தனர். இளந்திரையனின் பெற்றோர்கள் டிராக்டருக்கு அடியில் சிக்கி மரணிக்க இளந்திரையன் மட்டும் தப்பித்தான். தன் உறவினர்கள் உதவியால் தமிழ்நாடு அகதிகள் முகாமில் தஞ்சமடைந்தான். தாய் தந்தையரோடு இருக்கும் குழந்தைக்கே அகதி வாழ்வு கடினம் எனும் போது இளந்திரையன் பாடு சொல்லவா வேண்டும்?

அவனைப் பக்கவாட்டில் நிற்க வைத்துப் பார்த்தால், எந்த இடத்தில் முதுகு முடிந்து வயிறு ஆரம்பிக்கிறது என்று பிரித்தறிய முடியாத அளவு ஒட்டிய

வயிறுடன் இருந்தான். குச்சி குச்சியான தொடைக ளில் கிழிந்த அரைக்கால் டிராயர் மட்டும் அணிந்தி ருந்தான். இளந்திரையனின் தோற்றம் ஜெயச்சந் திரனை என்னவோ செய்ததது.

பெரு முயற்சி எடுத்து ஆவணங்கள் தயார் செய்து பள்ளியில் சேர்த்தார். பள்ளியில் வழங்கும் இலவச மதிய உணவுதான் இளந்திரையனின் உயிர் ஆதா ரம். அதன்பின் தான் ஒரு வேளையாவது வயிறு நிறையும் அளவு உண்டான். அப்பள்ளியின் சத் துணவுப் பொறுப்பாளர் இவன் மீது இரக்கம் கொண்டு மீதமான சோறைக் கொடுத்துவிடுவார். அது தான் இரவு உணவு. நேரமானால் கெட்டு விடும் என்பதால் ஐந்து மணிக்கே சாப்பிட்டுவிடு வான்.

விடுமுறை தினங்கள் வந்தால் பட்டினி தான். பாது காவல் பொறுப்பெடுத்திருந்த உறவினர் குடும்பம் நல்லவர்கள் தான் என்றாலும் அவர்கள் வாழ்க் கையே போராட்டமாக இருக்கும் போது இவனை எப்படிக் கவனிப்பார்கள்? இளமை முழுவதும் பசி யுடன் போராடுவதிலேயே கழிந்தது. விடுமுறை தினத்தில் உணவுக்கு அவன் கஷ்டப்படுவதைக் கண்ட ஜெயச்சந்திரன், தானே அப்பொறுப்பை யும் ஏற்றுக் கொண்டார். பள்ளியின் சத்துண வும், ஜெயச்சந்திரனும் இல்லையென்றால் என்றோ இறந்திருப்பான். 1989ல் கலைஞர் அரசு, இலங்கை அகதி மாணவர்களுக்கு பொறியியல் கல்லூரிக ளில் 40 இடங்களை ஒதுக்கீடு செய்தது. பள்ளிப் படிப்பே எட்டாக் கனியாக இருந்தவன் பொறியி யல் முடித்தான். இன்று சான்பிரான்சிஸ்கோ வரை சென்றுவிட்டான்.

"குடிபிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்

நாணணி களையும் மானெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி; அது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக் கென்நா நிமிராது" மூச்சு விடாமல் கூறினான் இளந்திரையன்.

"இப்படி பசி தீர்த்தவங்களோட பெருமையை நான் சொல்லல. மணிமேகலை சொல்லுது. நீங்க ஒரு வாட்ச்க்கே எமோஷனல் ஆகுறீங்க."

"உன்னை இஞ்சினியரிங் படிக்க வைச்சா இலக்கியம் படிச்சு வச்சிருக்க." செல்லமாக கோபப்பட்டுக் கொண்டே கையை ஓங்கினார்.

"நீங்க தான் காரணம். உண்டி கொடுத்தோர். உயிர் கொடுத்தோரே."

“எப்ப அமெரிக்கா திரும்புற?”

“இல்லை புரொபசர். நான் திரும்ப அமேரிக்கா போகல. இயக்கத்திற்குப் போகப் போறேன்”

பேராசிரியருக்கு என்ன சொல்வதென்றே தெரிய வில்லை.

அத்தியாயம் -16

பேராசிரியர் ஜெயச்சந்திரன் (வயது 57) என்பவரது மகிழுந்துதான், ஆளுநர் மகிழுந்தை இடித்திருக்க லாம் எனச் சந்தேகிக்கிறோம். அவர் மட்டும் நாகப் பட்டினம் மறைமலர் நகர் இரண்டாவது குறுக்குத் தெருவில் உள்ள வீட்டில் தனியாக வசித்து வந் துள்ளார். திருமணமாகவில்லை. ஜெயச்சந்திரன் ஒரு தனியார் பொறியியல் கல்லூரியில் பேராசிரிய ராக இருக்கிறார். ஆனால் தமிழில் அதிக ஆர்வம் உடையவர். கடந்த ஒரு வருடமாக விடுப்பு எடுத்து, குமரிக்கண்டம் பற்றிய தனது ஆய்வை செய்து வந் துள்ளார். நேற்று காலை இருவர் அவரது வீட்டிற்கு வந்துள்ளனர். பிறகு அவரது கார் வேகமாக வீட்டை விட்டு கிளம்பிச் சென்றிருக்கிறது. அந்தப் பகுதி யில் சிசிடிவி கேமரா எதுவும் இல்லாததால் மேல திக விரவரங்கள் தெரியவில்லை.

அவரது வீட்டின் தரையில் சுமார் 20 மில்லிமீட்டர் விட்டத்தில் இரத்தத்துளிகள் சீரான இடைவெளி யில் இருந்தன. ஐந்து முதல் ஆறு அடி உயரத் தில் இருந்து விழுந்ததால் ஏற்பட்ட இரத்தக்கறை அமைப்பு (Blood stain pattern) என கருதுகிறோம். அடிபட்ட நபரின் தலை அல்லது மூக்கில் இருந்து இரத்தம் வடிந்திருக்கலாம். வீட்டில் இருந்து கைப் பற்றப்பட்ட சான்றிதழ்களில் உள்ள பேராசிரியரின் இரத்த வகையும், வீட்டில் கிடைத்த இரத்தத் துளி யின் இரத்த வகையும் ஒத்துப் போகவில்லை. வேறு

ஒருவரின் இரத்தமாகத்தான் இருக்க வேண்டும். அலைபேசி, பணப்பை, ஓட்டுனர் உரிமம் உள் ளிட்ட அனைத்துப் பொருட்களும் வீட்டிலேயே உள்ளன. மின்சாதனப் பொருட்கள் இயங்கியபடி இருந்தன. வீடு பூட்டப்படாமல் இருந்தது. சூழ்நி லையை உற்று நோக்கும் போது அவர் கடத்தப்பட் டிருக்க வாய்ப்பு அதிகம்.

- இதுவரை கிடைத்த தகவல்களின் அடிப்ப டையில் அறிக்கையைத் தட்டச்சு செய்து மின்னஞ் சலில் இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பினான் கார்த்திக் ஆல்டோ.

சிறிது நேரத்தில் நாகப்பட்டினம் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்த கணொளி அழைப்பு வசதி மூலம் இயக்குநர் அருள்மொழி ஆல்டோவை தொடர்பு கொண்டார்.

"அடுத்து என்ன பண்ணப் போறீங்க கார்த்திக்?"

"சென்னையில் இருந்து நானும் திருவும் மட்டும் தான் வந்தோம் சார். கோபியுடன் மற்ற டீம் மெம் பர்களையும் வரச் சொல்லியிருக்கேன். மோட்டிவ் ஏதாவது இருக்கான்னு விசாரணை பண்ணிட்டு இருக்கோம்."

"அவரோட செல்போன், ஈமெயில், சோசியல் மீடியா அகௌண்ட் எல்லாம் செக் பண்ணிடுங்க."

"சோசியல் மீடியால அவர் ஆக்டிவாக இல்லை சார். செல்போன் வீட்ல தான் இருக்கு. கடைசியா மூன்று நாளைக்கு முன்னாடி அவர் தங்கையிடம் தான் பேசியிருக்கார். வேற அழைப்பு எதுவும் வரலை. அவரோட ஈமெயிலில் அகாடமிக் சம்பந்தமான மெயில் தான் நிறைய வந்திருக்கு. சமீப காலத் தில் வந்த எல்லா மெயிலையும் அனாலிசிஸ் பண் ணிட்டு இருக்கோம் சார்."

"அவரோட தங்கை, மற்ற உறவினர்கள்கிட்ட விசாரிங்க. அவர் வேலை பார்த்த கல்லூரியிலும் விசாரிங்க. மோட்டிவ் கிடைக்கலாம். காரோட நம்பரையும், அவருடைய புகைப்படங்களையும் எல்லா ஸ்டேசனுக்கும் அனுப்பி வைங்க. சென்னை நாகப்பட்டினம் நெடுஞ்சாலையில் வேறு சிசிடிவி கேமராவில் கார் பதிவாயிருக்கான்னு பாருங்க. காரை லொகேட் பண்ண முயற்சி பண்ணுங்க."

"ஓகே சார்."

“கிடைச்ச இரத்தத்தை அனாலைசிஸ் செய்து டி. என்.ஏ புரோஃபைலிங் பண்ணிடுங்க. இப்பப் பயன்படலைனாலும் பின்னாடி பயன்படும்."

"ஏற்கனவே பண்ணியாச்சு சார். இன்னும் கொஞ்ச நேரத்தில் ரிசல்ட் வந்திரும்"

"நம்ம கிட்ட இருக்க சாம்பிள்ஸ் குறைவு தான். மேட்சிங் வர்றதுக்கு வாய்ப்பு இல்லன்னு தான் தோணுது."

"ஆமா சார். நம்ம இப்ப தான இதை ஆரம்பிச்சு இருக்கோம். ஆனா டேட்டாபேஸ் உருவாக்கிட்டா எதிர்காலத்தில் வசதியா இருக்கும்."

“சரி கார்த்திக். ஏதாவது முக்கிய விசயம் கிடைச்சா கால் பண்ணுங்க"

"கண்டிப்பாக சார்.”

அழைப்பை துண்டித்த பின் கோபிக்கு அழைத்தான். பாண்டிச்சேரியில் இருக்கும் பேராசிரியரின் தங்கையை விசாரிக்கும்படி கூறினான்.

அத்தியாயம் -17

இளந்திரையன் முடிக்க வேண்டிய பணி ஒன்று மிச்சமுள்ளது.

“ஓபரேஷன் மாயப் பெருநிலம்”

தாரணி படையணியால் கடத்தப்பட்ட நாற்பது கிலோ தங்கத்தை போரின் போது ஆயுதமாக மாற்ற முடியவில்லை. அது நன்மையோ தீமையோ தெரி யவில்லை. இப்போது அந்த நாற்பது கிலோ தங்கம் மட்டும் தான் இயக்கத்திற்கென தற்போது இருக் கும் ஒரே சொத்து.

வட இந்திய சாமியார் ஒருவர் தங்கத்தில் கோவில் கட்ட பெருமளவு தங்கத்தை கொள்வனவு செய்கி றார். அவரது நிர்வாகி வேதாரண்யம் வந்து வைத்தி யிடம் பேசிவிட்டு எல்லாம் சென்றுவிட்டார். தங்கம் கைமாறிய உடன் அதற்கான பணம் முடக்கப்படாத சர்வதேச வங்கிகளில் ஏறிவிடும்.

அப்போது தான் மறை நாணயங்கள் (cryptocurrency) அறிமுகமாகி இருளிணைய உலகில் (Dark net) புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. மறை நாணயம் பற்றிய செய்தி வெளி உலகில் பரவலாக பரவாத காலம். மறை நாணயம் தான் இயக்கத்தின் சொத்துக்களை எதிர்காலத்திற்கு கடத்த சிறந்த வழி என இளந்தி ரையனின் நுண்ணறிவு உணர்ந்து கொண்டது.

தனது சேட்டிலைட் தொலைபேசி வழியே வைத் தியை தொடர்பு கொண்டான். நாற்பது கிலோ தங் கமும் கைமாறியது. ஓரிரு நாளில் மொத்தப்பண மும் வங்கிக் கணக்கில் ஏறிவிட்டது. சாமியார்களின் கணக்கை மட்டும் முடக்க மாட்டார்கள் போல. நீண்ட பேரத்திற்குப் பின் ஒரு கிராம் தங்கம் மார் கெட் விலையை விட குறைவாக $35.27USD எனும் அளவில் விற்கப்பட்டது. மொத்தம் 1.4 மில்லியன் டாலர் கிடைத்தது. சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் 1,410,800 அமெரிக்க டாலர்கள். வைத் திக்குச் சேர வேண்டிய ஒரு லட்சம் டாலரையும், மேலும் பழைய இயக்கக் கடன்களையும் அடைத்த பின் 1.2 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மிஞ்சின.

இளந்திரையன் அனைத்தையும் மறைநாணய மாக மாற்றினான். அப்போது இருந்த மறை நாண யங்களிலேயே அதிக நம்பிக்கை அளிக்கக் கூடிய தாக பிட்காயின் இருந்தது. நான்கு டாலர்களுக்கு ஒரு பிட் காயின் என்ற விலையில் மூன்று லட்சம் பிட்காயின்களை வாங்கினான்.

தன் காலத்திற்குப் பிறகு மறைநாணயப் பணப் பையை (cryptocurrency wallet) நிர்வகிக்க ஆள் வேண்டும். இவ்வளவு பெரிய தொகையை தான் நம்பி விட்டுச் செல்லும்படி நம்பிக்கைக்குரியவர்க ளாக வேண்டும். இயக்கத்தில் வெளிப்படையாக இயங்குபவர்களாக இருக்கக் கூடாது. அதேசமயம் இயக்க நடவடிக்கைகள் அனைத்தையும் அறிந்த வர்களாக இருக்க வேண்டும்

அப்படி ஆட்களைத் தேர்வு செய்வதில் இளந்தி ரையனுக்கு பெரிதாக குழப்பம் ஏதுமில்லை. அவர் களை முன்னரே இயக்கம் தீர்மானித்து வைத்தி ருந்தது.

முதல் நபர் செல்வராசா நடராசன். இளந்தி ரையனோடு இந்தியாவிற்கு அகதியாக வந்தவன். படிப்பு முடிந்து இருவரும் இயக்கத்திற்கு திரும் பிய போது, அவசரகாலத் தேவைக்காக செல்வ ராசாவை வெளிப்படையான தொடர்பில் இருந்து விலகியிருக்கும்படி இயக்கம் பணித்தது. தற்போது மலேசியாவில் குடியுரிமை பெற்று வசிக்கிறான்.

இரண்டாவது நபர் பேராசிரியர் ஜெயச்சந்திரன். இளந்திரையனின் வளர்ப்புத் தந்தை எனக் கூற லாம். அவனுக்கு உணவு, உடை கொடுத்து, பள்ளி யில் சேர்த்து, பொறியியல் படிக்க வைத்து ஆளாக் கியவர். இயக்கத்தின் தீவிர அனுதாபி. தலைமை யுடன் நினைத்த நேரம் பேசுமளவு நட்புடையவர். பெயர் வெளியில் தெரியாமல் அவர் நிகழ்த்திய அற்புதங்கள் பல.

மூன்றாவது நபர் விநாயகம். இயக்க முன்னோ டிகளில் ஒருவரான செல்வநாயகத்தின் மகன். தற் போது பிரித்தானிய அரச அலுவலகத்தின் உயர் பொறுப்பில் உள்ளார். இயக்க முன்னோடியின் மகன் என்ற மரியாதையை இயக்கம் எப்போதும் வழங்கி வந்தது. அவசர நிலையில் இயக்கத்தை காக்க உறுதி பூண்டவர்.

மூவருக்கும் இவற்றை விளக்கமாகத் தெரியப்படுத் தினான்.

அத்தியாயம் - 18

Food givers life givers என்ற வரியைப் பார்த்தவுடன் பேராசிரியருக்கு புரிந்துவிட்டது. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" மணிமேகலைப் பாடலைத் தான் குறிப்பிடுகிறான் இளந்திரையன்.

பேராசிரியரின் முகத்தில் புன்முறுவலைக் கண்ட நந்தாவும் விபுலேந்திரனும் மகிழ்ச்சி அடைந்தனர்.
"பேராசிரியரே! விளங்கிடுச்சா?" நந்தா கேட்டான்.

பேனாவை வாங்கி காகிதத்தில் எழுதினார். "Food givers life givers - உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"
நந்தாவும் விபுலேந்திரனும் அதைப் படித்துப் பார்த்தனர்.
"இது ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் வரும் வரி. இளந்திரையனுக்கு மிகவும் பிடித்த வரி. ஆனால் அதை ஏன் இங்கு குறிப்பிடுகிறான் எனப் புரியவில்லை."

"ஒரு வேளை அடுத்தடுத்த வரிகளுடன் சேர்த்துப் படித்தால் புரியுமோ?" நந்தா கேட்டான்.

"ஆமா. எல்லாத்தையும் சேர்த்து அர்த்தம் கண்டுபிடித்தால் தான் அந்த எண்ணை கண்டுபிடிக்கலாம்."

"அப்ப அடுத்த வரியைப் பாருங்க."

"அது என்ன என எனக்கு ஒன்றுமே புரியவில்லை. Outer cd 19. ஒரு சின்ன ஐடியா கூட தோணல.”

விபுலேந்திரன் தீவிரமாக யோசித்தான். இயக் கத்தின் இராணுவ நடவடிக்கைகளை குறிக்கும் வார்த்தை போல் தெரிகிறது.

இந்த CD எனும் வார்த்தை ஏதேதோ நினைவு களைக் கிளறியது. ஆனால் அனைத்தும் மேகக் கூட்ட நிலவு போல மங்கலாக நினைவுக்கு வந்தன.

"சி.டி... சி.டி..." தன் வாய்க்குள் முணகினான்.

"ஒருவேளை இயக்கப் பாடல்கள் வந்த சி.டியாக இருக்குமோ?
கூர் வாளினை எடடா...டப்ச்சிக் டப்ச்சிக்.... காடை யனை சுடடா டப்ச்சிக் டப்ச்சிக்க்” நந்தா தனது கட் டைக்குரலில் பின்னணி இசையுடன் சேர்த்துப் பாட ஆரம்பித்தான்.

"நந்தா, கொஞ்சம் நிறுத்துறீங்களா?" பேராசிரியர் கடுப்பானார்.

நந்தாவின் குரல் அவனுக்கே நறநறவென இருந் தது போல. மறுபேச்சின்றி நிறுத்தினான்.

"இது இயக்கம் பயன்படுத்திய இரகசிய குறிச் சொல். நான் கேட்டுருக்கேன்." விபுலேந்திரன் கத் தினான். "இயக்கத்தில் நேரடிப் போரில் இருந்த தளபதிகளுக்கு நிச்சயம் தெரியும்".

நந்தா கவலையுடன் பார்த்தான். "அப்ப உங்களால முடியாதா?"

"நான் நேரடிப் போரில் இருந்ததில்லை. ஆனால் மூத்த தளபதிகளோடு உரையாடும் போது கேட் டுள்ளேன். இது இராணுவ நடவடிக்கை குறிச்

சொல். நேரடி இராணுவ நடவடிக்கையில் இருந்த வர்கள் உடனே சொல்வார்கள்."

அத்தியாயம் -19

ஆல்டோவின் அலைபேசி "கிர்ர்ர்ரர்" என வைப்ரேட் மோடில் அதிர்ந்தது. பல விவாதங்கள், அலைபேசி அழைப்புகள், யோசனைகளுக்குப் பிறகு இரவு மூன்று மணிக்குத் தான் உறங்கச் சென் றிருந்தான். சத்தம் வருவது வீட்டின் அழைப்புமணி யில் இருந்தா, அலைபேசியில் இருந்தா என்பது புரியவே அவனுக்குப் பத்து நொடிகள் ஆயின.

"நாகப்பட்டினம் கன்ட்ரோல் ரூம்ல இருந்து பேசு றோம் சார். நீங்க கொடுத்த நம்பர் உடைய வெள்ளை நிற ஸ்விஃப்ட் கார் அரியலூர் கிட்ட யாருமில்லாமல் நிற்பதாகத் தகவல் வந்துள்ளது."

ஆல்டோ எழுந்து நேரத்தைப் பார்த்தான், காலை ஆறு மணி. வெளியில் இருள் இன்னும் விலக வில்லை. ஆனால் தொலைபேசியில் வந்த செய்தி அவனது தூக்கத்தை விரட்டியிருந்தது. அரைத் தூக்கத்தில் இருந்த திருவையும் அழைத்துக் கொண்டு உடனடியாக அரியலூர் கிளம்பினான்.

அரியலூருக்கும் பெரம்பலூருக்கும் இடையேயான பகுதியில் பிரதான சாலையைவிட்டு சிறிது தூரத் தில் பொட்டல் காட்டில் அந்தக் கார் நின்றிருந்தது. ஆல்டோ அவ்விடத்தை அடையும் போது காலை 10 மணி ஆகியிருந்தது. அதிகாலை நேரத்திலேயே வந்திருந்த, தடய அறிவியல் பிரிவினரும் அரியலூர் மாவட்ட காவல்துறையும் அங்கு தங்கள் வேலைக

ளைத் தொடங்கியிருந்தனர். கவர்னர் கேஸ் என் றால் சும்மாவா, ஆல்டோ நினைத்துக் கொண் டான்.

காரில் இருந்து, பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில், இரத்தம் தோய்ந்த டிஷ்யூ காகி தம் மற்றும் பல கைரேகைகள் கிடைத்திருந்தன. காருக்கு அருகில் மற்றொரு காரின் டயர் தடம் கிடைத்தது. தடய அறிவியல் குழுத் தலைவர் சிவக்குமார், ஆல்டோவைப் பார்த்து கையசைத் தார். வாஷிங்டனில் தடயவியல் பயிற்சி பெற்றவர் என்பதால் வாஷிங்டன் சிவா என அவரை டிப் பார்மெண்டில் அழைப்பர். கார்த்திக் ஆல்டோவின் நெருங்கிய நண்பர்.

"நிறைய க்ளூ கிடைச்சிருக்கு கார்த்திக். பட் வீ நீட் டைம் டு அனாலிசிஸ். முதற்கட்ட சோதனையில் ஜெயச்சந்திரன் வீட்டில் கிடைச்ச கைரேகைகளும் இந்தக் காரில் கிடைச்ச கைரேகைகளும் ஒத்துப் போகுது. அங்க கிடைச்ச இரத்தம் தான் இந்த டிஷ்யூ பேப்பரில் இருக்கான்னு லேப்ல அனாலை சிஸ் பண்ணினா தான் தெரியும்."

"இந்தக் கார் டயர் தடம்?"

"வீல் பேஸ், காரோட அகலம், டர்னிங் ரேடியஸ் வச்சு பார்க்கும் போது இன்னோவா மாதிரி தெரி யுது. கன்ஃபார்மா சொல்ல முடியல. அதேமாதிரி மெயின் ரோட்டில் இருந்து வரும் போது அழுத் தம் குறைவாகவும், திரும்பப் போகும் போது நல்ல அழுத்தமாகவும் டயர் தடம் பதிவாயிருக்கு. அத னால் இந்தக் காரில் வந்தவர்களும் அதில் ஏறிப் போயிருப்பாங்கன்னு சொல்லலாம். அதுபோக சில கால் தடங்கள் கிடைச்சிருக்கு. அதையும் அனா லைசிஸ் பண்ணனும்."

அத்தியாயம் -20

விநாயகம் பிரித்தானிய அரச அலுவலகம் ஒன்றில் முக்கிய பொறுப்பில் இருந்தார். அவரது மனைவி ஜெயந்தியும் அரச ஊழியர் தான். குழந்தை இல்லை என்றாலும் மகிழ்ச்சியாகவே வாழ்ந்து வந்தனர். ஜெயந்தியின் சகோதரன் விபுலேந்திரன், இயக்கத்தில் அதிக ஈடுபாடு கொண்டவன். பிரித்தானிய பொறுப்பாளராகச் செயல்பட்டவன். இயக்கத்திற்காகப் பலமுறை சிறை சென்றவன்.

ஒருமுறை விநாயகம் சென்ற மகிழுந்து விபத்திற்குள்ளானது. இரண்டு மாத மருத்துவமனை வாசத்திற்குப் பிறகு வீடு திரும்பினார். கைகளிலும் கால்களிலும் எலும்பு முறிவு இருந்ததால் வாக்கர் வைத்து கூட நடக்க முடியாத நிலை. விபுலேந்திரன்தான் விநாயகத்தை முழுமையாகப் பார்த்துக் கொண்டான்.

மூன்று மாத காலத்தில் இருவரும் நெருங்கிய நண்பர்கள் ஆகிவிட்டனர். ஒன்றாக உட்கார்ந்து "ஜோனி வோக்கர்" குடிக்கும் அளவு. ஏனென்றால் விநாயகம் கண்ணாடி முன் உட்கார்ந்து தனியாக குடிக்கும் வழக்கம் உடையவர். வேறு யாரோடும் சேர்ந்து குடிக்க மாட்டார். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அவற்றை மீறி, முதன்முறையாக விபுலேந்திரனோடு சேர்ந்து குடிக்க ஆரம்பித்தார்.

அப்படி ஒருநாள் போதையில் விநாயகம் உளறும் போது தான் நாற்பது கிலோ தங்கம் பிட்காயினாக மாறிய விடயம் விபுலேந்திரனுக்கு தெரியவந்தது.

"சும்மா பேச்சுக்குச் சொல்லல, இப்ப இயக்கத் தோட எதிர்காலம் என்ட கையில் தெரியுமா?" என்று ஆரம்பித்த உரையாடல் நிறைய இரகசியங் களின் ஆடைகளை உருவி நடுச்சபையில் நிறுத் தியது.

மறுநாள் எழுந்து பார்த்த போது முகத்தைக் கடு மையாக வைத்துக்கொண்டு பேச மறுத்து விட் டார். அதோடு இவனுடன் இருந்த தொடர்பை யும் அறுத்துக் கொண்டார். இவனைப் பார்த்தாலும் பேசாமல் வேறுபக்கம் சென்றுவிடுவார். விபுலேந் திரனும் அதன் பின் அவர் வீட்டிற்குச் செல்வதைக் குறைத்துக் கொண்டான். மூன்று மாதம் கழித்து வந்த அந்த வருடத்தின் ஒரு குளிர் கால நாளின் காலைவேளையில் மாரடைப்பில் விநாயகம் இறந் துவிட்டதாக விபுலேந்திரனுக்கு மரண அறிவித்தல் செய்தி வந்தது.

அத்தியாயம் - 21

"நான் நேரடிப் போரில் இருந்ததில்லை. ஆனால் மூத்த தளபதிகளோடு உரையாடும் போது கேட்டுள்ளேன். இது இராணுவ நடவடிக்கை குறிச் சொல். நேரடி இராணுவ நடவடிக்கையில் இருந்த வர்கள் உடனே சொல்வார்கள்." என விபுலேந்தி ரன் கூறியதைக் கேட்ட பேராசிரியர்,

"யாராவது மொபைல் போன் வச்சிருக்கீங்களா?" எனக் கேட்டார்.

"மொபைல் போன் நம்மை நாமே காட்டிக் கொடுக் கும் விசிட்டிங் கார்ட். அதனால் உங்க வீட்டுக்கு வந்ததுக்கு முன்ன இருந்து நாங்க மொபைல் போன் பயன்படுத்தல புரொபசர்" விபுலேந்திரன் கூறினான்.

"அப்ப இந்த இணையத் தொடர்பு எப்படி வருது?"

"ஒரு மொபைல் போனில் சர்க்யூட் மாத்தி வச்சிருக் கேன். கால் போகாது. இணைய இணைப்பு மட்டும் கிடைக்கும். பத்து மணி நேரம் கழித்து தன்னால் ஷார்ட் சர்க்யூட் ஆகி வெடித்து கருகி விடும்படி செட் செய்துள்ளேன். போலிஸ் கையில் சிக்கினா லும் இந்த போன் வெடித்துவிடும். ஒரு தகவலும் வெளிவராது. இன்னும் சிறிது நேரத்தில் இப்படி ஒரு போன் இருந்த தடமே தெரியாது." விபுலேந்தி ரன் கூறினான்.

பேரசிரியரின் முகம் வாடியது.

"இப்ப எதுக்கு பேராசிரியரே இந்த அலைபேசி ஆராய்ச்சி?" நந்தா கேட்டான்.

"எனக்குத் தெரிந்த போராளி ஒருவர், களமுனை யில் போரிட்டுள்ளார். இப்ப அவர் இராமேஸ்வரத் தில் உள்ளார். இளந்திரையனின் நண்பர். ஒன்றாக களத்தில் இருந்தவர்கள். அவர் அகதியாக வந்த போது சில உதவிகள் செய்துள்ளேன். அவரிடம் வேண்டுமானால் விசாரித்துப் பார்க்கலாம். ஏதா வது தகவல் கிடைக்கும். ஆனால் மொபைல் நம்ப ரும் தெரியாது."

"இப்ப இருக்கிற அவசரத்தில் அலைபேசி எண் கண்டுபிடிச்சு அவர்கிட்ட பேசி புரியவச்சு..... இதெல்லாம் நடக்கிற காரியமா? " நந்தா எரிச்சலா னான்.

"ஒன்னு பண்ணலாம். இரண்டு மணிநேரம் தான் காரில் நேர இராமேஸ்வரமே போய்டலாம்." அவனே கூறினான்.

"இராமேஸ்வரம்னா இராமேஸ்வரம் இல்லை. மண்டபம் கேம்ப்"

"எல்லாம் ஒரே நேரம் தான். வாங்க போலாம்."

“அரை மணி நேரம் பொறுங்க." விபுலேந்தி ரன் தனது பையில் இருந்து ரப்பர் கையுறையை அணிந்தான். அறை முழுவதையும் சுத்தப்படுத்தி னான். அவர்கள் கைபட்ட இடங்கள் அனைத்தை யும் துடைத்தான். அனைத்துப் பொருட்களையும் களைந்தான். இயக்க வளர்ப்பு.

இணைய இணைப்பு அலைபேசியை அணைத் தான். தொழிற்சாலையின் பின்புறம் மலைபோல் குவிக்கப்பட்டிருந்த கிரானைட் கற்துகள் தூசு

குவியலில் எறிந்தான். கொஞ்ச நேரத்தில் எரிந்து மண்ணோடு மண்ணாகிவிடும்.

"என்னப்பா அந்த போனை தூக்கி போட்டுட்ட? இணைய இணைப்பு தேவைப்பட்டால்?" நந்தா கேட்டான்.

"போனைக் கூட எடுத்திட்டுப் போறது, நம்மளே போலீஸ்க்கு தகவல் கொடுக்கிற மாதிரி. போலி அடையாள அட்டை தான் இருக்குல. புது இணைப்பு வாங்கிக்கலாம். தேவையில்லாததை அப்பப்ப கழட்டி விட்றனும். இல்லனா காட்டிக் கொடுத்திடும்."

"இது போலீஸ் கையில் கிடைச்சால்?"

"என்ன பண்ணுவாங்க? சிம் வாங்குனது போலி அடையாள அட்டை வச்சு. எந்த நம்பருக்கும் கால் பண்ணவே இல்ல. No incoming, no outgoing calls. VPN வச்சு தான் இண்டர்நெட் பயன்படுத்தினோம். மொபைல், திருட்டு மொபைல். இதில் இருந்து ஒரு சின்னத் தகவல் கூட போலீசுக்குக் கிடைக்காது."

சமாதானம் அடைந்தவராய்த் தலையை ஆட்டினார் நந்தா.

அறையை மற்றுமொருமுறை சரிபார்த்துவிட்டு வெளியில் இன்னோவா காரில் தூங்கிக் கொண்டிருந்த முருகனை எழுப்பி மண்டபம் நோக்கி விரைந்தனர்.

அத்தியாயம் -22

அதிகாலையில் நாகப்பட்டினத்தில் இருந்து கிளம்பி வந்துவிட்டதால் கார்த்திக் ஆல்டோவும், திருவும் அரியலூர் அருகே பழூரில் உள்ள நண் பர் விக்னேஷ் ஆனந்த் வீட்டில் சென்று குளித்துத் தயாராகினர்.

காலை உணவைத் தவிர்த்ததால் திருவிற்கு தலை வலித்தது. ஆல்டோவிற்கும் பசித்தது.

"இங்க ஸ்விக்கிலாம் கிடையாது ப்ரோ. நம்ம தான் ஹோட்டல் போய் வாங்கனும். பனிரெண்டு மணி ஆகட்டும். சீரகச் சம்பா பிரியாணி வாங்கித் தர் றேன்" விக்னேஷ் ஆனந்த் கூறினார்.

அவர்கள் உரையாடலை கவனித்துக் கொண்டே மின்னஞ்சலை திறந்து பார்த்தான் ஆல்டோ. பேரா சிரியர் ஜெயச்சந்திரன் வீட்டில் கிடைத்திருந்த இரத்தமாதிரியில் இருந்து Rapid DNA profile தயா ராகி ரிப்போர்ட் அனுப்பப் பட்டிருந்தது. இண்டர் போலின் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் கார்த் திக் ஆல்டோவிற்கு இந்திய டிஎன்ஏ டேட்டாபேஸ் ஜீனோம் இண்டியா, ஐக்கிய முடியரசின் NDNAD, அமெரிக்காவின் CODIS ஆகியவற்றின் மேகக் கணிணி மென்பொருட்களில் ஓரளவு உள்நுழை யும் restricted access இருக்கிறது.
தற்போது கிடைத்த மாதிரியை மூன்றிலும் அப் லோட் செய்தான். கோடிக்கணக்கான டிஎன்ஏக்க

ளில் பொருத்தமான டிஎன்ஏவைத் தேடி இன்டெல் i7 புராஸசர் 16 ஜிபி ராம் உதவியுடன் அலைந்தது.

திடீரென ஐக்கிய முடியரசின் NDNAD திரையில் சிவப்பு விளக்கு மின்னியது.

One match found.
பெயர் : விபுலேந்திரன்
அதற்குக் கீழே விபுலேந்திரனின் புகைப்படம், கைரேகை, கருவிழி ரேகை, பாஸ்போர்ட் எண், உயரம், எடை, பூர்விகம் என சிறுவயதில் பயன்படுத்திய டயாப்பர் பிராண்டைத் தவிர அனைத்தையும் காட்டியது. பாஸ்போர்ட் எண்ணை வைத்து தேடியதில் 15 நாட்களுக்கு முன்னர் இந்தியா வந்திருப்பது உறுதியானது.

பதட்டமடைந்த ஆல்டோ தகவல்களைத் திரட்டி, இயக்குநர் அருள்மொழியைத் தொடர்பு கொண்டான்.

"சார் விபுலேந்திரன்னு ஒருத்தர் இங்கிலாந்து குடியுரிமை பெற்ற இலங்கைத் தமிழர். அவரோட DNA மேட்ச் ஆகுது. 15 நாள் முன்னாடி அவர் சென்னை வந்திருக்கார்."

"இண்ட்ரஸ்டிங். இஞ்சினியரிங் புரொபசருக்கு தமிழ் ஆர்வம், லெமூரியா ஆராய்ச்சி, இலங்கைத் தமிழர் இரத்தம். எங்கயோ கனெக்ட் ஆகுது. ஒரு நிமிசம்....." சிறிது நேர அமைதிக்குப் பின் மீண்டும் தொடர்ந்தார்.

"கொஞ்ச நேரம் முன்னாடி தமிழக உளவுத்துறைக்கு இலங்கையில் இருந்து ஒரு தகவல் வந்தது. இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது போராளிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட செயற்கைக்கோள் தொலைபேசிகளை ஆவணக் காப்

பகத்தில் வச்சிருந்திருக்காங்க. அதில் இரண்டு செயற்கைக்கோள் தொலைபேசிகள் காணாமல் போனதை சமீபத்தில் தான் கண்டுபிடிச்சிருக் காங்க. திருடப்பட்டதில் இருந்து பயன்படுத்தப்ப டாமலே இருந்த அந்த இரண்டும் இன்னைக்கு மதுரை கிட்ட ஆக்டிவேட் ஆகியிருக்கு. யாரோ பயன்படுத்தி இருக்காங்க."

"ஷாக்கிங் சார்."

"ஆனா சரியா எந்த இடம்னு கண்டுபிடிக்க முடியல. உத்தேசமா 15 சதுர கி.மீ மேப் கொடுத்திருக்காங்க. அது யானைமலை ஒத்தகடை காவல் நிலைய சர கத்தில் வருது. எனக்கென்னமோ உங்க வழக்கிற் கும் இதற்கும் தொடர்பு இருக்கலாமென தோன்று கிறது. நீங்க எதற்கும் ஒத்தக்கடை காவல்நிலையம் போய் பாருங்க."

ஆல்டோ கோபிநாத்திற்கு ஃபோன் செய்து அவ ரையும் மதுரைக்கு வரச் சொன்னான்.

அத்தியாயம் - 23

இளந்திரையன் கட்டி வைத்திருந்த டிஜிட்டல் கோட்டையைத் தகர்த்து இயக்கத்தின் கடைசிப் புதையலை அடைவது என்பது தனி ஒருவனாக சாத்தியமில்லை என்பது விபுலேந்திரனுக்குத் தெரிந்தே இருந்தது. வலிமையான கூட்டாளிக்காகக் காத்திருந்தான். ஒருமுறை, தமிழர் சுதந்திர நல வாழ்வுக் கட்சியின் தலைவர் ஆடிட்டர் நந்தா பிரித்தானியா வந்தான். விபுலேந்திரன் தனது இயக்கத் தொடர்புகளைப் பயன்படுத்தி அவனைச் சந்தித்தான். ஒரு தனிமையான சந்திப்பில் அனைத்தையும் கேட்ட நந்தாவின் கண்கள் ஆசையால் விரிந்தன.

நந்தா பிட்காயினின் அன்றைய மதிப்பில் இந்தியத் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தான். மூச் சடைத்தது அவனுக்கு. தன் ஆயுளுக்கும் நிதி வசூல் செய்தாலும் செய்தாலும் இதில் ஆயிரத்தில் ஒரு பங்கைக் கூட சம்பாதிக்க இயலாது. தனது பல தொடர்புகளையும் வைத்து விடயத்தை உறுதிப்படுத்த முயற்சித்தான். அனைவரின் பதிலும் ஒரே மாதிரி இருந்தன. இளந்திரையன் தங்கத்தை விற்று பிட்காயின் வாங்கிவிட்டான் என. ஆனால் யாருக்கும் அதைப்பற்றிய மேலதிக விவரங்கள் தெரியவில்லை. சில புலம்பெயர் இளைஞர்கள் ஏற்கனவே அதைப் பற்றித் தேடிக் கொண்டிருந்தனர். காசு, பணம், துட்டு, மணி என்பன வெறும் வார்த்தைகள் அல்லவே.

பணத்தைத் திரும்ப எடுப்பதைப் பற்றி அறிந்த மூவ ரில் விநாயகம் இறந்துவிட, மலேசியாவில் இருந்த செல்வராசா நடராசன் மூலம் அந்த மறைநாண யங்களை அடைவது என முடிவு செய்தனர். செல் வராசாவைக் கடத்தி மறைநாணயக் கணக்கில் நுழைய முற்பட்ட போது தான் தெரிந்தது, விபுலேந் திரன் அறிந்த விடயம் பத்தில் ஒரு பங்கு தான் என. விபுலேந்திரனும் நந்தாவும் நினைத்ததைவிட இளந்திரையன் நுட்பமான வழிகளைப் பின்பற்றியி ருந்தான். இந்த மோதலில் செல்வராசா இறந்துவிட அதை விபத்து போல சோடித்து நந்தாவும் விபு லேந்திரனும் மலேசிய அரசிடம் இருந்து தப்புவதற் குள் பெரும்பாடு பட்டனர்.

இதனால் வியூகத்தை மாற்றினான் விபுலேந்திரன். இப்போது பணத்தை மீட்கக் கூடிய வல்லமையுடன் இருக்கும் ஒரே நபர் பேராசிரியர் ஜெயச்சந்திரன். அவரிடமும் மோதித் தோற்றுவிட்டால் அனைத்தும் வீணாகிவிடும். பலநாட்கள் யோசித்துத் தான் தீட் டிய திட்டத்தை நந்தாவிடம் விவரித்தான்.

இதெல்லாம் நடைமுறையில் சாத்தியமா, என் பது நந்தாவின் சந்தேகம். இரண்டே இரண்டு நாட்கள் பேராசிரியரை ஏமாற்றிவிட்டால் போதும், பணத்தை எடுத்தபிறகு யார் என்ன பண்ண முடியும் எனக் கூறினான் விபுலேந்திரன். "ரெண்டு" பேசு வது போன்ற ஆடியோக்களையும் செயற்கைக் கோள் தொலைபேசிகளையும் தான் ஏற்பாடு செய் வதாக உறுதியளித்தான்.

இருவரும் சேர்ந்து பலமுறை திட்டத்தை யோசித்து யோசித்து மெருகேற்றினர். எந்த இடத்திலும் சிறு தவறும் நேராதபடி யோசித்தனர்.

இறுதியில் நந்தாவுக்கு நம்பிக்கை பிறந்தது. இரண்டே இரண்டு நாட்கள் காவல்துறையையும்,

பேராசிரியர் ஜெயச்சந்திரனையும் ஏமாற்றிவிட்டால் போதும்.

தோராயமாக கணக்கிட்டாலும் ஒரு பிட்காயினுக்கு ஏழு லட்சம் இந்திய ரூபாய் என மூன்று லட்சம் பிட்காயின்களுக்கு இன்றைய மதிப்பில் சுமார் இருபத்தியோராயிரம் கோடி கிடைக்கும். அட!! சொச்சம், ஆயிரம் கோடியை விடு. இருபதாயிரம் கோடி கிடைத்தால் போதுமே. பிறகு யார் நினைத்தாலும் நம்மைத் தொட முடியாது. பசிபிக் கடலில் சொந்தமாகத் தீவுகள் வாங்கி, தனி அரசாங்கமே நடத்தலாம்.

அத்தியாயம் - 24

மண்டபம் அகதிகள் முகாம் மதிய வேளையில் வெறிச்சோடி இருந்தது. அதன் வாசலில் இருந்த புறக் காவல் நிலையத்தில் ஒரு காவலர் தூங்கி வழிந்து கொண்டிருந்தார். 2009க்கு பிறகு அகதிக ளின் வரத்து நின்றுவிட்டதாலும் பலர் இங்கிருந்து மாற்றப்பட்டதாலும் மண்டபம் முகாம் தன் முக்கி யத்துவத்தை இழந்து பரபரப்பின்றிக் காணப்பட் டது.

நுழைவாயில் வழியாக சலனமேற்படுத்தாமல் மூவ ரும் நுழைந்தனர். எதிரில் தென்படுபவர்களிடம் விசாரித்து மயூரனைக் கண்டுபிடித்தனர். மயூரன் இரண்டு கால்களையும் போரில் இழந்து அவரது வீட்டில் சுருண்டு கிடந்தார். அவரது மனைவி தான் வேலைக்குச் சென்று இவரைக் காப்பாற்றுகிறா ராம். மண்டபம் அகதிகள் முகாமின் வடமேற்கு கடைசியில் அவரது வீடு இருந்தது. அதை வீடு என்பதை விட, வீடு போன்ற அமைப்பு எனலாம். ஒரே ஒரு அறை தான். தரை பெயர்ந்தும், ஒரு பக்கம் சுவர் இல்லாமல் ஓலைப்பாயை வைத்து மறைத்திருந்தனர்.

ஜெயச்சந்திரனை மயூரன் அடையாளம் கண்டு கொண்டார். ஜெயச்சந்திரன் மெதுவாக ஆரம்பித் தார், "மயூரா, எப்படி இருக்க?"

"நல்லா இருக்கேன் புரொபசர். என்ன, ஒன்னுக்கு ரெண்டுக்குப் போயிட்டு வரத்தான் வாழ்க்கையே வெறுத்திருது."

சற்றுத் தொலைவில் இருந்த பொதுக் கழிப்பிடத்தைக் காட்டினார். கால்கள் நன்றாக இருப்பவர்களாலேயே அதற்குள் மூத்திரம் ஒட்டாமல் செல்ல முடியாது. மனைவியை வேலைக்கு அனுப்பிவிட்டு கால்கள் இல்லாமல் மயூரன் வாழும் வாழ்க்கையை ஒரே நொடியில் பேராசிரியருக்கு உணர்த்தியது அந்தப் பொதுக் கழிப்பிடம்.

"எங்கள வச்சு எவனெவனோ பிழைக்கிறான். ஆனால் என் வாழ்க்கை மட்டும் நாறிக்கிடக்கு."

நந்தா தலையை குனிந்து கொண்டான். நல்லவேளை, மயூரனுக்கு அடையாளம் தெரியவில்லை.

"மயூரா! இந்த நிலையில் தொந்தரவு செய்வதற்கு மன்னிக்கவும். எனக்கு ஒரு முக்கியமான விசயம் தேவைப்படுது. CD அப்படிங்கிற குறிச் சொல்லை இயக்கத்தில் எதற்குப் பயன்படுத்துவீங்க?"

மங்கிப் போயிருந்த மயூரன் கண்களில் திடீரென ஒளி தெரிந்தது. முகம் பிரகாசமானது. நினைவில் காடுள்ள மிருகம். பழைய நினைவுகளில் மூழ்கினான் மயூரன்.

இலங்கையின் வடபகுதி ஊரான பூநகரியில் இருந்து வடமேற்கில் கொக்கின் அலகு போல நீளும் நிலப்பரப்பின் முடிவில் உள்ளது கௌதாரிமுனை. மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட வெண்மணல் பரப்பு. இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியின் வட எல்லை என்றும் கூறலாம். அங்கிருந்த காவல் அரண்களுக்கு நடுவே தான், தனது தொலைத்தொடர்பு தொழிற்கூடத்தை

அமைத்திருந்தான் இளந்திரையன். நிதிப் பொறுப் பிற்கு வரும் முன் தொலைத்தொடர்புத்துறையில் இருந்தான். இயக்கத்தின் தொலைத் தொடர்பில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய பெருமை இளந் திரையனுக்கே சேரும். அதற்குப் பரிசாகத்தான் இளம் வயதில் நிதிப் பொறுப்பு வழங்கப்பட்டது என்றே கூறலாம்.

கௌதாரிமுனையில் இருந்த முகாமின் நோக்கம் யாழ் குடா நாட்டையும் அதன் அருகாமைத் தீவு களையும் கண்காணிப்பது; இராணுவத்தின் கீழ் உள்ள அந்தப் பகுதிகளை மீட்டெடுப்பது. இதற் காக முழுமுயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அங்கு தான் மயூரனும் களத்தில் நின்றார்.

யாழ்ப்பாணப் பகுதிகளைக் குறிக்கத் தூரங்க ளைப் பயன்படுத்தினர். Centre distance. அதாவது கௌதாரி முனை முகாம் மையத்தில் இருந்து ஒரு பகுதி எவ்வளவு தூரத்தில் உள்ளதோ அது தான் அப்பிரதேச குறிச்சொல். சுருக்கமாக CD. இதற் காக மின்காந்த அலைவரிசை கதிர்களை வைத்து அனைத்து இடங்களின் தூரத்தையும் துல்லியமாக அளந்தனர். அங்கிருந்து யாழ் கடற்கரை 6 கிலோ மீட்டர். அதன் பெயர் CD6. சாவகச்சேரி 10 கி.மீ. அதன் பெயர் CD 10.
இப்படி யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு கிலோமீட்டர் பகுதியும் ஒரு CD யாக பிரிக்கப்பட்டு அதற்கென தனிப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். அந் தப்பகுதிகளில் இராணுவ நடமாட்டத்தை கண்கா ணித்துச் சொல்வது அவர்கள் பொறுப்பு. சிலநேரம் உளவு பார்ப்பதற்காக, ஊடுருவி அங்கு செல்லக் கூட நேரிடும்.

CD9 எனும் பகுதியின் பொறுப்பாளராக இருந்த வர் தான் மயூரன். M18 கிளைமோர் கன்னிவெடி

யில் சிக்கிக் கால்களை இழந்த பின் இங்கு புலம் பெயர்ந்து வந்துவிட்டார். அதனால் தான் CD என்ற வார்த்தையைக் கேட்டவுடன் பரவசமானார்.

"CD - centre distance. இது இயக்கப் பொடி யள் பயன்படுத்தின குறிச்சொல். கௌதாரிமுனை முகாமில் இருந்து எவ்வளவு தூரம் உள்ளதோ அதுதான் CD" என்றார்.

நந்தாவுக்கு அங்கிருக்கும் ஒவ்வொரு நொடியும் நெருப்பில் நிற்பது போல இருந்தது. வெயிலுக்கு துண்டை தலைமேல் போடுவதைப் போல போட்டு முகத்தை மறைத்திருந்தார். இருந்தாலும் யாராவது பார்த்தால் பெரிய பிரச்சனை ஆகிவிடும் என்பதால் அவசரப்படுத்தினார். மயூரனுக்கு நன்றி கூறிவிட்டு மூவரும் அவசரமாக வெளியேறினர். யார் கண்ணி லும் படாமல் காருக்குள் ஏறிய பிறகு தான் பெரு மூச்சு விட்டார்.

கார், கிரானைட் தொழிற்சாலையை நெருங்கும் போது மாலை ஆகியிருந்தது. தொழிற்சாலையை நெருங்குவதற்கு முன்னே அங்கு பரபரப்பு நிலவு வதை முருகன் கண்டு கொண்டான். நான்கைந்து காவல்துறை வாகனங்கள் நின்றிருந்தன. காவல் துறை சீருடை அணிந்த இரண்டு பேர் நுழைவா யில் கிரில்கேட் அருகே நின்றனர். பிரதான சாலை யில் இருந்து தொழிற்சாலை செல்லும் சாலை யில் செல்லாமல், வேகத்தை மீண்டும் அதிகரித்து நேரே மேலூர் செல்லும் சாலையில் விரைந்தான்.

நந்தா பரபரப்பானான். இந்த இடத்தை எப்படிக் கண்டுபிடித்தனர்? நம்மைத் தேடி தான் போலிஸ் வந்துள்ளனரா? எல்லாம் சரியாகத்தானே செய் தோம்.

விபுலேந்திரனுக்கும் பயங்கர குழப்பம். எப்படி தவறு நேர்ந்தது? அதற்குள் போலீஸ் நெருங்கி விட்ட னரே.

நந்தா கார் டாஷ்போர்டில் ஓங்கிக் குத்தினார். ச்சே!!

"நந்தா. இறங்கியச்சு. இனிமே பயந்து ஆகப்போ றது இல்ல. அடுத்து என்ன செய்யனும்னு யோசி." பேராசிரியர் கூறினார்.

"ஆம் நந்தா சார். இப்ப செய்யுற வேலையின் பலனை நினைச்சுப் பாருங்க பயம் போய்டும்." விபு லேந்திரனும் கூறினான்.

நந்தா சிறிது நேரம் யோசித்தான். நிதானம டைந்து, "முருகா, நார்த்தாமலை தென்னந்தோப் பிற்கு போ." எனக் கூறினான்.

கார், நந்தா புதிதாக வாங்கிய தென்னந்தோப்பு இருக்கும், புதுக்கோட்டை மாவட்ட நார்த்தாம லையை நோக்கி விரைந்தது.

அத்தியாயம் - 25

ஒத்தக்கடை காவல்நிலையம் பரபரப்பாக இயங்கி யது. க்யூ பிராஞ்ச் அதிகாரிகள், மதுரை சரக உயர் அதிகாரிகள் பலரும் அங்கு குழுமி மும்மரமாக விவாதித்துக் கொண்டிருந்தனர்.

கார்த்திக் ஆல்டோவை காவல்நிலைய ஆய்வாளர் இராஜராஜன் ஆர்.ஜே தான் வரவேற்று அழைத்துச் சென்றார்.

"என்ன சார் ரொம்ப பிஸியாயிருக்கீங்க போல?"

"கமல் கட்சி ஆரம்பிச்சு இங்க மாநாடு போட்டப்ப கூட இவ்ளோ பிஸி இல்ல சார்."

செயற்கைக்கோள் தொலைபேசி பேசப்பட்ட இடம் என உளவுத்துறை அனுப்பிய வரைபடத்தைக் காட்டினார். மதுரை திருச்சி நான்குவழிச்சாலை யில் ஐந்து கிலோமீட்டர் நீள அகலத்தில் சிவப்பு நிறத்தில் மார்க் செய்யப்பட்டிருந்தது.

"இந்த ஏரியாக்குள்ள நிறைய கல்லூரிகள், புறநகர் குடியிருப்புப் பகுதிகள், கிரானைட் தொழிற்சாலை கள், தங்கும் விடுதிகள் இருக்கின்றன. பத்து தனிப் படைகள் உருவாக்கியிருக்கோம். எல்லா இடத் தையும் தேடனும்."

அப்போது ஒரு காவலர் வயதான ஒருவரை அழைத்து வந்தார். ஆய்வாளர் இராஜராஜனிடம்,

"அய்யா, வீட்ல செல்போன் வெடிச்சிருச்சுன்னு ஒரு கால் வந்துச்சுல. இவர் போன் தான். ஆனா விசா ரிச்சா மாத்தி மாத்தி பேசுறார். அதான் இங்க கூட் டிட்டு வந்தேன்."

அந்த வயதான பெரியவரின் முகத்தில் தெரிந்த பதட்டம் அவர் ஏதோ மறைப்பதை ஆல்டோ விற்கு உணர்த்தியது. இராஜராஜனும் அதையே தான் எண்ணினார்.
"அய்யா வாங்க. இப்படி உட்காருங்க. என்ன ஆச் சுன்னு விளக்கமா சொல்லுங்க." இராஜராஜன் அன்பாக பேசினார்.

பெரியவர் தடுமாறினார். வாயில் இருந்து சொற் கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் வந்தன. "அது..... வந்து... போன்... "

"அய்யா கேட்கிறார்ல சொல்லுய்யா" கான்ஸ்டபிள் அதட்டினார்.

ஏற்கனவே காவல் நிலையச் சூழலில் பயந்து போய் இருந்த முதியவர் சத்தம் போட்டு அழுதார்.
"அந்த போனை தெரியாம எடுத்துட்டேன் சார். மன்னிச்சு விட்ருங்க. இனிமே இப்படி பண்ண மாட் டேன். திருட்டு பொருள் தங்காதுன்னு சொல் வாங்க. அதே மாதிரி எரிஞ்சிடுச்சு சார்."

"அய்யா அழுகாதீங்க. பொறுமையா சொல்லுங்க. எங்க எடுத்தீங்க?" இராஜராஜன் செயற்கைப் பொறுமையை வரவழைத்துப் பேசினார்.

"வீட்டுக்குப் பக்கத்தில் இருக்க கிரானைட் ஃபேக் டரியில் சார்"

"உங்க வீடு எங்க இருக்கு?"

"பைபாஸ் ரோட்டில், அக்ரி காலேஜைத் தாண்டி."

"நீங்க ஏன் கிரானைட் ஃபேக்டரி பக்கம் போனீங்க?"

"அந்த ஃபேக்டரி கெஸ்ட் ஹவுஸ் சாவியை மேனேஜர் என்கிட்ட தான் கொடுத்து வச்சிருப்பார். அவர் போன் பண்ணி சொல்றவங்களுக்கு அதைக் கொடுக்கனும். அவங்க கிளம்பின பிறகு சுத்தம் பண்ணனும். அதுக்காகப் போனேன் சார்."

"வாட்ச்மேன் மாதிரி?"

"கிட்டத்தட்ட சார். வீடு பக்கத்தில் இருக்கதால என்னைப் பார்த்துக்கச் சொல்லிருக்காங்க சார்."

"நேத்து யாரும் வந்தாங்களா?"

"ஆமா சார். நேத்து நைட் 12 மணிக்கு ஒருத்தர் வந்து கதவைத் தட்டி சாவியை வாங்கிட்டுப் போனார் சார்."

"யார் கேட்டாலும் கொடுப்பீங்களா?"

"இல்ல சார் மேனேஜருக்கு கால் பண்ணி கேட்டுட்டு தான் கொடுத்தேன்."

ஆல்டோ மனதிற்குள் ஒரு குறுகுறுப்பு. தன் மொபைலில் இருந்த விபுலேந்திரன் போட்டோவைக் காட்டி "வந்தது இவரா?" எனக்கேட்டான்.

"ஆமா சார். இவரே தான்."

கார்த்திக் ஆல்டோ இந்த பதிலை எதிர்பார்க்கவில்லை.

அத்தியாயம் -26

மண்டபத்தில் இருந்து மதுரை வரையில் CD 19 என்பது எந்த இடத்தைக் குறிக்கும் என்பதை பல வாறு விவாதித்துக் கொண்டே வந்தவர்கள், இருப் பிடத்தில் காவலர்களைக் கண்டதும் எதிர்பாராத குழப்பத்தால் அமைதியாக இருந்தனர்.

நந்தா பதட்டத்துடன் இருப்பதைக் கண்டு விபு லேந்திரன் பேச ஆரம்பித்தான்.
"நந்தா சார். அந்த இடத்தை போலிஸ் ஏன் சுற்றி வளைத்தார்கள் எனத் தெரியல. இப்போதைக்கு போலிஸ் தேடுறது புரொபசரைத் தான். சாதாரண கடத்தல் கேஸ். நாளைக்கே ஆபரேசன் மாயப் பெருநிலம் முடிந்த பின்பு புரொபசர், என்னை யாரும் கடத்தவில்லை, விருப்பத்தோடு நண்பர்க ளைப் பார்க்க வந்தேன்னு சொன்னார்னா பிரச் சனை சால்வ்ட். முடிஞ்சு போச்சு. யாரும் நம்ம மேல புகார் கொடுக்கக் கூட போறது இல்ல. இப்ப நம்ம ளுக்கு தேவை இந்த மிஷன் முடியுற வரை புரொப சரை போலிஸ்கிட்ட சிக்க விடாம வச்சிருக்கனும். அவ்வளவு தான். இன்னைக்கு இரவுக்குள்ள நம்ம பின் நம்பர் கண்டுபிடிச்சு பணத்தை மாற்றிட்டா நாளைக்கு காலையிலேயே புரொபசரை போலிஸ் கிட்ட காட்டிடலாம். யாரும் கடத்தலைன்னு. சோ, கீப் கூல்."

விபுலேந்திரனின் நம்பிக்கையான பேச்சு நந் தாவுக்கு புத்துணர்ச்சி அளித்தது. "ஆமாம்

போலீஸ்க்கு இது ஒரு சாதாரண கடத்தல் கேஸ் தான். என் மேல இல்லாத கேஸா? பார்த்துக்க லாம்."

காருக்குள் உற்சாகம் மீண்டது. ஆனால் பேராசிரி யர் மட்டும் தீவிரமாக யோசித்தபடி வந்தார். முகம் மங்கலாக இருந்தது.
"நந்தா, உன் தோப்பிற்கு போன உடனே எனக்கு இணைய இணைப்பு வேணும். கௌதாரி முனை யில் இருந்து 19 கி.மீ தொலைவில் உள்ள எல்லா இடங்களையும் மேப்பில் பார்க்கனும்."

"அங்க தோப்பில் பிராட் பேண்ட் இணைப்பு இருக்கு. பிரச்சனை இல்லை."

முருகனின் அசுர வேகத்தால் ஒன்றரை மணி நேரத்தில் நார்த்தாமலை தென்னந்தோப்பை வந் தடைந்தனர். பேராசிரியர் ஜெயச்சந்திரனும் விபு லேந்திரனும் ஒரு நொடியைக் கூட வீணாக்காமல் இணையத்தில் துழாவ ஆரம்பித்தனர்.

கௌதாரி முனையில் இருந்து எல்லா திசையிலும் 19 கிலோமீட்டர் தொலைவில் நிறைய தொடர் பில்லாத ஊர்களே வந்தன. பொறுமையாக தேடும் போது வேலணை சரியாக 19வது கி.மீயில் இருந் தது.

"பார்த்தீங்களா நம்ம முப்பாட்டன் முருகன் ஊர்" நந்தா குதித்தான்.

"இது கடம்பன் எனும் கடற்கொள்ளையனைக் கொன்ற வேலன் எனும் இளவரசனின் பெயர். உடனே சாமியாக்கிடுங்க." புரொபசர் கடிந்து கொண்டார்.

"எனக்கென்னவோ CD 19 என்பது வேல ணையைக் குறிக்கவில்லை எனத் தோன்றுகிறது.

மேலும் குறிப்பில் Outer CD 19 என்று தான் எழுதப் பட்டிருக்கிறது. எதையோ நாம் தவற விடுகிறோம்."

மீண்டும் கூகிள் மேப்பை ஆராய ஆரம்பித்தார். Outer வெளிப்பக்கம் இங்கு வெளிப்பக்கம் மேற்கு திசை. கௌதாரி முனையில் இருந்து மேற்கு திசை நோக்கி மவுஸ் கர்சரை இழுத்தார். அது ஒரு நேர் கோடு வரைந்து நயினாத்தீவில் நின்றது. கீழே measure distance என்று ஒரு கட்டம் உரு வாகி 30.57 km எனக்காட்டியது. சுவாரசியம் இல் லாமல் பிரவுசரை மூடப் போனார். அப்போது தான் அடைப்புக்குறிக்குள் எழுதியிருந்ததைக் கண்டார். 19 மைல். ஆனந்தத்தில் ஒரு நொடி இதயம் நின்று விட்டது.

"கண்டுபிடிச்சிட்டேன். அது நயினாத் தீவு. Outer CD 19 என்பது நயினாத் தீவு" கூவினார்.

75%

Location 5976

19 mi

Add point

அத்தியாயம் - 27

பிரம்மாண்ட ஆஸ்பெஸ்டாஸ் கூரையுடன் இருந்த தொழிற்சாலையின் பின்புறம் அந்த விருந்தினர் இல்லம் இருந்தது. நல்ல வசதியுடன் பெரிதாக இருந்தது.

"அந்த வீடு தான் மொபைல் போன் எடுத்தவர் வீடு." தூரத்தில் இருந்த ஓர் ஓட்டு வீட்டைக் காட்டினார் திரு.

"இங்க காரை நிறுத்திவிட்டு ஒரே ஒருத்தர் மட்டும் அங்க போய் சாவியை வாங்கிட்டு வந்திருக்கிறாங்க. அவர் அங்க இருந்து காரைப் பார்த்தாராம். காலையில் வந்து பார்க்கும் போது யாருமே இல்லையாம். இந்த மொபைல் போன் மட்டும் கீழ கிடந்திருக்கு."

"இந்த ஃபேக்டரி ஓனர் என்ன சொல்றார்?"

"ஓனர் வெளிநாட்டில் இருக்கார் சார். மேனஜர் தான் நிர்வகிக்கிறார். முதலாளிக்கு தெரியாம இப்படி வாடகைக்கு விடுவாராம். அவரை அரெஸ்ட் பண்ணிட்டோம். நான்கு நாளுக்கு முன்னாடி ஒருத்தன் போன்ல பேசி வாடகைக்கு வேணும்னு அகௌளண்ட்ல பணம் அனுப்பிருக்கான். அந்த மொபைல் நம்பருக்கு இப்ப கால் போகல. பேங்க் ட்ரான்சாக்சன் ட்ரேஸ் பண்ணிட்டு இருக்கோம் சார்."

"அந்த மொபைல் நம்பர் யார் பேர்ல இருக்கு?"

"போலி அடையாள அட்டை கொடுத்து வாங்கிருக் காங்க சார்"

"இந்த செல்போன் எடுத்தவரையும் மேனேஜரை யும் திரும்பத்திரும்ப விசாரிங்க. சின்ன க்ளூ கிடைச்சாலும் விடாதீங்க."

ஆல்டோ அந்த வீட்டிற்குள் மிகவும் எச்சரிக்கை யாக நுழைந்தான். வீடே துடைத்து விட்டது போல தூய்மையாக இருந்தது.

"எல்லாத் தடயத்தையும் அழிச்சிருக்காங்க போல சார். சுத்தமா இருக்கு."

"தடயவியல்ல லோகார்ட்ஸ் பரிமாற்றத் தத்து வம்னு (Locard's exchange principle) ஒன்னு இருக்கு. தடயவியல் பேராசிரியர் பாலகிருஷ்ணரா வோட ஃபேவரைட் தத்துவம். இரு பொருள்களி டத்தில் தொடர்பு ஏற்பட்டால் நிச்சயமாக பரிமாற் றம் நிகழும். முதல் பொருளில் இருந்து சில துகள் கள் இரண்டாவது பொருளுக்கு போகும். இரண் டாவது பொருளில் இருந்து சில துகள்கள் முதல் பொருளிற்கு வரும். இது தான் லோகார்ட்ஸ் தத்து வம். இதை மனசில் வச்சு தேடுனா கண்டிப்பா பரி மாறப்பட்டத் துணுக்குகளைக் கண்டுபிடிக்கலாம்." ஆல்டோ கூறி விட்டு மில்லி மீட்டர் மில்லி மீட் டராக ஆராயத் தொடங்கினான். திருவும் சேர்ந்து கொண்டார்.

"பார்த்தீங்களா திரு. லோகார்ட்ஸ் தத்துவம் உண்மை ஆயிடுச்சு" ஆல்டோ கையில் ஒரு வெள்ளை நூலுடன் கத்தினான்.

"என்ன சார். ஒரே ஒரு நூல் கிடைச்சிருக்கு. இதை வச்சு என்ன சார் பண்ண முடியும்?"

“ஒரு நூலை வச்சு என்ன பண்ண முடியுமா? இந்திய வரலாறு படிங்க திரு.” இடைவெளி விட்டு மீண்டும் ஆரம்பித்தான்,

“இதை நல்லாப் பாருங்க. Cotton yarn ball thread. தமிழ்ல பத்தாம் நம்பர் நூல்கண்டுன்னு சொல்வாங்க. அநேகமா சாப்பாடு பார்சல் பண்ணின நூலா இருக்கனும். சாம்பார் வாசனை வருது. வெள்ளை டைல்ஸ் தரையில் நூலும் வெள்ளையாக இருந்தவுடன் கவனிக்காமல் போய்விட்டார்கள்." அதை ஒரு ஜிப்லாக் கவரில் பத்திரப் படுத்தினான்.

“இந்த இடம் முழுவதும் தடயவியல் சோதனை செய்யச் சொல்லுங்க. ஒரு இடம் விடாம. நமக்கு இன்னும் க்ளூ கிடைக்கலாம்.”

“ஓ.கே சார்”

அத்தியாயம் - 28

"Outer cd 19 என்பது நயினாத் தீவு என எப் படி அடிச்சு சொல்றீங்க?" பெருமிதத்துடன் அறைக் குள் நடந்து கொண்டிருந்த பேராசிரியர் ஜெயச்சந் திரனைப் பார்த்து விபுலேந்திரன் கேட்டான்.

"அதுக்கு தான் அவன் முந்திய வரி சொல்லிருக் கான். உனக்கு ஆபுத்திரன் கதை தெரியுமா?"

நந்தா, கதை என்றவுடன் ஆர்வமாகப் பார்த்தான். மேடைகளில் பேசுவதற்கு உதவுமல்லவா?

◆ ◆ ◆

ஆபுத்திரன் கதை

ஆபுத்திரன் கதை மணிமேகலையில் வந்த கிளைக்கதையாகும்.

ஆபுத்திரன் எனும் சீர்திருத்தவாதி, அந்தணர் கள் பசுக்களை யாகத்தின் பெயரால் கொல்வதை தட்டிக் கேட்கிறான். அதனால் அவனை பிறப் பின் அடிப்படையில் இழிவு படுத்தி ஊரை விட்டு விரட்டுகின்றனர் அந்தணர்கள். மனம் வெதும்பிய ஆபுத்திரன் நீண்ட தூரம் நடைப்பயணம் செய்து மதுரையை அடைகிறான்.

மதுரையில் சிந்தா தேவி எனும் பவுத்த மத தெய்வத்தின் கோவிலின் முன்னால் அம்பலப் பீடிகை இருந்தது. அது பொது மன்றம். அங்கு தங்குகிறான். அது யார் வேண்டுமானாலும் தங்கக் கூடிய இடம் என்பதால் மாற்றுத் திறனாளிகளும் நோயுற்றவர்களும் தங்கியுள்ளனர். தினமும் பிச்சையெடுத்து வருவதை அவர்களுக்குத் தந்து தானும் உண்கிறான். ஒரு நாள் இரவு மிகப் பெரிய மழை பெய்தது. மழையுடன் காற்றும் சுழன்று அடித்ததால் மன்றத்தை விட்டு வெளியில் இறங்க முடியாத நிலை. அனைவரும் பட்டினி கிடக்கின்றனர். மாற்றுத்திறனாளிகளும் நோயாளிகளும் வயதானோரும் பசி தாங்காமல் துன்பப் படுகின்றனர். அவர்களது துன்பத்தைத் தீர்க்க முடியவில்லையே என்னிடம் பசி தீர்க்கும் சக்தி இருந்தால் நன்றாக இருக்குமே என ஆபுத்திரன் உளமாற வருத்தப்படுகிறான்.

இவனது உண்மையான வருத்தத்தைக் கண்ட சிந்தா தேவி தெய்வம் தன் கையில் இருக்கும் பாத்திரத்தை ஆபுத்திரனிடம் கொடுக்கிறார். அது தான் அள்ள அள்ள குறையாமல் உணவு தரும் அட்சயப் பாத்திரம். அதை வைத்து அனைவரின் பசியையும் போக்கினான்.

விரைவிலேயே அவனது புகழ் நாடெங்கும் பரவியது. இதனால் பொறாமை கொண்ட தேவர் உலக இந்திரன் ஆபுத்திரனின் புகழை மறைப்பதற்காக 12 வருடங்கள் ஒழுங்காக மழை பெய்ய வைக்கிறான். இதனால் விளைச்சல் பெருகி உணவுப் பஞ்சமே இல்லாமல் ஆனது. தெருவெங்கும் தானியங்கள் நிறைந்தன. ஆபுத்திரனிடம் உணவு வாங்குவார் யாரும் இல்லை.

தானம் செய்ய வழியற்ற ஆபுத்திரன் "யாருக்காவது உணவு வேண்டுமா?" என தெருவில் கத்

திக் கொண்டேச் சென்றான். அவனை அனைவ ரும் கிண்டல் செய்தனர். மனம் நொந்த அவனி டம் சாவகத்தீவில் பட்டினியால் மக்கள் வாடுவதாக அங்கிருந்து வந்த வியாபாரிகள் கூறினர். உடனே அடுத்த கப்பலில் ஏறி சாவகத் தீவு செல்வதற்காகப் புறப்பட்டான்.

ஆனால் புயலில் சிக்கிய அக்கப்பல் மணிபல்ல வத் தீவில் ஒதுங்கியது. அது தான் சாவகத்தீவு என நினைத்து ஆளில்லாத அத்தீவில் ஆபுத்திரன் இறங்கி உள்ளே சென்றுவிட்டான். இவன் இறங் கிச் சென்றதை அறியாத கப்பல் மாலுமி கப்பலை ஓட்டிச் சென்றுவிடுகிறான். யாருமில்லாத தீவில் தனித்து விடப்பட்ட ஆபுத்திரன் விரக்தியடைந்து ஒரு நீர்ச்சுனைக்குள் அட்சயப் பாத்திரத்தை எறிந் துவிட்டு மணிபல்லவத் தீவிலேயே தற்கொலை செய்து கொள்கிறான்.

◆ ◆ ◆

ஆபுத்திரன் கதையை மூச்சு விடாமல் கூறி முடித்த ஜெயச்சந்திரன் ஒரு பாட்டில் தண்ணீரையும் கட கட வென குடித்தார். பிறகு இருவரையும் பார்த்து "அந்த மணிபல்லவ தீவின் தற்போதைய பெயர் நயினாத் தீவு" என்றார்.

அத்தியாயம் -29

மதுரை திருச்சி நெடுஞ்சாலையில் மேலூர் புறவ ழிச் சாலை பிரிவில் இருந்தது டெம்பிள் சிட்டி உண வகம். இந்த சாலையில் இது ஒன்று தான் திருச் சியில் இருந்து வரும்போது இடப்புறம் இருக்கும் பெரிய சைவ உணவகம் என இராஜராஜன் ஆர்ஜே கூறியிருந்தார்.

அங்கு சென்று விபுலேந்திரன் புகைப்படத்தைக் காட்டி ஆல்டோவும் திருவும் விசாரித்தனர். பணம் வசூலிக்கும் இடத்தில் இருந்தவர் உடனடியாக கண்டுகொண்டார்.

"இவர் நேற்று இரவு கடையைச் சாத்தும் போது வந் தார் சார். மூணு தோசை பார்சல் வாங்கினார்."

"எத்தனை மணி இருக்கும்? இவர் மட்டும் தான் வந்தாரா?"

ஆல்டோ விசாரித்துக் கொண்டிருக்கும் போதே கோபியிடம் இருந்து அழைப்பு வந்தது. “இங்க காம்பவுண்ட் க்ரில் கதவில் ஒரு கைரேகை கிடைச்சுருக்கு சார். வீடு முழுக்க சுத்தம் பண்ணி ருக்காங்க. ஆனால் க்ரில் கேட்டை சுத்தம் பண்ண மறந்துட்டாங்க. அந்தக் கைரேகையை டேட்டாபே ஸில் மேட்ச் பண்ணிப் பார்த்ததில் ஆடிட்டர் நந்தா வோடது எனத் தெரியவருது சார்.”

“தமிழர் சுதந்திர நலவாழ்வுக் கட்சித் தலைவர் நந்தாவா?”

“ஆமா. அவரே தான்.”

“கோபி விசயம் ரொம்ப முக்கியம். உளவுத்துறை ஐ.ஜி கிட்டப் பேசுங்க. முழுவிவரமும் சொல்லுங்க. ஆடிட்டர் நந்தா பற்றி எல்லா விவரமும் வேணும்னு கேளுங்க. எனக்கு கம்ப்ளீட் அனாலிசிஸ் வேண்டும். நீங்க வேற எந்த வேலையும் பார்க்க வேண்டாம். நந்தா விசயத்தை மட்டும் கவனிங்க.” கோபிநாத்திடம் கூறிவிட்டு மீண்டும் விசாரணையைத் தொடங்கினான்.

“சொல்லுங்க இவர் மட்டும் தான் வந்தாரா? எத்தனை மணிக்கு?”

"பதினொன்றரை மணி சார். கடையோட முன் பக்கலைட் எல்லாம் ஆஃப் பண்ணிட்டோம். அதுக்கு பிறகு அவசரமா வந்து வாங்குனார். காரில் இறங்கி தனியாத் தான் வந்தார்."

"என்ன கார்?"

"இன்னோவா சார். வெள்ளைக்கலர். நைட் வாட்ச்மேன் முத்தையா கூட இருந்தார்."

"அவர் எங்க இப்ப?"

"மாடியில் தூங்குறார். 10 நிமிசம் வெயிட் பண்ணுணீங்கனா வரச் சொல்றேன்."

எட்டே நிமிடத்தில் முத்தையா வந்தார்.

"வெள்ளைக் கலர் கார்ல வந்தாங்க சார். டிரைவர் இறங்கல. ஒருத்தர் மட்டும் இறங்கிப் போய் பார்சல் வாங்கிட்டு வந்தார்."

"கார் நம்பர் தெரியுமா?"

"கார் நமபர் தெரியாது சார். ஆனா காருக்குப் பின் னாடி நீல கலர்ல வில் அம்பு ஸ்டிக்கர் ஒட்டிருந் தாங்க."

"ஹோட்டலில் சிசிடிவி இருக்கா?"

"இருக்கு சார். ஆனா இப்ப ரிப்பேர்."

அதன் பின் வந்த கேள்விகளுக்கும் எதிர்மறை பதிலே வந்தது. கோபிக்கு வாட்ஸாப்பில் மெசேஜ் பறந்தது "நீல நிற வில் அம்பு ஸ்டிக்கர் ஒட்டிய வெள்ளை இன்னோவா காரின் விவரம் தேவை."

நூல் மாதிரியை சேகரித்துவிட்டு காரில் திரும்பும் போது திரு, ஆல்டோவிடம் கேட்டார்.

"எப்படி கரெக்ட்டா இந்த ஹோட்டல்ல சாப்பாடு வாங்கியிருப்பாங்கன்னு நினைச்சீங்க?"

" என் பாணியில் சொல்லனும்னா Theory of simplicity. தண்ணீரை தரையில் ஊத்தினால் இந் தப்பக்கம் போறதா அந்தப் பக்கம் போறதா எனக் குழம்பாது. எந்தப்பக்கம் தரை பள்ளமா இருக்கோ அந்தப் பக்கம் தான் போகும். அது தான் "simple decision", எளிமையான முடிவு.

அந்த நூல்ல சாம்பார் வாசனை வந்தது. சைவ உணவகமா இருக்க வாய்ப்பு அதிகம். கெட்டுப் போகக் கூடாது என்பதால் அருகில் உள்ள உணவ கத்தில் தான் வாங்கியிருக்க வேண்டும். அரியலூ ரில் காரைக் கைப்பற்றினோம். அங்கிருந்து இங்கு வர்ற வழியில் சாலையின் இடப்புறமாக அருகில் உள்ள பெரிய சைவ உணவகம். சிம்பிள் கெஸ்."

அத்தியாயம் - 30

ஆபுத்திரன் கதையை நினைக்கும் போதெல்லாம் பேராசிரியர் ஜெயச்சந்திரனுக்கு தமிழக அரசியல் தான் நினைவுக்கு வரும். பசி பட்டினியில் இருந்த போது ஆபுத்திரன் அட்சயப்பாத்திரத்தில் பசியாற் றியது போல, சத்துணவுத் திட்டமும் ரேசன் அரி சியும் கொண்டு வந்து பசியைப் போக்கினார்கள். பசி போன பின்பு ஆபுத்திரனை கிண்டல் செய்து விரட்டியது போல திராவிடத்தால் வீழ்ந்தோம், இல வசத்தால் வீழ்ந்தோம் எனக் கூறுகின்றனர். பசியில் இருப்பவனுக்கு இதன் அருமை புரியும். அதனால் தான் இளந்திரையனுக்குப் புரிகிறது.

" உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்ற மணிமேகலை வரியின் மூலம் மணிபல்ல வத் தீவான நயினாத்தீவை இளந்திரையன் குறிப் பிடுகிறான். அதைத் தான் Outer CD 19 - மேற்கு திசையில் 19 மைல் தொலைவில் எனக் குறிப்பிடு கிறான்." பேராசிரியர் விளக்கினார்.

“மற்ற அனைத்து இடங்களையும் விடுத்து இந் தத் தீவை குறிப்பதைப் பார்த்தால், நயினாத் தீவுக் கும் இளந்திரையனுக்கும் தனிப்பட்ட முறையில் தொடர்பு இருப்பது போல இருக்கே." விபுலேந்தி ரன் கேட்டான்.

“அது இளந்திரையனுக்கும் எனக்கும் உள்ள பந் தம். அவனோடு பழகிய 30 வருட வாழ்க்கையில்

அந்த விடை உள்ளது.” பேராசிரியர் கண் கலங்கினார்.

"பேராசிரியரே என்ன சினிமா மாதிரி செண்டிமென்ட்க்கு போறீங்க?" நந்தா கிண்டலுடன் கேட்டான்.

"உனக்கு சங்க கால அரசன் இளந்திரையன் யார்னு தெரியுமா?" பேராசியர் ஒருமையில் சீறினார்.

இதை எதிர்பார்க்காத நந்தா "இளந்திரையன்...ன்...ன் என் முப்பாட்டன். தமிழ் நிலத்தை கட்டி ஆண்ட பேரரசன்" நெளிந்தான்.

"சமாளிக்காதே நந்தா. இளந்திரையன் சேரனா, சோழனா, பாண்டியனா?" பேராசிரயர் கேட்டார்.

"சேரன்.. இல்லை பாண்டியன்... பாண்டியன் இளந்திரையன் பொருத்தமாக இல்லையே. சோழனோ?" நந்தா உளறினான்.

“தொண்டைமான் இளந்திரையன். பல்லவ அரசின் முதல் அரசன்" சிறிது இடைவெளி விட்டு மீண்டும் ஆரம்பித்தார்.

"சோழ இளவரசன் கிள்ளிவளவன் என்பவன் சுற்றிப் பார்ப்பதற்காக மணிபல்லவத் தீவிற்குச் சென்றான். அங்கு நாகர் குல கன்னியான பீலிவளை என்பவளைக் கண்டு காதல் கொண்டு திருமணம் செய்தான். அவளை அங்கேயே விட்டுவிட்டு சோழ தேசம் திரும்பினான். பீலிவளைக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையைத் தீவில் இருந்த தொண்டைக் கொடியில் சுற்றி, கப்பலில் வந்த வியாபாரிகளிடம் சோழ மன்னனிடம் சேர்க்கும்படி கூறினாள். புயலில் சிக்கிய கப்பல் உடைந்துவிட்டது. தொண்டைக் கொடியில் சுற்றிய நாகர் குலக் குழந்தை மிதந்துக் கரையேறியது. அந்த

இடம் தான் நாகப்பட்டினம். திரைக்கடல் திரையில் (அலையில்) தொண்டைக் கொடியோடு மிதந்து வந்த குழந்தை என்பதால் தொண்டைமான் இளந் திரையன் எனப் பெயர் பெற்றான்.

அவனுக்குத் தனது இராஜ்ஜியத்தைப் பிரித்து ஒரு பகுதியை அளித்தார் சோழ அரசர் கிள்ளி வளவன். அவன், தான் பிறந்த மணி பல்லவத் தீவின் நினை வாக பல்லவ அரசை காஞ்சியை தலைநகராகக் கொண்டு நிர்மாணித்தான். அதேபோல இலங்கை யில் இருந்து நாகப்பட்டினம் வந்த இன்னொரு இளவரசன் தான் இளந்திரையன். எங்கள் இருவ ருக்குமே இது நெகிழ்ச்சி அளிக்கக்கூடிய உணர் வுப் பூர்வமான கதை. மணிபல்லவத் தீவு எங்களின் உணர்வுப் பூர்வமான தீவு."

பேராசிரியரை இயல்பு நிலைக்குக் கொண்டு வரும் பொருட்டு விபுலேந்திரன் பேச்சை மாற்றினான்.

"Conch of wise man என்றால் அறிவாளியின் சங்கு?"

"Wise man'னா அறிவாளி, புத்திசாலி. அதாவது புத் தர். சங்கு என்பது புத்த மதத்தின் 8 புனித அடையா ளங்களில் ஒன்று.
புத்த மதத்தில் எட்டு அடையாளங்களை நற்சகுன மாக கருதுவாங்க.
1.சங்கு
2. சக்கரம் (தர்ம சக்கரம்)
3. கொடிமரம்
4. தாமரை
5. பூரண கும்பம்
6. இரட்டை தங்க மீன்கள்
7. பொற்குடை

8. முடிவில்லா முடிச்சு யந்திரம்.” ஜெயச்சந்திரன் விளக்கினார்.

"என்ன பேராசிரியரே முப்பாட்டன் மாயோனின் பெருமாள் கோவிலில் இருக்கிற எல்லாத்தையும் நீங்க புத்த அடையாளம்னு சொல்றீங்க?" நந்தா ஆச்சரியமாக கேட்டான்.

"ஏற்கனவே விஷ்ணு கோவில் எல்லாம் புத்த விகார் தான் என பெரிய பிரச்சனை போகுது. புத்த மத இராஜபக்சே கூட அடிக்கடி திருப்பதி வர்றார். ஆனால் அதைப்பற்றி கருத்து சொல்ல பெரிய ஆராய்ச்சியறிவு வேண்டும். அது என்கிட்ட இல்லை. எனக்கு தெரிஞ்சதைப் பற்றி நான் சொல் றேன். புத்த மதத்தில் எட்டு நற்சகுன அடையாளம் இருக்கு. அதுல முக்கியமானது சங்கு. பல இடங்க ளில் புத்த விகாரங்களே சங்கு வடிவில் தான் கட் டப்படும்."

"அப்ப conch of wise man'னா புத்த விகாரையை குறிக்கிறதா?"

"ஆமா. மணிபல்லவ தீவு என்கிற நாகதீவு என்கிற நயினா தீவின் புத்த விகாரையை குறிக்கும் சொற் றொடர் தான் இது."

"நயினா தீவில் புத்த விகாரை இருக்கா?" நந்தா கேட்டான்.

"நாகதீப புராண இரஜ மகா விகாரை ரொம்ப புகழ் வாய்ந்தது. புத்தர் அங்க நேரடியா வந்தார்னு இலங்கை புத்த மத குருக்கள் நம்புறாங்க. அவங் களோட புனிதமான ’16 சொலஸ்மஸ்தான' இடங் களில் நயினா தீவும் ஒன்று. ஒரு முறை புத்தமதத் தைச் சேர்ந்த இரண்டு நாகர் அரசர்களுக்கிடையே சண்டை வந்த போது புத்தர் நேரடியாக இந்த நாக தீபத்திற்கு வந்து சமானாதம் செய்து வைத்தார்

என்பதும் அவர்கள் நம்பிக்கை. அந்த விகாரையும் சங்கு வடிவில் தான் இருக்கும்."

"ஆக, இளந்திரையன் நயினாத் தீவு விகாரையைத் தான் மாயப்பெருநிலம் எனச் சொல்றார். ஆனால் அதை வச்சு எப்படி பின் நம்பர் கண்டுபிடிக்கிறது?" விபுலேந்திரன் கேட்டான்.

பேராசிரியர் புன் சிரிப்பை உதிர்த்தார். "இளந்திரை யனுக்கு ஒரு பழக்கம் உள்ளது. எந்த இடமென்றா லும் அதன் longitude latitude எண்களைத் தான் குறிப்பான். எனக்கு சான் பிரான்சிஸ்கோ நகரில் இருந்து கடிதம் எழுதும் போது கூட அவனது வீட் டின் longitude latitude எண்களைத் தான் குறிப் பிடுவான். இந்த அட்சரேகை தீர்க்க ரேகையின் 'டிகிரி, நிமிட' எண்களைச் சேர்த்தால் எட்டு இலக் கம் வரும். நயினா புத்த விகாரையின் இந்த எண் களைக் கண்டுபிடித்தால் அது தான் எட்டு இலக்க பின்நம்பர்." பேராசியர் வெற்றிப் புன்னகை பூத்தார்.

அவர் கூறி முடிப்பதற்குள் மடிக்கணினி முன் அமர்ந்திருந்த விபுலேந்திரன் கத்தினான் "0961 7977"

அத்தியாயம் - 31

ஆல்டோ கார் ஒத்தக்கடை காவல்நிலையத்தை அடைவதற்கு முன் கோபிநாத் நிறைய விவரங்க ளைச் சேகரித்துவிட்டிருந்தார்.

"உளவுத்துறையில் ஆடிட்டர் நந்தா கோப்புகளை நிர்வகிக்கிறவர் மிஸ்டர் பூபதி. என்னுடைய நெருங் கிய நண்பர். இணையப் பத்திரிக்கைகளில் நந்தா பற்றி ஒரு பெட்டிச் செய்தி வந்தால் கூட ஸ்கிரீன் ஷாட் எடுத்து சேமித்து வைத்திருக்கிறார். நமக்கு தேவைப்படும் விவரங்களை அனுப்பி வைத்திருக் கிறார் சார்."

"நந்தா எங்க இருக்கார்னு தெரிஞ்சுதா?"

"அவர் வெளிநாடு போறதா பிரஸ் கிட்ட இன்ஃ பார்ம் பண்ணிருக்காங்க. ஆனா வெளிநாடு போகல, இங்க தான் இருக்கார். Unknown location."

"மெசேஜ் அனுப்பின வெள்ளை நிற இன்னோவா கார் பற்றி எதாவது தகவல் கிடைத்ததா, அவரோ டதா?"

"நீல நிற வில் அம்பு, தமிழர் சுதந்திர நலவாழ்வுக் கட்சியின் சின்னம். நந்தாவிடம் மொத்தம் நான்கு கார்கள் உள்ளன. அவர் எப்போதும் பயன்படுத்து வது கருப்பு நிற ஸ்கார்பியோ. வெள்ளை நிற இன் னோவா வைத்திருக்கிறார். ஆனால் அதை அடிக்

கடி பயன்படுத்த மாட்டார். அவர் மனைவி தூரப் பயணங்களுக்கு செல்லும் போது மட்டும் எடுத்துச் செல்வாராம். அதன் பின்புறம் நீலநிற வில் அம்பு ஸ்டிக்கர் ஒட்டியிருக்கும்."

"அந்த இன்னோவா எங்க இருக்குன்னு ஏதாவது தகவல்?"

"அந்த வண்டியோட எண் TN 09 AD ****. கடந்த 24 மணி நேரத்தில் அந்த வண்டி கிராஸ் பண்ணிய டோல்கேட் லிஸ்ட் இது. இதை நல்லா பார்த்தீங் கன்னா நமக்கு சில விசயம் தெளிவாகும்." வரை படத்தை எடுத்து மேசை மீது வைத்தார். விரலை வைத்து வரைபடத்தில் வரையப்பட்டிருந்த சிவப்பு கோடை பின்பற்றிக் கொண்டே விளக்கினார்.

"இன்று காலையில் மதுரை - இராமநாதபுரம் சாலையில் திருப்பாச்சேத்தி டோல்கேட்டை கடந் துள்ளது. பிறகு போகலூர். மீண்டும் மதியம் அதே வழியில் திரும்ப வந்து போகலூர், திருப்பாச்சேத்தி டோல்கேட்டை கடந்துள்ளது. அதன்பிறகு மதுரை மேலூர் சாலையில் சிட்டம்பட்டியை மாலை யில் கடந்துள்ளது. பிறகு மதுரை புதுக்கோட்டை சாலையில் செண்பகம்பட்டி, லெம்பலக்குடி வரை வந்துள்ளது. அதன் பிறகு வேற எந்த டோல் கேட்டையும் கடக்கவில்லை." விரலை வரைபடத் தில் இருந்து பெருமூச்சுடன் நிமிர்தார். பிறகு ஒரு கீரனூர் கந்தர்வகோட்டை புதுக்கோட்டை மூன்று புள்ளிகளை இணைத்து ஒரு முக்கோணம் வரைந் தார்.

"என்னுடைய கணிப்புப் படி இந்த முக்கோணத்திற் குள் தான் கார் இருக்க வேண்டும்."

"ஏனென்றால் புதுக்கோட்டைக்குப் பிறகு இரண்டு பாதை. ஒன்னு திருச்சி போற பாதை, இன் னொன்னு தஞ்சாவூர் போற பாதை. இரண்டிலுமே டோல் இருக்கு. லெட்சுமணப்பட்டி, பழைய கந் தவக்கோட்டை. ஆனா இரண்டு டோல்கேட்டை யும் இந்தக் கார் தாண்டவில்லை." கோபிநாத் கூறி முடித்த பின் ஆல்டோ வரைபடத்தை கையில் எடுத்துப் பார்த்தான்.

"மூன்று பக்கமும் 30*30*30* கி.மீ முக்கோணம். இதுக்குள்ள எங்க போய் அந்த இன்னோவாவை தேடுறது?" ஆல்டோ சோர்வடைந்தான்.

"ஒரு க்ளூ கிடைச்சிருக்கு சார். இந்த ஏரியா வைப் பற்றி உளவுத் துறை பூபதி கிட்ட விசாரிச் சேன். அவர் ஒரு முக்கியமான விசயம் சொன்னார். இரண்டு வருடத்துக்கு முன் நந்தா தனது மனைவி பெயரில் தென்னந்தோப்பு ஒன்றை மனைவி யின் சொந்த ஊரில் வாங்கியுள்ளார். அந்த தோப்பு இருக்குமிடம்..." சிவப்பு நிறப் பேனாவால் நார்த்தா மலையில் புள்ளி வைத்தார்.

ஆல்டோ குழுவினர் நார்த்தமலையை அடையும் போது இருட்டு அடர்த்தியாகி இருந்தது. வானில் விண்மீன்கள் கூட இல்லை. சுற்றிலும் தெருவி ளக்கு கூட இல்லாத பகுதியில் தென்னந்தோப்பு இருந்தது. அதன் நடுவில் இருந்த வீட்டில் மட் டும் வெளிச்சம் தெரிந்தது. வீட்டின் வாசலில் வெள் ளைநிற இன்னோவோ.

தோப்பில் நாய் இருப்பதற்கான அறிகுறி தெரிகி றதா எனப் பார்த்துவிட்டு ஒவ்வொருவராக சத்தம் எழுப்பாமல் முட்கம்பி வேலியைத் தாண்டிக் குதித் தனர். இருட்டில் அரவம் தெரியாமல் அந்த வீட் டைச் சுற்றி வளைத்தனர். காருக்குள் ஒருவன் உறங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது.

ஆல்டோ பூனை போல, சத்தம் எழுப்பாமல் பதுங் கிப் பதுங்கி வீட்டின் அருகேச் சென்றான். உள்ளே கண்ணாடி நொறுங்கும் சத்தம் கேட்டது. வெளிச் சம் தெரிந்த அறையின் திறந்திருந்த ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தான். உள்ளே இருந்த மூவ ரின் புகைப்படங்களையும் ஆல்டோ ஏற்கனவே பார்த்திருந்ததால் அடையாளம் காண்பதில் குழப் பம் ஏதும் ஏற்படவில்லை. ஆல்டோ கையைக் காட்டியவுடன் கோபி மின்சார சப்ளையின் பிரதான சுவிட்சை கீழே இறக்கி அணைத்தார்.

அத்தியாயம் - 32

விபுலேந்திரன் மடிக்கணியின் TOR மென்பொருளில் இயக்கத்தினுடைய பிட்காயின் மறைநாணய பணப்பை(cryptocurrency wallet) கணக்கில் உள்நுழைந்தான். அனைத்து மறைநாணயங்களையும் பிரிட்டிஷ் விர்ஜின் தீவின் வங்கிக் கணக்கிற்கு மாற்றும் படி உத்தரவிட்டான். அந்தக் கணக்கு பணப்பரிமாற்ற எண்ணை உள்ளிடும்படி கூறியது.
0...9....6...1....7...9...7....7.

மறைநாணயப் பணப்பை மென்பொருள் மீது ஒரு சிறிய பற்சக்கரம் தோன்றி வட்டமாக சுழன்றது. மூவரும் சிறதும் சலனமின்றி திரையையே பார்த்தனர். நந்தாவின் இதயம் துடிப்பது அவனது காதில் கேட்டது. சும்மாவா 20000 கோடி. நூறு ஜென்மம் உழைத்தாலும் சம்பாரிக்க முடியாது.

முப்பது நொடிகளுக்குப் பிறகு "Wrong PIN. You have 2 attempts left"

நந்தாவுக்கு உதடு துடித்தது. இரண்டு வருடம்..... இரண்டு வருடம் இந்த நொடிக்காகத்தானே பல லட்சம் ரூபாய் செலவு செய்து பல ஆபத்துகளைத் தாண்டி வந்தோம். அவனுக்கு தன்மீதே முதலில் இரக்கம் தோன்றியது. சில விநாடிகளில் இரக்கம் கோபமாக மாறியது. அருகில் இருந்த கண்ணாடி டீப்பாயின் மேல் ஓங்கிக் குத்தினான். பெரிதாக சத்

தம் எழுப்பாமல் சல்லி சல்லியாக நொறுங்கியது. ஏற்றிச் சீவியிருந்த தலைமுடி நெற்றியில் கலைந்து விழுந்து விகாரமாக இருந்தது.

விபுலேந்திரனைப் பார்த்தான். அவன் முகம் குழப் பத்தைக் காட்டுவது போல் இருந்தது. அவன் முகத்தைப் பார்க்கப் பார்க்க கோபம் அதிகமானது.

இடுப்பில் இருந்த கைத்துப்பாகக்கியை எடுத்து விபுலேந்திரனைக் குறி வைத்தான் “விபுலேந் திரா, மத்தவங்களை ஏமாற்றிய மாதிரி, என்னையும் ஏமாற்ற நினைக்காதே.”
அதற்குள் விபுலேந்திரன் கைகளிலும் துப்பாக்கி வந்திருந்தது, “அவசரப் பட வேண்டாம் நந்தா, எல்லாமே வீணாகி விடும்”
பேராசிரியர் அறையின் மூலையில் ஒடுங்கினார்.

அடுத்து என்ன செய்ய வேண்டும் என நந்தா யோசிக்கும் முன் மின்சாரம் அணைந்தது. மொத்த வீடும் இருளில் மூழ்கியது.

தட தடவென பலரும் உள்நுழையும் சத்தம் கேட் டது. இருள் இன்னும் கண்களுக்குப் பழகவில்லை. மீண்டும் அந்த வீட்டிற்கு மின் இணைப்பு வந்த போது ஒரே ஒரு டீப்பாய் சேதாரத்தில் நந்தா, விபு லேந்திரன், முருகன் ஆகிய மூவரும் கைது செய் யப்பட்டிருந்தனர்.

பேராசிரியரை பாதிப்பின்றி மீட்டு விட்டச் செய் தியை மகிழ்வுடன் இயக்குனர் அருள்மொழியிடம் பகிர்ந்து கொண்டிருந்தான் கார்த்திக் ஆல்டோ.

அத்தியாயம் -33

வெள்ளை நிற ஸ்விஃப்ட் கார் திருவாரூர் கும் பகோணம் சாலையில் சிமிழிக்கு சற்று முன்னர் வலது புறம் திரும்பி ஆற்று வாய்க்கால் பாலங் களைக் கடந்து திருத்தலையாலங்காடு என்ற ஊரின் ஆடவல்லநாதர் கோவில் குளத்திற்கு முன் நின்றது. பேராசிரியர் ஜெயச்சந்திரன், அமெரிக் கன் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் அலெக்ஸு டன் இறங்கினார்.

கோவிலுக்குள் சென்ற ஜெயச்சந்தி ரன் கருவறையின் அருகில் இருந்த ஆடவல்லநா தர் கல்வெட்டுக்களை நெடுநேரம் உற்றுப் பார்த் தார். பிறகு கோவில் வாசலில் இருந்த மண்டபத் தில் குளத்தைப் பார்த்தவாறு இருவரும் அமர்ந் தனர். ஜெயச்சந்திரன் தீவிரமாக யோசித்துக் கொண்டே இருந்தார்.

“ஜே.சி, அவனுங்ககிட்ட இருந்து நீ தப்பிச்சுட்ட அதுவே போதும். பணத்தை 2 வருசம் கழிச்சு கூட எடுத்துக்கலாம்.” அலெக்ஸ் தான் ஆரம்பித்தார்.

“அலெக்ஸ், விபுலேந்திரன் விரிச்ச வலையில் கிட்டத்தட்ட நான் விழுந்துட்டேன். சேட்டலைட் போனில் பேசும் போது, “ரெண்டு” தான் பேசுறார்னு ஏமாந்திட்டேன். ஆனால் ஒரு சின்ன சந்தேகம் இருந்திட்டே வந்தது.”

“பிறகு எப்படி அவனுங்க ஏமாத்துறானுங்கன்னு கண்டுபிடிச்ச?”

“அந்த சேட்டிலைட் ஃபோனை இயக்கத்துக்காக நான் தான் வாங்கினேன். போருக்குப் பிறகு எல் லாமே ஆமிக்காரன்கிட்ட சிக்கிடுச்சு. அதை அவ னுங்க நுவரேலியா ஆவணக் காப்பகத்தில் வச் சிருந்தானுங்க. ஆறு மாதம் முன்னாடி அதில் இரண்டு போன்கள் காணாமல் போய்டுச்சு. பிபிசி தமிழில் கூட செய்தி வந்தது. தூங்கி எழுந்த வுடன் மயக்க மருந்தோட கலக்கத்தில் இருந்த தால உடனே நினைவுக்கு வரல. ஆனால் கொஞ்ச நேரம் கழிச்சு நினைவுக்கு வந்துருச்சு. லேப்டாப் பில் அந்த செய்தியைத் தேடி உறுதிப் படுத்திட் டேன். அப்பவே முடிவு பண்ணிட்டேன். போலீஸ் வற்ர வரை இவனுங்களை சுத்தலில் விட வேண் டும், அப்ப தான் தப்பிக்க முடியும்னு. ஏன்னா செல் வராசாவை இதுக்காகவே கொன்னவனுங்க இவ னுங்க.”

“அப்ப அந்த மாயப் பெருநிலம் எதுன்னு உனக்கு தெரியுமா?”

"இளந்திரையன் சொன்ன குறிச்சொல் - Food givers, lifer givers, Outer CD 19, Conch of Wiseman"

இப்ப நான் சொல்றதை கவனமா கேளு.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' எனும் வாக்கியம் மணிமேகலையில் வரும். ஆனால் அதே வாக்கியம் வேறு ஒரு சங்க இலக்கி யத்திலும் வருது.”

“ஆமா. புறநானூறின் 18ஆம் பாடல். முழங்கு முந்நீர் முழுவதும் எனத் தொடங்கும் பாடல், குடபுலவிய

னார் எழுதினது. அதுலயும் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே வரி வரும்.” அலெக்ஸ் கூறினார்.

“CD - ரோமானிய எண்ணிற்கு 400 என்று அர்த்தம். Outer CD 19 - புறநானூற்றின் 19ஆம் பாடல். அதை எழுதியவரும் குடபுலவியனார் தான்.”

"இமிழ்கடல் வளை இய பாடல். வாகைத் திணை. பாடப்பட்டவன் தலையாலங்கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன். எழு வரை வென்ற ஒருவன். மாபெரும் வீரன். அவன் செய்த தலையானங்கானம் போரைப் பற்றிப் பாடும் பாடல்.” அலெக்ஸ் ஆமோதித்தார்.

"ஆமாம். அதே பாடல் தான். அது நிறையப் பேருக்கு தெரியும். ஆனா பலருக்கும் தெரியாத இன்னொரு விசயம் இருக்கு. அந்தப் போர் நடந்த தலையாலங்கானம் என்ற ஊரின் தற்போதைய பெயர் தலையாலங்காடு அல்லது திருத்தலையாலங்காடு."

அலெக்ஸுக்கு சிறிது நேரம் பேச்சு வரவில்லை, "தலையாலங்கானம், இப்ப நம்ம இருக்க இந்த ஊரா?"

"இதே ஊர் தான். அதோ அங்க தெரியுது பார். அந்த இடத்தை இப்பவும் பாண்டிய மேடுன்னு தான் இந்த ஊர்க்காரங்க சொல்றாங்க." தூரத்தில் இருந்த ஒரு பொட்டல்வெளியைக் கைகாட்டினார். “இளந்திரையனும் நானும் நிறைய தடவை இங்க வந்துருக்கோம். இங்க வரும் போதெல்லாம் போரின் கொடுமைகளைப் பற்றித் தான் பேசுவான்.”

"ஆனா conch of wiseman அப்படின்னா புத்தரின் சங்கு இல்லையா? இந்த ஊர்ல புத்தர் கோவில் இருக்க அடையாளமே இல்லயே."

"அந்த சந்தேகத்தை நிவர்த்தி பண்ண தான் இங்க வந்திருக்கோம். இப்ப நான் சொல்றதை கவனமா கேளு அலெக்ஸ்.

புத்த மதத்தில் அவலோகிதர் என்ற போதி சத்து வர் உள்ளார். அவரை அறிவு, ஞானத்தின் தெய்வ மாக புத்த மதத்தினர் வணங்குகிறார்கள். தெற்கில் உள்ள போதாலோகம் எனும் மலையில் வாழ்வ தாக நம்புகின்றனர். இந்த தென்திசை போதா லோகம், பொதிகை மலை என்றும் அகத்தியருக்கு இலக்கணம் கற்றுக் கொடுத்தவர் இந்த அவலோ கிதர் தான் என்றும் வீர சோழியம் தமிழ் இலக்கண நூல் கூறுகிறது.

ஆனால் சைவ நூல்கள் தட்சிணாமூர்த்தி எனும் தெய்வம் அகத்தியருக்கு தமிழ் கற்றுத் தந்தது என் கின்றன. அதாவது தட்சிணா மூர்த்தி எனும் சைவ மத தென்திசை தெய்வத்தின் புத்த மத வடிவமாக இந்த அவலோகிதரைப் பார்க்கலாம். இந்த இரு தெய்வங்களுமே அறியாமையை ஒழித்து அறிவைப் புகட்டுவதாக உருவகப் படுத்தப்படுகின்றன."

"ஆனா இந்தக் கோவில் தட்சிணாமூர்த்தி கோவில் இல்லையே. ஆடவல்லநாதர் ஆலயம் என்று இருக்கே?"

"ஆடவல்லநாதர், முயலகன் மீது நடனம் ஆடுவதா கக் குறிப்பிடுறாங்க. தல புராணமும் அதைத் தான் சொல்லுது. முயலகன் அறியாமையின் உருவகம். அதே முயலகன் தான் தட்சிணாமூர்த்தியின் கீழும் இருப்பான்."

"அதாவது இந்த தெய்வமும் அவலோகிதர் போல அறிவுக்கான தெய்வம்னு சொல்ற?"

“ஆமா. இந்த ஊரின் பெயரைப் பாரேன். தலை-ஆலங்-கானம் - ஆல மரம் நிறைந்த காடு. இப்ப இருக்க பேர் கூட தலை-ஆலங்-காடு. தட்சிணா மூர்த்தியும், அவலோகிதரும் ஆல மரத்திற்குக் கீழ தான் இருப்பாங்க. புத்தருக்கு போதி மரம் போல.”

“Unimaginable” அலெக்ஸ் ஆச்சரியத்தில் மூழ்கி னார்.

"அதைவிட முக்கியமான விடயம் கோவில் முன் உள்ள இந்தக்குளம். இதன் பெயர் சங்குத் தீர்த் தம்."

“Conch of wiseman“ அலெக்ஸ் வாயில் இருந்து தன்னால் வார்த்தைகள் வந்தன.

“நம்ம தேடி வந்த மாயப் பெருநிலம்.” தன் முன்னால் இருந்த குளத்தைக் பேராசிரியர் ஜெயச்சந்திரன்.

தொலைவில் கடுவாய் நதி பாலத்தில் கார்த்திக் ஆல்டோவின் கார் திரும்பிச் செல்வதை அவர் கவ னிக்கத் தவறவில்லை.

◆ ◆ ◆

தலையாலங்காடு சங்கு தீர்த்தக் குளம் முன்பு தான் எடுத்த செல்பியின் அழகை இரசித்த படி கார்த்திக் ஆல்டோ இயக்குநர் அருள்மொழிக்கு கால் செய் தான்.

“சார், நமக்கு வந்த இன்ஸ்ட்ரக்சன் படி விபத்து ஏற்படுத்திய டிரைவரைக் கண்டுபிடிச்சாச்சு. நம்ம வந்த வேலை முடிஞ்சுருச்சு. இனி நாகப்பட்டினம் போலீஸ் பார்த்துக்குவாங்க. நாங்க கிளம்புறோம் சார்.”

திருநாவுக்கரசு, கோபியை அழைத்துக் கொண்டு கிழக்குக் கடற்கரையோரமாகக் கார்த்திக் ஆல் டோவின் பயணம் தொடர்ந்தது.

◆ ◆ ◆

பின்கதை

தடை செய்யப்பட்ட இயக்கங்களின் பெரும் பணத் தைப் பெற்றுத் தருவதாகக் கூறி சிலர், முக்கி யப் புள்ளிகளை ஏமாற்றுவதாகவும், அப்படி யாரும் ஏமாற வேண்டாம் எனவும், சட்டத்திற்குப் புறம்பான காரியங்களில் ஈடுபட வேண்டாம் என்றும் காவல் துறை தலைமை இயக்குனர் அறிக்கை வாயிலாக கேட்டுக்கொண்டார். மேலும் காரைக்கால் ஆளு நரின் காரை இடித்த குற்றவாளிகளை விரைந்து செயல்பட்டு கைது செய்து, கடத்தப்பட்ட பேராசி ரியரை மீட்ட கார்த்திக் ஆல்டோ குழுவினருக்குப் பாராட்டுகளைத் தெரிவித்தார்.

சில நாட்களுக்குப் பிறகு பேராசிரியர் ஜெயச்சந்தி ரன் தொடங்கிய “இளந்திரையன் தொண்டு நிறு வனம்” சார்பில் தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் பெரும் எண்ணிக்கையில் பள்ளிகள் ஆரம்பிக்கப் பட்டன. அங்கு படிக்கும் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு வழங்கப்பட்டது. அவரது தொண்டு நிறுவனத்தின் நிதி ஆதாரம் குறித்து விசாரனை நடத்தப்படும் என மத்திய நிதி அமைச்சர் தெரி வித்தார்.

ஆடிட்டர் நந்தாவும் விபுலேந்திரனும் தேசிய பாது காப்புச் சட்டத்தின் கீழ் கடலூர் சிறையில் அடைக் கப்பட்டனர். இது அரசியல் பழிவாங்கும் நடவ டிக்கை என்றும் விரைவில் விடுதலையாகி தமிழ் மக்களின் நலனுக்காக பாடுபடப்போவதாக நந்தா

கூறினார். மேலும் வழக்கு செலவிற்கு நிதி வழங்கு மாறு தொண்டர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

தனது வாகனத்தின் கண்ணாடியைச் சரிசெய்ய செலவான ரூபாய் இரண்டாயிரத்தை குற்றவாளி களிடம் இருந்து வசூலித்துத் தரும்படி உச்ச நீதி மன்றத்தில் காரைக்கால் கவர்னர் மனு தாக் கல் செய்துள்ளார். மேலும் எதிர்காலத்தில் இது போன்ற அசம்பாவிதங்களைத் தவிர்க்க தனக்கு Z பிரிவு பாதுகாப்பு வழங்க வேண்டுமென பிரதமரிடம் கோரிக்கை வைத்துள்ளார். இதற்காக தனி விமா னத்தில் புதுதில்லி கிளம்பிச் சென்றார்.

செய்திகளைப் பார்த்துக் கொண்டிருந்த கார்த்திக் ஆல்டோ வாட்ஸ் ஆப்பில் வந்த குறுஞ்செய்தியால் அதிர்ச்சி அடைந்தான்.

“ஹாய், ஐ யாம் இமயவரம்பி. கார்த்திக் ஆல்டோ வின் காதலி.”

◆ ◆ ◆